
அத்தியாயம் - 1

# உள்ளம் ரெண்டும் ஒன்று

அதற்குமேல் மறைத்து வைப்பது புத்திசாலித்தனமில்லை என்று கதிரவனை ரிலீஸ் செய்தன மழைமேகங்கள். அப்படியும் காற்றில் சிலுசிலுப்பு இருந்தது.

டேப்பில் சுப்ரபாதம் கசிந்துக் கொண்டிருக்க... சாம்பிராணியின் மெல்லிய நறுமணம் வீட்டில் இண்டு இடுக்கு விடாமல் நுழைந்துக் கொண்டிருந்தது. மாதுரி பூஜையறையில் ஏதோ வேலையாக இருந்தாள்.





"அம்மா... பூ..." வாசலில் வழக்கமாய் குரல் கொடுக்கும் பூக்காரி வேம்புவின் அழைப்பு கேட்டது.

மாதுரி எழ முற்பட... விக்ரமன் தடுத்தார்.

"இரு... நான் போய் வாங்கிட்டு வர்றேன்!"

நிமிடத்தில் பெரிய பந்தாய் வாங்கி வந்த கதம்பத்தை மாதுரியிடம் கொடுத்தார்.

"நான் ஹெல்ப் பண்ணட்டுமா மாது?"

"இன்னைக்கு ஒரு நாள் தானே... இன்னைக்கு முழுக்க வீட்டு வேலை அத்தனையும் நான் தான் செய்வேன். நீங்க ஒரு மூலையிலேப் போய் உக்காருங்க!" என்றாள் மாதுரி சிரித்துக் கொண்டே.

மனைவியை கரிசனமாய் பார்த்தபடி ஹாலுக்குச் சென்று விட்டார்.

"டாடி... எங்கேப் போய்ட்டீங்க? உங்களை தான் தேடிக்கிட்டிருந்தோம்...!" எதிரே வந்தனர் அவர் பெற்ற செல்வங்களான கைலாஷ்"ம், ஷாலினியும்.

"என்னையா? ஏம்பா?"

"பசிக்குது டாடி! காலைலேர்ந்து நீங்க காபிக் கூட தரலே!" என்றாள் ஷாலினி, வயது ஐந்து.

"ஆமா... டாடி... எனக்கும் ரொம்ப பசிக்குது. என் வயத்துல காதுவச்ச கேளுங்களேன். சிறுகுடலும், பெருங்குடலும் சண்டை போடற சத்தமெல்லாம் கேட்கும்!"

கைலாஷ் சொன்னதை கேட்டு வாய் விட்டு சிரித்தார் விக்ரமன்.

"கொஞ்சம் பொறுத்துக்குங்க! அம்மா பூஜை ஆரம்பிச்சிடுவா... அது

-ஆர். மணிமாலா

முடிஞ்சதும் சாப்பிடலாம்!''

''மம்மி அவங்க பாட்டிக்கு பூஜை பண்ணட்டுமே! நாம சாப்பிடலாம். பசிக்குது டாடி!'' சிணுங்கினாள் ஷாலினி.

''இல்லேடா கண்ணு! இன்னைக்கு வரலட்சுமி விரதம். அதனால சாமி கும்பிடறதுக்கு முன்னாடி பச்சைத் தண்ணிகூட பல்லுல படக்கூடாதாம். கும்பிட்ட உடனே சாப்பிடலாம் என்ன?'' என்றார் தாஜாப் பண்ணுவதுப் போல்.

''எல்லாம் குளிக்கிறப்ப தண்ணி பல்லுல பட்டாச்சு. சாப்பிடலாம் வாங்க டாடி!'' அவர் கையைப் பிடித்து கெஞ்சினான் கைலாஷ்.

''கொஞ்ச நேரம் பொறுத்துக்க கூடாதா கைலாஷ்? அம்மா... இதோ... இப்ப பூஜையை ஆரம்பிச்சிடுவா...''

''போங்க டாடி! அம்மா உங்களுக்காக நடத்தற பூஜையிது. எங்களுக்காக ஒண்ணும் நடத்தலியே. நாங்க ஏன் சாப்பிடாம பட்டினி கிடக்கணும்? எங்களுக்கு பசிக்குது... வாங்க!'' கையைப் பிடித்து இழுத்தாள்.

சற்று தூரத்திலிருந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாதுரி அருகே வந்தாள். கணவனை புன்னகையுடன் ஒரு பார்வை பார்த்து விட்டு குழந்தைகளை தன்னருகே இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''பசிக்குதாம்மா?''

இருவரும் தலையாட்டினர்.

''வாங்க சாப்பிடலாம்!''

''என்ன மாது? இன்னும் பூஜையே ஆரம்பிக்கலே?''

''இருக்கட்டுமே! பெரியவங்க விரதமிருக்கிறதிலே ஒரு அர்த்தமிருக்கு. இந்த பூஜை என் எதுக்குன்னு தெரியாம குழந்தைங்களைபட்டினி கிடக்க சொல்லி எந்த தெய்வமும் கட்டளை இடலைங்க. இவங்க பசியோட இருக்க வேண்டாம். வாடா கண்ணா... நான் உங்களுக்கு தோசை வார்த்துத் தர்றேன்!''

''நீங்களா?'' குழந்தைகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஏன்... என்ன?''

''இல்லே... வந்து... உங்களுக்கு தோசை கூட தெரியுமா மம்மி?''

திகைத்துப் போன மாதுரி, ''ஏன் அப்படி கேக்கறே கைலாஷ்?'' என்றாள்.

''இல்லே... எப்பவுமே டாடிதானே எங்களுக்கு தேவையானதை செஞ்சுத் தருவாரு. நீங்க கிச்சன் பக்கமே எட்டிப் பார்க்கறதில்லே. அதனால தான் கேட்டோம்!''

சாட்டையால் விளாசியது போலிருந்தது அந்த வார்த்தை. உற்பத்தியாக முயன்ற கண்ணீரை வரவிடாமல் தடுத்தாள். விக்கிரமன் மனைவியை கண்களாலேயே ஆறுதல் படுத்தினார்.

''அஞ்சறிவுள்ள பறவைகளே தன் குஞ்சுகளுக்கு அலைஞ்சி, திரிஞ்சி இரை தேடி ஊட்டும் போது... ஆறறிவுள்ள மனுஷி, அதுவும் ரெண்டு குழந்தைங்களை பெத்த எனக்கு தெரியாதா என்ன? வாங்க... இன்னைக்கு முழுக்க நான்தான் உங்களுக்கு சமைச்சிப் போட போகிறேன்... வாங்க!'' என்று குழந்தைகளை அழைத்துச் சென்றாள் மாதுரி.

விக்கிரமன் மனைவியை பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மாதுரி... இன்று அலுவலகத்திற்கு லீவு போட்டிருந்தாள். பெரிய கம்பெனியில் அஸிஸ்டண்ட் மானேஜர் பதவி! கைநிறைய சம்பளம்.

விக்கிரமன் வீட்டையும், குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள மாதுரி தடுத்தும் கேளாமல் தான் பார்த்துக் கொண்டிருந்த கிளார்க் உத்தியோகத்தை ராஜினாமா செய்து விட்டார்.

எல்லா வேலைகளையும் முடித்து கொண்டு சோபாவில் அவர் பக்கத்தில் வந்தமர்ந்தாள் மாதுரி. அவன்தோள் மீது அன்போடு கைபோட்டுக் கொண்டாள்.

''முழுசா இருபத்திநாலு மணி நேரம் நாம ஒண்ணா இருக்கிறது அதிசயமாயிடுச்சில்லே?''

''ஆமாங்க... எங்க ஆபீஸ்ல ஸண்டே கூட ஆடிட்டிங், மீட்டிங்னு வரச்சொல்லி உயிரை வாங்கிடறாங்க. ஏதோ... இன்னைக்கு வரலட்சுமி விரதம்னு லீவு எடுத்தேன். இன்னைக்காவது முழுசா உங்களோடயும், குழந்தைகளோடயும் இருந்தேன்ற சந்தோஷம் நெஞ்சு பூரா பரவிக்கிடக்கு!''

''உன் மனசுல உள்ள ஆதங்கம் எனக்குப் புரியாம இல்லே மாது. ஹூம்... எனக்கு மட்டும் அந்த ஃபீலிங் இல்லேன்னா நினைக்கிறே? இந்த கஷ்டமெல்லாம் நம்ம குழந்தைகளுக்காகத் தானேன்னு மனசை ஆறுதல் படுத்திக்கறேன். நான் உன்னை ரொம்ப மிஸ் பண்றேன் மாது!'' என்றார் வருத்தமுடன் விக்கிரமன். அவர் கை மாதுரியின் கையை அழுத்தமாய் பற்றின.

பூமி மனிதர்கள் விழித்து விட்டார்களா என்றறிய கிழக்கு மறைவிலிருந்து எட்டிப் பார்த்தது சூரியன். அதற்கு சலாம் போட்டு இரை தேட கிளம்பிவிட்டன பறவைகள்.

விக்கிரமன் காபியோடு பெட்ரூமிற்குள் நுழைந்தார்.

நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்த மாதுரியை சில கணங்கள் பார்வையால் ஸ்பரிசித்தார்.

அணிந்திருந்த நைட்டி சற்றே மேலேறியிருக்க, கெண்டைக் கால்களின் வழவழப்பில் மெல்லிய கொலுசு சுகமாய் படுத்திருந்தது. தலைக்கடியில் இருந்த தலையணை விலகியிருக்க, தன் கைகளை தலைக்கு தலையணையாக்கி கர்ப்பத்தில் முடங்கியிருக்கும் சிசுவைப் போல் குறுகிப் படுத்திருந்தாள். அவளின் அழகான முகத்தில் குழந்தைத்தனம் இன்னும் மிச்சமிருந்தது. உச்சிவகிட்டில் அமர்ந்திருந்த குங்குமம் தான் அவள் சிறு குழந்தையல்ல என்ற உண்மையைப் போட்டு உடைத்தன.

விக்கிரமன் ஜன்னல் திரைச்சீலைகளை விலக்கினார். காத்திருந்த வெளிச்சம் அறையினுள் குபுக்கென பாய்ந்தது.

காபியை டீபாய் மீது வைத்து விட்டு மாதுரியின் அருகில் அமர்ந்த விக்கிரமன், ஃபேன் காற்றில் முகத்தில் தொட்டு விளையாடிய கேசத்தை காதலாய் ஒதுக்கி விட்டார்.

அந்த ஸ்பரிசத்தில் மாதுரியின் முகத்தில் அசைவுத் தெரிந்தது.

''மாது...''

''ம்...''

''மாது... எந்திரிம்மா!''

''ம்...'' என்று குரல் வந்ததே தவிர கண்களை மட்டும் திறக்கவேயில்லை.

தலையணையின் அடியில் இரண்டு ஃபைல்கள் இருந்தன. அதை எடுத்து பத்திரப்படுத்தி விட்டு மாதுரியின் தலையை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டார்.

''ம்... என்னங்க இது?'' சிணுங்கினாள்.

''நேரமாச்சுடா... எந்திரி!''

''நைட்டு லேட்டாதானே படுத்தேன். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேனே!''

''அதுக்குத்தான்... ஆபீஸ் வேலைய ஆபீஸோட முடிச்சுக்க... வீட்டுக்கெல்லாம் கொண்டு வராதேன்னு சொல்றேன். கேட்டாதானே? ஃபைல் எல்லாம் வீட்டுக்கு கொண்டு வந்து நைட்டெல்லாம் தூங்காம எக்ஸாமுக்கு படிக்கிற மாதிரி கண் விழிச்சிப் பார்க்கிறே! ஓயாம உழைச்சுக்கிட்டிருந்தா... உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்... மாது...!''

எழுந்தமர்ந்த மாதுரி கணவன் தந்த காபியை வாங்கிக் கொண்டு, ''என்னங்க பண்றது? ஆபீஸ்ல வேலை அதிகம். கைநிறைய சம்பளம் தர்றாங்க. அதுக்கேத்த மாதிரி வேலை செய்ய வேணாமா?''

''நீ சொல்றதெல்லாம் சரிதான்! இல்லேங்கலே! ஆனா... இந்த விக்கிரமனுக்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்கும்மா!''

''என்னங்க நீங்க? உங்களை நான் கவனிக்கலேன்னா சொல்றீங்க?''

''இல்லேடா... சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். முதல்ல காபிய குடிச்சிட்டு டம்ளரை குடு. வேலையிருக்கு!''

''நீங்க... ஏங்க எல்லாத்தையும் இழுத்துப் போட்டு கஷ்டப்படணும்? நான் எத்தனையோ முறை சொல்லியாச்சு! துவைக்க, சமைக்க, பெருக்க... ரெண்டு வேலைக்காரியப் போட்டுக்கலாம்னு! கேட்க மாட்டேங்கறீங்களே!'' என்றாள் வருத்தமாய்.

''நம்ம வீட்டு வேலைய நான் செய்யறதுல என்ன தப்பு? என் பொண்டாட்டி, குழந்தைகளுக்காக கஷ்டப்படாம வேற யாருக்காக கஷ்டப்படறதாம்?''

''சமைக்கிறது ஆம்பளைங்க வேலையில்லைங்க!''

''ஓஹோ! நளபாகம்னு சொல்றாங்களே... அந்த நளன் யார் தெரியுமா? ஆம்பளை! ஹோட்டல்ல விதவிதமா மணக்க மணக்க சாப்பிடறோமே... அதை எல்லாம் சமைக்கறதும் ஆம்பளைங்க தாம்மா! அதை ஞாபகம் வைச்சுக்க! நீ மட்டுமென்ன மாது! எத்தனையோ ஆசைகளை கொன்னுட்டு நம்ம குடும்பத்துக்காக உழைக்கிறியே... இந்த அசுர உழைப்பு பெண்களுக்கு சரிப்பட்டு வருமா? மத்த பொண்ணுங்களை மாதிரி, சாவகாசமா எழுந்து, சமைச்சி, பெருக்கி, சாப்பிட்டு டி.வி.யில சீரியல், சினிமான்னு பார்க்க முடியாம, எங்களோட நேரத்தை செலவிட முடியாம கஷ்டப்படறியே மாது...' அதுக்கு முன்னால... என் பிரச்சினை எல்லாம் பிரச்சினையே இல்லே! டம்ளரை குடு! நீ குளிக்க ரெடியாயிரு... குழந்தைங்க குளிச்சிட்டாங்களான்னு பார்த்திட்டு வந்திடறேன்!'' என்று டம்ளரை வாங்கிக் கொண்டு விரைந்தார்.

மாதுரி கணவரை விம்மும் நெஞ்சுடன் பெருமிதமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து வருடம் முன்பு கணவன் மனைவி இருவருமே வேலைக்கு சென்றுக் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட இருவருமே ஒரே சம்பளம் தான் வாங்கினர். அப்போது

கைலாஷிற்கு ஒரு வயது. ஷாலினி கைக்குழந்தை. மாதுரி பதவி உயர்விற்காக எழுதிய தேர்வில் தேர்வு பெற்று உடனடியாக பதவி உயர்வும் மும்மடங்கு சம்பளமும் கிடைக்கவும்... குழந்தைகளை கவனித்துக் கொள்ள ஒரு வயதான மூதாட்டியை நியமித்து விட்டு வேலைக்கு சென்றனர். ஆனால் மூதாட்டியிடம் கைசுத்தமில்லை. ஒவ்வொரு பொருளாக திருடு போனது மட்டுமின்றி... கவனக்குறைவால் கைலாஷ் மாடிப்படியிலிருந்து விழுந்து காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. குழந்தை வலியால் துடித்துப் போனதைப் பார்க்க சகிக்கவில்லை. பிறரை நம்பி இனி வீட்டையும், குழந்தைகளையும் ஒப்படைத்து விட்டுச் செல்வது முட்டாள்தனம் என்று உணர்ந்த தம்பதியர் தீவிரமாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

அதன்படி, யாராவது ஒருவர் வேலையை ரிசைன் செய்து விட்டு வீட்டையும், குழந்தைகளையும் கவனித்துக் கொள்வது என்று!

விக்கிரமனின் சம்பளத்தை மட்டும் வைத்துக் கொண்டு குடும்பம் நடத்துவது சிரமம். கைக்கும், வாய்க்குமே சரியாய்ப் போய்விடும். குழந்தைகளின் எதிர்காலத்திற்காக என்ன சேமிக்க முடியும்? அதனால் விக்கிரமன் தானே வேலையை ரிசைன் பண்ண முடிவு செய்தார்.

மாதுரிக்கு இப்போது தான் பிரமோஷனும் சம்பள உயர்வும் கிடைத்திருக்கு. அவள் வருமானம் தாராளமாய் போதும். மாதுரிக்கு வேலையையும் விட மனசில்லை. அதே சமயம் கணவனை வீட்டோடு முடக்கி வைக்கவும் மனசில்லை. விக்கிரமன் தான் அவளை சமாதானப்படுத்தினார். விக்கிரமனுக்கு பெற்றோர்கள் உயிரோடு இல்லை. மாதுரிக்கு அப்பா மட்டுமே! அவர் மட்டும் என்ன செய்து விட முடியும்? அதனால் மாதுரி பொருளாதாரத்தையும், எதிர்காலத்தையும் நினைத்து சம்மதித்தாள். அன்று முதல் வீட்டு நிர்வாகம், சமையல் உட்பட விக்கிரமன் தான். அதற்காக அவர் எள்ளளவும் மனம் சுருங்கவில்லை.

மில்லினியம் ஆண்டின்

## முதல் சோதனைக் குழாய் குழந்தை



மில்லினியம் ஆண்டின் முதல் குழந்தை பிலிப்பைன்ஸ் நாட்டில் பிறந்தது. ஆனால் மில்லினியம் முதல் சோதனைக்குழாய் குழந்தை எங்கு பிறந்தது தெரியுமா? கல்கத்தாவில், ஜனவரி 1-ந் தேதி காலை 7 மணிக்கு இந்த குழந்தை பிறந்தது.

இந்த குழந்தையின் பெற்றோர் பெயர் பிரபாதேவி - சஜன்ஜா. திருமணம் ஆகி 13 ஆண்டுகள் ஆகியும் இவர்களுக்கு குழந்தை இல்லை. இனி தங்களுக்கு குழந்தையே பிறக்காது என்று முடிவும் கட்டி விட்டனர்.

கல்கத்தாவில் உள்ள சுதர்சன் - காகலி கோஷ் தோஸ்திதார் என்ற டாக்டர் தம்பதி இவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட, சோதனைக் குழாய் குழந்தைக்கு பிரபாதேவி - சஜன்ஜா இருவரும் ஒப்புக் கொண்டனர். அவர்கள் வயிற்றில் பாலை வார்க்கும் விதமாக மில்லினியம் ஆண்டின் முதல் நாளில் முதல் சோதனைக் குழாய் குழந்தையாக, இந்த குழந்தை பிறந்தது.

எல்லை இல்லா ஆனந்தம் கொண்ட பெற்றோர், தங்களது குழந்தைக்கு ஓயிஸ்ஜா என்று பெயரிட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.

பூர்மதி

மாதுரிக்கும், குழந்தைகளுக்கும் டிபன் பரிமாறினார் விக்கிரமன்.

"போதுங்க...!" கைநீட்டி தடுத்தாள் மாதுரி.

"நல்லா சாப்பிடு மாது! ராட்சஷி மாதிரி நீ உழைக்கிற உழைப்புக்கு நல்லா சாப்பிட்டாத்தானே சரியாயிருக்கும். ஷாலினி சீக்கிரம் சாப்பிடு... ஆட்டோ வர்ற நேரமாச்சு"

"நீங்களும் உக்காருங்களேன்... சேர்ந்தே சாப்பிடலாம்!"

"இல்லேம்மா... நீங்கள்லாம் முதல்ல சாப்பிட்டு முடியுங்க. நான் அப்புறம் சாப்பிட்டுக்கறேன். மதியத்துக்கு கேரியர் எடுத்து வச்சிட்டேன். மிச்சம் வைக்காம சாப்பிடணும்... என்ன?"

"அப்படியே ஆகட்டும் சார்!" என்று கிண்டலாய் சொல்லி விட்டு சிரித்தாள் மாதுரி.

"ரொம்பதான் கொழுப்பு ஏறிப்போச்சு உனக்கு!" என்றார் கரண்டியை உயர்த்தி அடிப்பது போல் பாவனை செய்து.

"உங்க சமையலாச்சே... ஏறாம என்ன செய்யும்?" என்று மறுபடி சிரித்தவளுக்கு புரையேறிக் கொண்டது.

விக்கிரமன் அவள் தலையை தட்டிக் கொடுத்து தண்ணீரை புகட்டினார்.

"ஓக்கே... ஐ'ம் ஆல்ரைட்!" என்றாள்.

"டாடி... எங்களுக்கும் டைமாகுது. எங்களையும் கொஞ்சம் கவனிங்க... கொஞ்சம் சாம்பார் விடுங்க!" என்றான் கைலாஷ்.



மாதுரியின் முகத்தில் சட்டென சிரிப்பு காணாமல் போனது. விக்கிரமனுக்கு சங்கடமாகி விட்டது. கைலாஷ் தட்டில் சாம்பார் ஊற்றி விட்டு, சாப்பிடாமல் தட்டில் கோலம் போட்டுக் கொண்டிருந்த ஷாலினிக்கு அவரே ஊட்டி விட்டார்.

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

"டாடி... ஆட்டோ வந்துடுச்சு. நாங்க கிளம்பறோம்..." அவசர அவசரமாய் கையை கழுவி விட்டு வாசலை நோக்கி ஓடினர் இருவரும்.

விக்கிரமன் லன்ச் பேகை எடுத்துக் கொண்டு பின்னேயே ஓடினார்.

ஆட்டோவில் அதை வைத்து விட்டு குழந்தைகளை ஒழுங்காக அமர வைத்தார்.

மாதுரியும் கையைக்கூட கழுவாமல் வாசலுக்கு வந்தாள்.

ஆட்டோ புறப்பட்டது.

குழந்தைகள் அப்பாவிற்கு டாட்டா காட்ட... விக்கிரமனும் டாட்டா காட்டினார்.

மாதுரி தனக்கும் அவர்கள் டாட்டா காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தாள். ஆனால் காட்டவில்லை.

அவள் இடது கை தன்னிச்சையாய் உயர்ந்து அசைய... உதடுகள் "டாட்டா..." என்று முணுமுணுக்க கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள... ஆட்டோ போகும் திசையை ஏக்கமாய் பார்த்தாள் மாதுரி.

## 3

மாதுரி அலுவலகத்திற்குள் நுழையுமுன் வாட்ச்மேன் வணக்கம் சொன்னான். பதிலுக்கு புன்னகையுடன் ஒரு வணக்கத்தை செலுத்தி விட்டு அவசர அவசரமாய் நடந்தாள்.

ரிசப்ஷனில் அட்டெண்டன்ஸில் கையெழுத்துப் போட்டாள்.

"என்ன மேடம்... இன்னைக்கு ஒன் அவர் லேட்டு?" என்றாள் ரிசப்ஷனிஸ்ட் காயத்ரி.

"பஸ் பிரேக் டவுன் காயத்ரி" என்றபடி நகர்ந்தாள்.

தன் காபினுக்குள் நுழைந்துக் கொண்டாள். அவளுக்குப் பக்கத்தில் அபூர்வாவின் காபின் இருந்தது. இருவருக்குமிடையில் சிறு கண்ணாடி தடுப்பு மட்டுமே இருந்தது என்றாலும் இருவரும் பேசிக் கொள்வது தெளிவாக காதில் விழும்.

"என்ன மாதுரி... வீட்லேர்ந்து நடந்தே வர்றியா? லேட்டாயிடுச்சா?"

"இந்த டென்ஷன்தானே வேண்டாங்கறது. ஒரேயடியா ஒரு நாளைக்கு லேட்டா வந்தா... தாக்குவீங்களே"

"ஏன் லேட்?"

"பஸ் பிரேக் டவுன் அபூர்வா. நம்ம ஊர்ல பஸ்ங்கற பேர்ல மாட்டு வண்டிதான் ஓடுது. தகர டப்பாவுக்கு நாலு சக்கரத்தை மாட்டி விட்டுர்றாங்க. அம்பத்தூர்ல இருந்து பாரீஸ் கார்னர் வந்து, அங்கிருந்து இன்னொரு பஸ் பிடிச்சி ஆபீஸ்க்கு வரவேண்டியதாயிருக்கு. நான் என்ன பண்ணட்டும்?"

"எதுக்கு புலம்பறே? பஸ்ஸுதான் தகரடப்பான்னு தெரியுதில்லே? பிறகெதுக்கு அதுல வந்து கஷ்டப்படணும்? ஒரு ஸ்கூட்டியை வாங்கிட்டு ஜம்முனு ஆபீஸ்க்கு வர்றதை விட்டுட்டு..."

"நானா வேண்டாங்கறேன். கேர்லெஸ்ஸா ஓட்டுவேனாம். வேண்டாங்கறார் என் ஹஸ்பண்ட். அவரைப் பொறுத்தவரை நானும் ஒரு குழந்தைதான்."

"இமையிலே வச்சு தாங்கற புருஷன் உனக்கு வாய்ச்சிருக்கார். சந்தோஷப்படு. ஆமாம் இன்னைக்கு நம்ம ஆபீஸ் ஹாட் நியூஸ் என்ன தெரியுமா?"

"என்ன?"

"மேடம்... மானேஜர் உங்களை கூப்பிடறார்" என்று வந்து நின்றான் பியூன் முருகன்.

''இதோ வந்திடறேன்... நீ போ! சொல்லு அபூர்வா. என்ன விஷயம்?''

''அந்த விஷயம் சொல்லத்தான் இந்த அஸிஸ்டண்ட் மானேஜருக்கு அழைப்பு வந்திருக்கு. போ... நீயே தெரிஞ்சுக்குவே.''

''ரொம்பதான் அலட்டறியே'' என்று பொய்யாய் கோபித்து விட்டுச் சென்றாள்.

''மே... ஐ... கமின் சார்!''

''யெஸ்... கமின்!''

''குட்மார்னிங் சார்!''

''வாங்க மாதுரி... உக்காருங்க'' என்ற மானேஜருக்கு ஐம்பது வயதிருக்கும்.

''ஸாரி சார்... இன்னைக்கு ஆபீஸ்க்கு வர கொஞ்சம் லேட்டாயிடுச்சு.''

''இன்னைக்கு லேட்டான மாதிரி... நாளன்னிக்கும் லேட் பண்ணிடாதீங்க'' என்றார் சிரித்தபடி.

புரியாமல் பார்த்தாள்.

''புரியலியா மேடம்? நாளன்னிக்கு கொஞ்சம் சீக்கிரம் வரணும். நாம ஏர்போர்ட் போக வேண்டி இருக்கு.''

''ஏர்போர்ட்டுக்கா? பார்ட்டி வர்றாங்களா சார்?''

''பார்ட்டி இல்லே மிஸஸ் மாதுரி. நம்ம ஆபீஸ்க்கு புது எம்.டி. வர்றார்.''

''புது எம்.டி.யா?''

''ஆமாம். நம்ம ஆபீஸ் எம்.டி. போன மாசம் இறந்துட்டார் அல்லவா? ஆபீஸ் பொறுப்பு அத்தனையும் நம்ம ரெண்டு பேர் தலையிலே விழுந்தது. சுமையை இறக்கி வைக்கிற சந்தர்ப்பம் வந்தாச்சு. இறந்துபோன எம்.டி.யோட ஒன்லி ஒன் சன்... மும்பை பிராஞ்ச்ல இருந்தவர். இப்ப... நம்ம கம்பெனி பொறுப்பை ஏத்துக்க வர்றார். அவரை ரிசீவ் பண்ண நீங்களும், நானும் ஏர்போர்ட் போகணும்.''

''அப்படியா?'' என்று சற்று நேரம் யோசித்தாள்.

''சார்... நாளன்னிக்கு என்னோட கல்யாண நாள். லீவு போடணும்னு நினைச்சேன். ஆனா புது எம்.டி. வர்றப்ப லீவு போடறது சரியாயிருக்காது. பட், கோவிலுக்காவது போய் வரணும். ஆபீஸ் டயத்துக்கு வந்து சேர்ந்திடுவேன். ஏர்போர்ட்டுக்குதான்...''

''ஓக்கே... ஓக்கே மேடம். நான் பார்த்துக்கறேன். புது எம்.டி. எப்படிப்பட்டவர்னு எனக்குத் தெரியாது. ஆபீஸ் டயத்துக்கு வந்திடுங்க.''

மாதுரி வெளியில் வந்தாள்.

''இப்ப விஷயம் என்னன்னு தெரிஞ்சாச்சா?'' என்றாள் அபூர்வா.

''ஆமாம்... இதுக்குத்தான் அப்படி அலட்டிக்கிட்டியா?''

''சரி... அதை விடு. வரப்போற எம்.டி. நிச்சயம் வயசாதான் இருப்பார்.''

''எப்படி சொல்றே?''

''செத்துப் போன எம்.டி.க்கு கல்யாணமாகி பத்து வருஷம் கழிச்சுதான் இவர் பிறந்தாராம்.''

''உனக்கெப்படித் தெரியும்?'' என்றாள் மாதுரி ஆச்சர்யமுடன்.

''எப்படியோ தெரிஞ்சிக்கிட்டேன். கல்யாணமானவர்னு கேள்விப்பட்டேன். ஆனா, ஆள் எப்படியிருப்பார்னுதான் தெரியலே...''

''அந்தக் கவலையெல்லாம் உனக்கெதுக்கு?''

''கவலைப்படாம? இந்த ஆபீசைப்பார். ஒரு மூஞ்சியாவது ஒழுங்கா இருக்கா? சைட்டடிக்கிற மாதிரி ஒரு ஃபிகரும் இல்லையே. வரப்போறவராவது ஹாண்ட்ஸமா இருந்தா... திருவேற்காடு அம்மனுக்கு பதினோரு தேங்காய் உடைப்பேன்''

''கல்யாணமானவ மாதிரியா பேசறே?''

''கல்யாணமான ஆம்பளைங்க மட்டும் சைட்டடிக்கலாம். லேடீஸ்க்கு அந்த உரிமை இல்லையா?''

''அம்மா தாயே... ஆளை விடு... வேலைய கவனி!''

''இன்னும் ஒரே ஒரு விஷயத்தை சொல்லிடறேன். வரப்போற எம்.டி.யோட பேர் என்னன்னு கேக்கலியே.''

''அதான் சொல்லப் போறியே''

''ராகேஷ்! பேரே ஹாண்ட்ஸமா இல்லே?''

''கடவுளே!'' என்று தலையில் கைவைத்துக் கொண்டாள் மாதுரி.

**க**ணவனின் காலில் விழுந்து வணங்கினாள் மாதுரி.

''உன் மனசுப்படி எந்த குறையுமில்லாம எப்பவும் சந்தோஷமா இருக்கணும்'' என்று வாழ்த்தி தோளைப் பிடித்து தூக்கி விட்டார் விக்கிரமன்.

''ஹூம்... என்னென்ன ப்ரோக்ராம் போட்டு வச்சிருந்தோம்? இந்த வருஷமாவது ஆபீஸ்க்கு லீவு போட்டு நம்ம வெட்டிங் அன்னிவர்ஸரியை சந்தோஷமா கொண்டாடணும்னு நினைச்சோம்? குழந்தைகளோட வடபழனி முருகனை தரிசனம் பண்ணிட்டு, ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு, மகாபலிபுரம் போய் ஜாலியா



என்ஜாய் பண்ணிட்டு வீட்டுக்கு திரும்பணும்னு. அத்தனையும் பணால். எம்.டி. ரூபத்துல வில்லன் வந்தாச்சு'' என்றாள் மாதுரி.

''சேச்சே... எம்.டி. என்ன பண்ணுவார்? இப்ப என்ன... அடுத்த வருஷம் எல்லாத்துக்கும் சேர்த்து வச்சு ஃபாரின்ல ஹனிமூன் ட்ரிப் மாதிரி ஏற்பாடு பண்ணிட்டா போச்சு.''

''ம்... ரொம்பதான் ஆசை. கல்யாணமாகி எட்டு வருஷம் முடிஞ்சாச்சு. ஹனிமூன் கொண்டாட ஆசை வந்துடுச்சா?''

''எத்தனை வருஷமானா என்ன? மனசு சந்தோஷமா இளமையா இருக்கிறப்ப.. உடம்புக்கு எப்படி வயசு ஏறும்? நாம நினைச்சா... தினமும் வெட்டிங் அன்னிவர்சரி கொண்டாடலாம். எல்லாத்துக்கும் மனசுதானேக் காரணம்?''

''என் மனசு சந்தோஷமா இல்லையே. நான் உங்க வொய்ஃப். ரெண்டு குழந்தைகளுக்கு அம்மா. இருந்தாலும் இந்த வீட்லே ஒரு பேயிங் கெஸ்டா இருக்கிற மாதிரி ஃபீலிங்.''

''மறந்துடு... சந்தோஷமாயிரு. நல்ல நாளும் அதுவுமா நெர்வஸாகாதே. ஈவினிங் பர்மிஷன் போட்டுட்டு சீக்கிரம் வா. எல்லோரும் பிக்சர் போகலாம். சந்தோஷமா போய் வா'' என்றபடி நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் வைத்தார் விக்கிரமன்.

மாதுரி... கணவனை காதலோடு பார்த்தாள்.

## 4

**அ**ரக்கப் பரக்க அலுவலகத்தினுள் நுழைந்தாள் மாதுரி.

''அபூர்வா... எம்.டி. இன்னும் வரலேயில்லே?''

''நீ வராம எப்படி வருவார்?''

''உன்னைப் போய் கேட்டேனே... என்னை சொல்லணும். மானேஜர் ஏர்போர்ட்டுக்கு போய்ட்டாரில்லே?''

''ம்... கிளம்பிட்டாங்களாம். நம்ம மானேஜர் அப்பப்ப கிரிக்கெட் ரன்னிங் கமெண்ட்ரி மாதிரி போன் பண்ணி இன்னும் பத்து நிமிஷத்துல வந்து சேர்ந்திடுவோம். அஞ்சு நிமிஷத்தில வந்து சேர்ந்திடுவோம்னு சொல்லிட்டிருக்கார்.''

''ஓக்கே... மாலையெல்லாம் ரெடியா இருக்கா?''

''ஏன்... நீ போடப் போறியா?''

''உனக்கு எல்லாமே கிண்டல்தான்'' என்றபடி எம்.டி.யை வரவேற்க... ஏற்பாடுகள் சரியா உள்ளதா என்று கவனிக்க ஆரம்பித்தாள்.

ஆபீஸ் ஸ்டாஃப் அத்தனை பேரும் மாலைகளோடு வாசலில் குழுமியிருந்தனர். மேலும் பத்து நிமிடம் கரைய... ஆபீஸ் வளாகத்தில் இரண்டு கார்கள் நுழைந்தது.

அனைவரும் பரபரப்பாயினர்.

ஒரு காரில் இருந்து இறங்கிய மானேஜர் லோகநாதன் மற்றொரு கார் கதவை பவ்யமாய் திறந்தார்.

சினிமாப் பட கதாநாயகன் போல் செக்கச் செவேல் என்று வாட்டசாட்டமாய் சிரித்த முகத்துடன் இறங்கினான் ராகேஷ்.

அனைவரும் கைதட்டி வரவேற்று வரிசையாய் மாலை போட்டனர் ஆண்கள்.

மானேஜர் ஊழியர்களை அறிமுகப்படுத்த முயன்றபோது தடுத்தான் ராகேஷ்.

''வேண்டாம். நானே ஒவ்வொருத்தர் சீட்டுக்கும் போகிறேன். அவங்களே தங்களை அறிமுகப்படுத்திக்கட்டும்... ஓக்கே.''

''ஓக்கே சார்.''

அறிமுகப்படலம் தொடர்ந்தது.

''ஹலோ...''

''குட்மார்னிங் சார்... நான் வரதன். சீனியர் அக்கவுண்டண்ட்.''

''ஐ'ம் புவனி. ஸ்டெனோகிராபர்.''

ராகேஷ் அவள் கையைப் பற்றி குலுக்கினான்.

பியூன் உள்பட அத்தனை பேரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவன் பாகுபாடின்றி அத்தனைப் பேரின் கைகளையும் பற்றி குலுக்கினான்.

அபூர்வா, மாதுரியிடம் ''சூப்பர் ஃபிகரில்லே?'' என்றாள்.

''சும்மாயிரு... அடுத்து உன்கிட்டேதான் வர்றார்'' என்றாள் அடிக்குரலில்.

''ஹலோ சார், ஐ'ம் அபூர்வா... கம்ப்யூட்டர் ஆபரேட்டர்.''

''வெரிகுட்.'' என்று அவளை ரசித்து விட்டு மாதுரியிடம் வந்தான்.

மாதுரியின் குடும்பப்பாங்கான அழகு அவனை கவர, அணிந்திருந்த குளிர் கண்ணாடியை கழற்றி அவளை பிரமிப்போடு பார்த்தான்.

''வாவ்'' இதயம் விசிலடித்தது.

மாதுரி அந்த பார்வையின் வீச்சை தாங்க மாட்டாமல் தலைகவிழ்ந்தாள்.

''ஹல்லோ...''

''குட்மார்னிங் சார். ஐ'ம் மிஸஸ் மாதுரி. அஸிஸ்டண்ட் மானேஜர்'' என்றாள் மிஸஸ் என்ற வார்த்தைக்கு அழுத்தம் சேர்த்து.

கையை நீட்டினான்.

மாதுரி கைகூப்பி ''வணக்கம்'' சொன்னாள்.

''ஏன்... தொடக்கூடாதா?'' அவளுக்கு மட்டுமே கேட்கும்படி, புன்னகை அகலாமல், பார்வையால் துளைத்தபடி நகர்ந்தான் ராகேஷ்.

உடல் நடுங்கியது மாதுரிக்கு.

**அ**லுவலகத்தில் மதிய உணவு இடைவேளை!

மாதுரியும், அபூர்வாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அபூர்வா பாதி சாப்பாடோடு மூடி வைத்தாள்.

''சாப்பாடே இறங்கலே மாதுரி.''

''ஏன்?''

''மனசு நிறைஞ்சிருக்கிறப்ப எப்படி பசிக்கும்?''

''அப்படியென்ன சந்தோஷம்?''

''நம்ம எம்.டி. வந்ததுதான். ரொம்ப அழகாயிருக்கார் இல்லே? அந்த கண்ணும், சிரிப்பும்... அப்பப்பா...''

'ஏன்... தொடக்கூடாதா?'

மறுபடி மறுபடி அந்த வார்த்தை மண்டைக்குள் எதிரொலித்து புழுவாய் குடைந்தது.

'வந்திருப்பவன் எப்படிப்பட்டவன்? அவன் பேசிய வார்த்தை எவ்வளவு அநாகரீகமானது என்பது படித்த அவனுக்கு தெரியாதா? இப்படி பேசியதால் நான் அவனை மட்டமாய் எடை போடக்கூடும் என்கிற உணர்வு கூடவா இல்லாமல் போகும்? ஒரு வேளை... அவன் சாதாரணமாக பேசியதை நான்தான் தப்பர்த்தம் பண்ணிக் கொள்கிறேனோ? ஒன்றும் புரியவில்லையே.'

தலையை வலித்தது. குழப்பம் சூழ்ந்தது.

சாப்பிடாமல் பாதியிலேயே மூடி வைத்து விட்டாள்.

''என்ன மாதுரி சாப்பிடலே?''

''பிடிக்கலே.''

''ஏன் உனக்கும் எம்.டி.யைப் பார்த்ததுலேர்ந்து மனசு நிறைஞ்சுப் போயிருக்கா?''

''அபூர்வா... உளராதே'' என்றாள் உஷ்ணமாக.

''பி... ஸ்போர்ட்டிவ். ஏன் டென்ஷனாகறே?''

''உனக்கு வயசாச்சேயொழிய புத்தி வளரலே. எல்லாத்தையும் விளையாட்டாகவே நினைச்சு பேசிப் பழகாதே. பின்னாடி ரொம்ப வருத்தப்படுவே.''

''அந்தளவு குழந்தையா நான்?''

''இப்பல்லாம் குழந்தைங்கதான் புத்திசாலியா இருக்கு. பெரியவங்கதான் கிறுக்குத்தனமா நடந்துக்கறாங்க. பாலம் உன் ஹஸ்பண்ட். உன்கிட்டே இத்தனை வருஷமா எப்படித்தான் குப்பைக் கொட்டறாரோ?''

''நல்லாவேக் கொட்டறார். வீடு நிறைஞ்சு போச்சு.''

''எப்பதான் குழந்தை பெத்துக்கப் போறீங்க?''

''சொந்தமா வீடு வாங்கி குடியேறியப் பிறகுதான்.''

''நான் குழந்தையப் பத்திக் கேக்கறப்பவெல்லாம் இப்படித்தான் ஏதாவதொரு காரணம் சொல்லிடறே. கடைசியில் அறுபதாம் கல்யாணம் பண்ணிட்டப் பிறகுதான் பெத்துக்குவோம்னு சொல்லப் போறேப் பார்.''

''அதெப்படி கரெக்டா சொல்றே?''

''அடிச்சேனாப் பார்...'' ...ற செல்லமாய் அடிக்க கையை ஓங்கினாள் மாதுரி.

**ரா**கேஷின் அறையில் இருந்து பார்க்கும்போது கண்ணாடி கதவின் வழியே மாதுரி அமர்ந்திருந்த கேபின் தெளிவாகத் தெரிந்தது.

சுறுசுறுப்பாய் வேலைப் பார்த்துக் கொண்டு இடையில் வரும் போன் கால்களுக்கு சிரித்த முகத்துடன் அவள் பதில் அளிக்கும் லாவகத்தை சிகரெட் புகையை கக்கியபடி ரசித்துக் கொண்டிருந்தான்.

மிக எதேச்சையாக நிமிர்ந்த மாதுரி, அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

அவள் உடம்பு ஏஸி அறையிலும் குப்பென்று வியர்த்தது.

அவள் தன்னை கவனித்து விட்டதைப் பார்த்ததும் தன்னை சுதாரித்துக் கொண்டு செல்போனில் பேசத் துவங்கினான்.

மாதுரியின் மனதை பயம் சூழ்ந்தது. வேலையில் கவனம் சிதறியது. மாலை ஒரு மணி நேரம் முன்னதாகவே கிளம்பி வரச் சொல்லிய கணவனின் வேண்டுகோளை முற்றிலுமாக மறந்து போனாள்.

வழக்கத்தை விட தாமதமாகவே கிளம்பினாள்.

**தி**ருமண நாள் என்பதால் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு அப்படியே ஒரு படத்திற்கு போய் விட்டு வரலாம் என்று திட்டம் போட்டிருந்ததால் இரவு சமைக்கவில்லை.

விக்கிரமனும், குழந்தைகளும் டிரஸ் பண்ணிக் கொண்டு மாதுரியின் வருகைக்காக காத்திருந்தனர்.

ஆபிசிற்கு போன் செய்தால் லைன் கிடைக்கவில்லை.

நேரம் வேகமாக ஓடியது. எட்டு மணியானது. குழந்தைகள் இருவரும் அப்பாவைப் பார்த்த பார்வையில் ஏளனமிருந்தது.

''ப... பசிக்குதா கைலாஷ்?''

''அதான் ஒண்ணும் சமைக்கலியே... ஒரேயடியா நாளைக்கு சாப்பிட்டுக்கறோம்.''

''கோபமா? பாருடா... மம்மிக்கு என்ன பிரச்சினையோ? இன்னைக்கு அவங்க ஆபீஸ்க்கு புது எம்.டி. வர்றாராம். அதனால வேலை இருந்திருக்கும். ஃப்ரிட்ஜ்ல மாவு இருக்கு. தோசைப் போட்டுத் தரட்டுமா? இல்லே சப்பாத்தி பண்ணித் தரட்டுமா?''

''வேணாம் டாடி. எங்களுக்காக நீங்க ஒண்ணும் கஷ்டப்பட வேண்டாம். அதே ஃப்ரிட்ஜ்ல ப்ரெட்டும், ஜாமும் இருக்கு. அதுபோதும் எங்களுக்கு. வாடி ஷாலினி.''

அந்தப் பேச்சு விக்கிரமனை வெகுவாய் காயப்படுத்திற்று. பிள்ளைகள் இருவரும் சாப்பிட்டு விட்டு படுத்துறங்கி விட்டனர்.

களைத்துப் போய் வீடு வந்து சேர்ந்தாள் மாதுரி.

''என்ன மாது? இவ்வளவு லேட்?''

பதிலேதும் கூறாமல் பாத்ரூமிற்குள் புகுந்துக் கொண்டாள். வெளியே வந்தபோது முகம் பளிச்சென்று இருந்தது.

''இன்னைக்கு நீ சீக்கிரமா வருவேன்னு ஆசையா காத்திருந்தேன்.''

''.....''

''உனக்காக நம்ம குழந்தைங்களும் காத்திருந்தாங்க தெரியுமா?''

''.....''

''இன்னைக்கு நம்ம கல்யாண நாள். அதுவாவது ஞாபகமிருக்கா?'' என்றார் விளையாட்டாய்.

''எதுக்கு தொண தொணன்னு பேசி உயிரை வாங்கறீங்க? நான் என்ன ஊரையா சுத்திட்டு வந்தேன்? ஏன் லேட்டு, ஏன் லேட்டுன்னு ஆயிரத்தெட்டு முறை கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிட்டிருந்தா என்ன அர்த்தம்? ஆபீஸ்லேர்ந்து கிளம்பறதுக்கே லேட்டாயிடுச்சி. போதாதுக்கு நடு வழியிலே

## மோனிகாவுக்கு எல்லாமே பணம்தான்!

**அ**மெரிக்க அதிபர் பில்கிளிண்டனை 'செக்ஸ்' விவகாரத்தில் சிக்க வைத்த மோனிகா லிவின்ஸ்கி குறுகிய காலத்திலேயே உலகப் புகழ் பெற்று விட்டார்.

உலகின் எல்லா மூலைகளிலும் பரபரப்பாக பேசப்பட்டார். கிளிண்டனின் காதல் லீலைகளில் மோனிகாவை சம்பந்தப்படுத்தி உலக பத்திரிகைகளில் செய்திகள் பரபரப்பாக உலவியதால், மோனிகாவுக்கு மலிவான விளம்பரம் எளிதாகவே கிடைத்தது. இதையே காசாக்கி விட்டார் மோனிகா.

தனக்கு டி.வி.யில் கிடைத்த மலிவான விளம்பரத்தை பயன்படுத்தி 'உணவு பொருள்' விளம்பரங்களிலும் தோன்றினார். இதன் மூலம் மோனிகாவுக்கு ஏராளமாக பணம் குவிந்தது.



'ஜென்னி கிரேக்' என்ற உணவு விளம்பரத்துக்காக மோனிகாவுக்கு ரூ.4 கோடியே 60 லட்சம் சம்பளம் கொடுக்கப்பட்டது.

இதே போல் பல்வேறு வணிக விளம்பரங்களில் காசு குவிக்கத் தொடங்கி விட்டார் மோனிகா. இதனால் உடம்பிலும் பளபளப்பு ஏறிவிட்டது.

- திருமகன்.

கட்டிக்காரன் மறியல்,' கன்றாவின்னு பஸ்ஸையெல்லாம் வேற ரூட்டுக்கு திருப்பி விட்டுட்டான். எப்படி வர முடியும்? எனக்கு மட்டும் லேட்டா வரணும்னு ஆசையா? என் தலையெழுத்து இப்படியாகிப் போச்சு... என்ன பண்றது?''

அவர் அவனிடமிருந்து இப்படிப்பட்ட கூடான வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. அரண்டுப் போனார். சில கணங்கள்தான். தாம்பளுக்கு வந்து விட்டார்.

''சரி... மாது... கொஞ்சம் வெயிட் பண்ணு. சூடா தோசை போட்டுத் தர்றேன்.''

''எனக்கெதுவும் வேண்டாம்.''

''அடம் பிடிக்காதே மாது. ஏதோ கோபத்திலே இருக்கிறேன்னு புரியுது. அதுக்காக வயித்துக்கு துரோகம் பண்ணாதே. நாம கஷ்டப்படறதே இந்த ஒரு ஜாண் வயித்துக்காகத்தானே?''

''இப்படி நீங்க என்னை கம்ப்பல் பண்றது எனக்குப் பிடிக்கலே. நான் ஒண்ணும் குழந்தையில்லே. நான் தூங்கப் போறேன்...'' என்று பெட்ரூமை நோக்கிச் சென்றாள்.

அந்த நேரம் பார்த்து மின்சாரம் அணைப்பானது.

''ச்சே... இதுவும் சேர்ந்து சதி பண்ணுதே'' என்று முணுமுணுத்தபடி படுக்கையில் விழுந்தாள்.

எப்போது உறங்கினாளோ?

ஆனால், விக்கிரமன் உறங்கவில்லை. மனைவி அருகில் அமர்ந்தபடி விசிறிவிட்டுக் கொண்டிருந்தார்.

5

**பொ**ழுது புலர்ந்தது.

மாதுரி கண்களைத் திறக்கவே சிரமப்பட்டாள். தலை கனத்தது.

கையை ஊன்றி எழுந்தமர்ந்த போதுதான் உடலில் அங்கங்கு ஒட்டியிருந்த ரோஜா இதழ்களை பார்த்தாள். படுக்கையிலும் வாடி வதங்கிய நிலையில் பூக்கள்.

ஆச்சர்யமாய் பார்த்தவள் யோசித்தாள்.

'என்ன இது?'

'ஓ...நேற்று திருமணநாள் அல்லவா? அவர் ஆசை ஆசையாய் கட்டிலை அலங்கரித்து வைத்திருக்கிறார். சே! நேற்று நான் ஏன் அவ்வளவு கடுமையாக நடந்துக் கொண்டேன்? யாரோ செய்த தவறுக்கு என் விக்கிரமனை அல்லவா தண்டித்து விட்டேன்?' உள்ளம் நெகிழ்ந்தது.

உள்ளே நுழைந்த விக்கிரம ''குட்மார்னிங் மாது!'' என்றபடி காபியை நீட்டினார்.

மாதுரி கணவனையேப் பார்த்தாள்.

துளியும் சலனமில்லாத முக வழக்கமான புன்னகை. முன்தினம் அ மனதை காயப்படுத்திய சம்பவத்தின் பாதிப் சுத்தமாய் இல்லை.

''ஸாரிங்க...!''

''எதுக்கு?''

''நேத்து நான் உங்க மனசை ரொம்ப புண்படுத்திட்டேன்!''

''அப்படின்னு யார் சொன்னது?''

''இதோ...வாடி வதங்கிப் போயிருக்கு இந்த பூக்கள் சொல்லுது!''

''அந்தப்பூ வாடட்டும். ஆனா, இ மாதுரிப்பூ வாடினாதான் என் ம புண்ணாகும்!''

''ஸாரிங்க... என்னயிருந்தாலும் நா அப்படி பேசியிருக்கக் கூடாது!''

''நீ இப்படி திரும்ப திரும்ப அதையே பேசறது தான் வருத்தமாயிருக்கு. நான் யா உன்கிட்டே எல்லா உரிமையும் உள்ள கணவ உன்னுடைய கோபம், தாபம், அன்பு, ஆத்திர அத்தனையும் என்னைத்தவிர வேற யாரிட காட்ட முடியும்? அலை வந்து வந் மோதுறதால... பாறை என்ன கரைஞ் போயிடும்?'' என்றார் கனிவாக.

''நான் எதுக்காக அப்படி...''

''விளக்கம் எதுக்கு மாது? நா கேட்டேனா? மறுபடி அதை நினைச் அசைபோட்டு உன்னை கஷ்டப்படுத்திக்காதே. ஐ நோ மாது! எ மாதுவைப் பத்தி என்னைத் தவிர வேற யாருக்குப் புரியும்? ஆபீஸ்ல ஆயிர டென்ஷன் இருக்கும். அதை அங்கே காட் முடியுமா? என்கிட்டே தான் காட்டணும் அதைத் தான் நானும் விரும்பறேன். அந் கோபம் நீ என் மேலே வச்சிருக்கிற அன்பை காட்டுது. அன்பை அதிகரிக்க செய்யுது. இதுவும் ஒருவகை காதல் தான். ஆனா, உ மேலே எனக்கு ஒரே ஒரு கோபம் தான்!''

''என்ன கோபம்?''

''நைட்டு ஒண்ணும் சாப்பிடாம அப்படியே படுத்திட்டியே..''

''ஸாரிங்க... ஆமா, நீங்க சாப்பிட்டீங்களா?''

''நீ சாப்பிடாதப்ப நான் மட்டும் எப்படி சாப்பிடுவேன் மாது?''

அந்த பதிலில் மாதுரியின் கண்கள் கலங்கியது. அவன் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''எத்தனை ஜென்மம் எடுத்தாலும், நீங்க தான் என் புருஷனா வரணும்!''

''அந்த ஆசை எனக்கு மட்டும் இல்லையா என்ன? பட், ஒன் கண்டிஷன்! நீ இப்படி சாப்பிடாம என்னையும் சேர்த்து பட்டினிப் போடக் கூடாது!''

வாய்விட்டு சிரித்தாள் மாதுரி.

''நைட்டு உங்களை நான் ஏமாத்திட்டேன்லை?'' என்று பூக்களை கை நிறைய அள்ளி காண்பித்தாள்.

''ம்...!'' என்றார் குறுகுறுப்பாய் பார்த்து.

''இன்னைக்கு நிச்சயமாய் உங்களை ஏமாத்த மாட்டேன்...சரியா?'' என்று செல்லமாய் அவர் கன்னத்தை தட்டிவிட்டு போனாள்.

**த**ட்டில் போட்ட இச்சடியை எடுத்து ஷாலினிக்கு ஊட்டி விட முயற்சித்தாள் மாதுரி.

அவள் தலையை ஆட்டி மறுத்தாள். கைலாஷிற்கும் ஊட்ட முயற்சிக்க அவனும் மறுத்தான்.

''மம்மி மேலே கோபமா?''

''....''

இருவரும் பதில் கூறவில்லை.

''நேத்து வர லேட்டாயிடுச்சு. இன்னைக்கு கண்டிப்பா நாமெல்லாரும் ட்ரேட் ஃபேர் போறோம்... ஓக்கே?''

இருவர் முகத்திலும் மகிழ்ச்சியில்லை.

''ஏய்...இது உங்களுக்கு க்ளாட் நியூஸ் இல்லையா? எதுக்காக முகத்தை தூக்கி வச்சிட்டிருக்கீங்க? சியர்..அப்!''

''இதுல சந்தோஷப்பட என்ன மம்மி இருக்கு? வழக்கம் போல இன்னைக்கும் நீங்க லேட்டாதான் வருவீங்க. அதுக்கொரு காரணத்தை சொல்வீங்க. அதனால உங்ககிட்டேர்ந்து நாங்க எதையும் எதிர்பார்க்கிறதில்லே!'' என்றான் கைலாஷ்.

இதைக் கேட்டு மாதுரி மட்டுமல்ல விக்கிரமனும் திகைத்துப் போனார்.

**ப**ள்ளி முடிந்து ஆட்டோ வருவதற்காக காத்திருந்தனர் கைலாஷும், ஷாலினியும்.

''நாம இன்னைக்காவது வெளியிலே போவோமா கைலாஷ்?''

''யாருக்குத் தெரியும்? எனக்கென்னவோ நம்பிக்கை இல்லே!''

''வாழ்க்கையே போரடிச்சுப் போச்சுடா! அஸ்வினி, பிரதிபா வீட்லேயெல்லாம் அவங்க நினைச்சப்ப அம்மா, அப்பாக்கூட வெளியிலே போவாங்களாம்!'' பெரிய மனுஷியைப் போல் பேசினாள் ஷாலினி.

''ஆமா... கார்த்திக், விக்னேஷ் வீட்லேக் கூட அப்படித்தானாம். ஒவ்வொரு லைப்டேயும் ஜாலியா கிளம்பிடுவாங்களாம். நம்ம வீட்லே மட்டும் ஏன் இப்படி இருக்காங்க? மம்மிக்கு சுத்தமா நம்ம மேலே அக்கறையே இல்லே சரி. அவங்க வரலேன்னாலும், இந்த டாடியாவது கூட்டிட்டுப் போகலாமே! மம்மி இல்லாம யாரும் வெளியே போய் என்ஜாய் பண்ணக் கூடாதாம். நம்ம மேலே யாருக்குமே அக்கறையில்லே!''

''ஆமா... வீடு ஹாஸ்டல் மாதிரியிருக்கு..பேசாம நம்ம ரெண்டு பேரையும் ஹாஸ்டல்லேயே சேர்த்துட்டாக்கூட சந்தோஷமாயிருக்கலாம்'' என்றான் கைலாஷ் விசனமாக.

**ப**ள்ளியிலிருந்து திரும்பியிருந்த குழந்தைகளை வரவேற்றார் விக்கிரமன்.

''வாங்க...வாங்க...வாங்க! முதல்ல முகம், கை, கால் கழுவிட்டு டிபன் சாப்பிட்டு, டிரஸ் பண்ணிட்டு ரெடியா இருப்பீங்களாம். மம்மி இப்ப வந்திடுவாங்க. வந்ததும் நாம எல்லோரும் ட்ரேட் ஃபேர் போகிறோம். ஓக்கே?''

''ஹை... டாடி... நிஜமாத்தான் சொல்றீங்களா?''

''உங்ககிட்டே போய் பொய் சொல்வேனா? சீக்கிரம் போய் டிரஸ் பண்ணுங்க!''

நேரம் நழுவியது. மூவரும் தயாராய் மாதுரியின் வருகைக்காக காத்திருந்தனர்.

''டாடி... டைமாகுதே...!''

''இதோ...இன்னும் கொஞ்ச நேரத்துல மம்மி வந்துடுவாங்க!'' சமாதானமாய் சொன்னார்.

ஆனால் மாதுரி வரவில்லை.

**எ**ன்ன மாதுரி...டென்ஷனாத் தெரியறே? எனி ப்ராப்ளம்?'' அபூர்வா கேட்டாள்.


''ஓ.. ஒண்ணுமில்லே! அவசரமா வீட்டுக்குப் போகணும். அதை எப்படி சொல்லிட்டுப் போறதுன்னு தெரியலே?''

''ஏன்... அதை சொல்ல என்ன பயம்? சொல்லிட்டு கிளம்பேன்!''

''இல்லே... அந்த எம்.டி.யப் பார்த்தா..''

''இன்னைக்கெல்லாம் பார்த்துக்கிட்டே இருக்கலாம் போலிருக்கு-இல்லே!''

''பிச்சிடுவேன் ராஸ்கல்! அசிங்கமா பேசாதே!''



"பின்னே என்ன? ஹலோ சார்... ஒன் ...வர் பர்மிஷன் கொடுக்கன்னா ...காடுத்துட்டுப் போறார். அதுக்கேன் ...யங்கறே?"

"என்னவோ தயக்கமாயிருக்கு. ...வ்வளவுதான்!"

"மேடம்.. எம்.டி.சார் கூப்பிடறார்?" ...ன்று முருகன் வந்து அழைக்கவும்... ...பூர்வாவைப் பார்த்து விட்டு சென்றாள்.

"வாங்க... மிஸஸ் மாதுரி.. சிட் டவுன் ...ளீஸ்!"

அமர்ந்தாள்.

"மிஸஸ் மாதுரி...உங்களைப் பத்தி ...ானேஜர் நிறையச் சொன்னார். எல்லா ...ிஷயத்திலேயும் ரொம்ப பர்ஃபெக்ட்டா இருப்பீங்களாம்" என்று அந்த வார்த்தைக்கு ...ற்று அழுத்தம் கொடுத்தான்.

"உங்களை மாதிரி ஆட்கள் தான் எனக்கு வேணும். ஐ மீன்... என் கம்பெனிக்கு! அநாவசியமா லீவு எடுக்கறதில்லே. அரட்டை அடிக்கறதில்லே. ஐ...லைக் இட். ஐ... லைக் இட்! வாழ்க்கையிலே உயரணும்னா.. இந்த ...ாதிரி சின்ஸியாரிட்டி அவசியம் தேவை."

அவனின் பாராட்டு அவளை நெகிழ ...வைத்தது.

"எனிவே.. ஒரு முக்கியமான விஷயம்!"

"சொல்லுங்க சார்!"

"குளோபல் கம்பெனி தெரியுமில்லையா?"

"தெரியும் சார்! போன மாசம் அம்பது லட்சத்துக்கு நாம அவங்களுக்கு கிரானைட் சப்ளை பண்ணியிருக்கோம்!"

"வெரிகுட்! அதே கம்பெனிதான். அந்த கம்பெனி எம்.டி. குப்தா இப்ப போன் பண்ணினார். செக்கும் கேஷும் ரெடியா இருக்காம். இதுல பாதி, அதுல பாதின்னு நான் தான் தரச் சொல்லியிருந்தேன். பட், அதை போய் வாங்கறதுக்கு எனக்கு நேரமில்லே. நம்ம கம்பெனிக்கு புதுசா ஃபாரின் காண்ட்ராக்ட் கிடைச்சிருக்கு. பார்ட்டி இன்னைக்கு வர்றாங்க. அவங்களை ரிஸீவ் பண்ண ஏர்போர்ட்டுக்கு போய்டுவேன். ஸோ, குளோபல் கம்பெனிக்கு நம்பிக்கையான ஒரு ஆளை அனுப்பணும். எனக்கு சட்டுனு உங்க ஞாபகம் தான் வந்தது. நீங்க என்ன பண்றீங்க.. கம்பெனி கார்லேயே போய் பணமும் செக்கும் வாங்கிட்டு ஆபீஸ்க்கு வந்திடுங்க. நானும் அதுக்குள்ளே என் வேலையை முடிச்சிட்டு வந்திடறேன். ஓக்கே?"

"ஓ... ஓக்கே சார்!" என்றாள் தடுமாற்றமாய். குழந்தைகளின் உருவம் கண்முன் வந்து போனது.

'இன்னைக்கும் சதிப் பண்ணிட்டியே கடவுளே!'

வீட்டிற்கு போன் பண்ணினாள். போன் அலறும் சத்தம் கேட்டதும் தாவிப் போய் எடுத்தார் விக்கிரமன்.

"மாதுரியா...சொல்லும்மா!"

"......"

"அப்படியா... வர முடியாதா? சரி... கேன்சல் பண்ணிடட்டுமா?"

"......"

"ஓக்கே...ஓக்கே.. நாங்க மட்டும் போறோம். நீயில்லாமல் போறது தான் மனசுக்கு சங்கடமாயிருக்கு. சரி... நீ பத்திரமா வந்துடு!" என்று போனை வைத்தார்.

இரண்டு குழந்தைகளும் அவரையே பார்த்தன.

"என்ன அப்படி பார்க்கறீங்க? புறப்படலாம் வாங்க!"

அவர் பின்னே நடந்த கைலாஷ், ஷாலினியிடம் "நான் அப்பவே சொல்லலே! மம்மி வரமாட்டாங்கன்னு!"

காதில் விழுந்தது. விக்கிரமன் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

தன்னிடமிருந்த சாவியை எடுத்து பூட்டைத் திறந்து வீட்டினுள் நுழைந்தாள் மாதுரி.

ஹேண்ட் பேகை எடுத்து சோபாமேல் வீசி விட்டு ஆயாசமாக சாய்ந்துக் கொண்டாள்.

வெறிச்சென்றிருந்த வீட்டின் தனிமை சூழல் அவளுள் சுய இரக்கத்தை உற்பத்தி செய்தது. அப்படியே சோபா மீது கவிழ்ந்து வாய்விட்டு அழ ஆரம்பித்தாள் மாதுரி.

6

மாதுரி உறக்கம் வராமல் புரண்டு புரண்டுப் படுத்தாள்.

விக்கிரமன் கவனித்தார்.

கையை உயர்த்தி டேபிள் லாம்ப்பைப் போட்டார். சட்டென்த் திரும்பிப் பார்த்தாள்.

"என்னங்க தூங்கலே?"

"நான் கேக்க வேண்டிய கேள்வி. நீ ஏன் இன்னும் தூங்கலே? மணி ஒன்னாயிடுச்சே? தலைய வலிக்குதா?"

"சேச்சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லேங்க...என்னமோ தெரியலே. தூக்கமே வரலே!"

"ம்ஹூம்...மனசிலே எதையோப் போட்டு குழப்பிக்கிட்டிருக்கே! என்னமோ யோசிக்கிறே! புரண்டு புரண்டுப் படுக்கறே! என்னாச்சு மாது?"

மயிலிறகால் வருடும் இதமிருந்தது பேச்சில். மாதுரி நன்றாகத் திரும்பி அவர் முகத்தைப் பார்த்தாள்.

"உங்களைப் பார்த்தா எனக்கு ரொம்ப பொறாமையா இருக்குங்க!"

"என் மேலயா? நான் உன் புருஷன் மாது!" என்றார் சிரித்துக் கொண்டே.

"ஞாபகப்படுத்தற அளவுக்கு மறந்துட்டேனா?"

"பின்னே எதுக்கு என்னைப் பார்த்து பொறாமையா இருக்குன்னு சொல்றே?"

"இந்த வீடே எனக்கு அந்நியமாய்ட்ட மாதிரி ஃபீலிங்!"

"பைத்தியம் மாதிரி உளறாதே!"

"இல்லேங்க.. நிஜமாதான் சொல்றேன். நம்ம குழந்தைங்க உங்கமேல வச்சிருக்கிற அளவுக்கு என்கிட்டே பாசமாயில்லே. நான் அம்மாங்கறதையே மறந்துட்டாங்க!"

"சேச்சே... நீயாகவே ஏன் இல்லாததும் பொல்லாததும் கற்பனைப் பண்ணிக்கிறே?"

"இது கற்பனை இல்லே...நிஜம். நம்ம குழந்தைங்க என்கிட்டே ஆசையா பேசறதில்லே..பழகறதில்லே.. ஒரு டம்ளர் தண்ணி வேணும்னாக்கூட உங்கிட்டே தான் கேக்கறாங்க. ஏன் என்கிட்டே கேக்கக் கூடாதா? நான் செய்ய மாட்டேனா?"

"இதெல்லாம் சாதாரண விஷயம். ஏம்மா பெரிசுப் படுத்திக்கறே?" அன்பாய் கேட்டார்.

"ஆமாங்க... சாதாரண சின்ன தேவைகளுக்காகக் கூட அவங்க என்கிட்டே வர்றதில்லே..இது உங்களுக்கு சாதாரணமா தெரியுதா?"

"ப்ளீஸ்...ரிலாக்ஸ் மாது! நான் எப்பவும் வீட்டிலேயே இருக்கிறவன். நீ அப்படி இல்லையே! காலையிலே ஆபீஸ் கிளம்பினா... பிள்ளைங்க தூங்கிட்ட பிறகு வீடு திரும்பறே! காரணம் உன்னோட ஆபீஸ் ரொம்ப டிஸ்டன்ஸ்ல இருக்கிறதால தான். அவங்க தினசரி உன்னைப் பார்க்கிறது ஒருசில மணி நேரங்கள் தான்! அவங்களோட தேவை நான் பூர்த்தி செஞ்சிடறதால... பின்னை உன்னை தொந்தரவு செய்யறதில்லே..."

"தொந்தரவுன்னு சொல்லாதீ அவங்க என்னைவிட்டு கொஞ்சம் கொஞ் விலகிப் போய்ட்டு இருக்காங் இதுக்கெல்லாம் என்ன காரணம்? நான் குடும்பத்துக்காக செலவழிக்கிற நேரம் ரொ குறைவு... அதானே! வேண்டாங்க... எ இந்த வேலை வேணாம். ரி பண்ணிடறேன். எனக்கு என் குழந்தை வேணும். அவங்களோட அன்பு வேணு ப்ளீஸ்... வேலையை ரிசை பண்ணிடறேனே!" கெஞ்சிய மாதுரி கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

பதறிப்போனார் விக்கிரமன்.

"கண்ட்ரோல் யுவர் செல்ஃப் மா என்ன இது குழந்தையாட்டம்?" அ தலையை கோதி, கன்னத்தை துடை விட்டார்.

"சின்ன விஷயத்தை பெரி படுத்தலாமா? ம்...?"

"என்னால தாங்கிக்க முடியலீங் அஞ்சு வருஷம் முன்னாடி இருந்த சந்தோ இப்ப இல்லே! அம்மாங்கற ஸ்தானத்தை ந பூர்த்தி செய்யலே...அதனால தான் கைலாஷு ஷாலினியும்...என்னை..." குரல் அடைத்

"நீ இப்படி பேசறது எனக்கே கோபத் உண்டாக்குது மாது! ஒவ்வோர் குடும்பத் கணவனும், மனைவியும் வேலைக் போயிடறாங்க. அவங்க குழந்தை அம்மாவும் இல்லாம, அப்பாவும் இல்ல எப்படியெல்லாம் திண்டாடுவாங்க யோசிச்சிப் பார்! அந்த வகையிலே ந குழந்தைங்க எவ்வளவோ மேல் இல்லையா

"மத்த குழந்தைகளைப் பத்தி என் பேச்சு? நான் என் குழந்தைகளைப் ப பேசறேன்."

"இப்ப என்ன ஆகிப் போச்சு மாது? நம் கைலாஷ், ஷாலினியோட எதிர்காலத்திற்கா தானே நீ இவ்வளவு பாடுபடறதும்? ரிசை பண்றது புத்திசாலித்தனமான முடிவு இல்லே இத்தனை வருஷ தாம்பத்யத்துல நான் உன் ஒரு வார்த்தை கடிந்து பேசியிருப்பேனா இல்லை நீ தான் பேசியிருப்பியா? நா ஒருத்தரை ஒருத்தர் அந்தள புரிஞ்சுக்கிட்டிருக்கப்ப... இந்த சின் விஷயத்துக்கெல்லாம் உடைஞ் போகலாமா?"

"என் மனசுக்கு ரொம் கஷ்டமாயிருக்குங்க.ஒரேயடியா குழந்தைங்க என்னை விட்டு விலகி போய்டுவாங்களோன்னு தா பயப்படறேன்."

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. அப்படியெல்லாம் நடக்க விட்டுவேனா சொல்லு!"

மாதுரி அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றாமல் கணவனின் தோளில் சாய்ந்துக் கொண்டாள். விக்கிரமன் ஆறுதலாய் அவள் முதுகை தட்டிக் கொடுத்தார்.

அலுவலகம் புறப்பட தயாராகிக் கொண்டிருந்தாள் மாதுரி. விக்கிரமன் அவளுக்கு தேவையான உதவிகளை செய்துக் கொண்டிருந்தபோது.

"சார்... டெலிகிராம்" என்ற குரல் கேட்டது.

'டெலிகிராம்' என்றதும் இருவர் முகத்திலும் பதட்டம். விக்கிரமன் வாசலுக்குப் போனார். பின்னேயே மாதுரியும் சென்றாள்.

விக்கிரமன் கையெழுத்துப் போட்டு வாங்கினார்.

"என்னங்க... யார்கிட்டேர்ந்து?"

"ஏன் டென்ஷனாகறே? பொறு!"

"தந்தின்னாலே பயமாயிருக்கு!"

"தந்தின்னாலே கெட்ட செய்தியை தான் தாங்கி வரும்னு படிக்காதவங்க தான் பயப்படுவாங்க. படிச்ச, பொறுப்பான பதவியிலே இருக்கிற நீ பயப்படலாமா?"

"லெக்சர் அடிக்காம சீக்கிரம் படியுங்க."

படித்தார்.

"உன் அருமை தம்பி பிரேம்குமார், தன் மனைவியோட கூடிய விரைவில் இங்கே வர்றானாம்!"

"அவ்ளோ தானா?"

"அவ்வளவே தான்!"

"ராஸ்கல் எப்பவோ வர்றதுக்கு இப்ப தந்தி அடிக்கணுமா? லெட்டர் எழுதிப்போட்டா குறைஞ்சுப் போய்டுவாராமா? ஒரு நிமிஷத்திலே பதற வச்சிட்டானே..ப்பா!"

"யானை வரும் பின்னே...மணியோசை வரும் முன்னே! அதுப்போலத் தான் இதுவும்! அவனைப் பத்தி உனக்குத் தெரியாதா மாது? சின்ன விஷயத்தை பெரிசாக்கி காட்டற குணம். உன்னை பதறியடிக்கணும்னே...இதை அனுப்பியிருக்கான்!" என்று சிரித்தார் விக்கிரமன்.

"அவன் வரட்டும் பேசிக்கிறேன்...!" என்றாள் மாதுரி.

மாதுரியும், அபூர்வாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

இருவரும் தங்கள் சாப்பாட்டை பகிர்ந்து கொண்டனர்.

"இன்னைக்கும் லெமன் ரைஸா? ஹூம்... உனக்கு சலிக்குதோ இல்லையோ... இதை சாப்பிட்டு சாப்பிட்டு எனக்கு சலிச்சு போச்சப்பா...!" என்றாள் மாதுரி.

"என்ன பண்றது? எல்லா வேலையும் நானே செய்ய வேண்டியதா இருக்கு. இந்த அழகிலே... விதவிதமா சமைச்சு எடுத்திட்டு வரமுடியுமா? ஆசையிருக்கு தாசில் பண்ண! அதிர்ஷ்டமிருக்கு கழுதை மேய்க்க..." பெருமூச்சுடன் வந்தன வார்த்தைகள் அபூர்வாவிடமிருந்து.

"ஏன் அபூர்வா... உங்க மாமியார், நாத்தனார் எல்லாம் இருக்காங்க இல்லே.. அவங்க சமைக்க மாட்டாங்களா?"

"ம்ஹூம்... எல்லாத்தையும் நானேதான் பார்த்துக்க வேண்டியிருக்கு."

"மாமியார் வயசானவங்க... சரி... அவங்களை விட்டுடுவோம். நாத்தனார்ங்க பெரிய பொண்ணுங்க தானே?"

"ஆமாம்... ரெண்டு பேரும் கல்யாணத்துக்கு தயாரா நிக்கறாங்க!"

"உன் வீட்டுக்காரர் இதைப் பற்றி எதுவும் கேக்க மாட்டாரா? தங்கச்சிகளுக்கு அட்வைஸ் பண்ண மாட்டாரா? பாவம், பொண்டாட்டி ஆபீஸ்லேயும் வேலை பார்த்துட்டு வீட்டுலேயும் வந்து அல்லாடறாளேன்னு கண்ணு கரிக்காதா?..."

"அவர் என்ன பண்ணுவார் மாதுரி? அவர் ஃபேக்டரியிலே வேலை செய்யறதால காலையிலே ஏழு மணிக்கெல்லாம் வீட்டை விட்டு கிளம்பிடுவார். நைட்டு ஒன்பது மணிக்கு தான் வருவார். நான் முழுக்க கஷ்டப்பட்டு உழைச்சிட்டு வர்ற மனுஷனை நான் வேற வீட்டுப்பிரச்சினைய பெரிசாக்கி அவர் நிம்மதியை கெடுக்கணுமா? உண்மைய சொல்லப் போனா... அவர்கிட்டே ரெண்டு வார்த்தை மனசு விட்டு பேசக்கூட நேரமில்லே... அதுதான் நிஜம்"

"நிஜமாவா?"

"ஆமாம் மாதுரி! நைட்டு சமையலை முடிச்சிட்டு எல்லாருக்கும் பரிமாறி... பாத்திரம் ஒழிச்சிப்போட்டு சுத்தம் பண்ணிட்டு படுக்கப் போறதுக்குள்ளே பெரும்பாலும் அவர் தூங்கிட்டிருப்பார். காலையிலே... சமைக்கறதுக்கே நேரம் சரியாப் போய்டும். அவரும் ஃபேக்டரிக்கு கிளம்பிடுவார், நானும் ஆபீஸ்க்கு கிளம்பிடுவேன்!"

"ஆனாலும், நீ ரொம்ப இடம்

கொடுக்கறே அபூர்வா! அண்ணி கஷ்டப்படறாங்களேன்னு கூடவா மனசு இறங்காது உன் நாத்தனார்களுக்கு? இதுங்களுக்கு இப்பத் தெரியாது. கல்யாணமாகி, புகுந்த வீட்டுக்கு போய் மோசமான மாமியாரிடம் மாட்டும்போது தான் உன் அருமைத் தெரியும். இதுங்கள் எல்லாம் நல்லா வாழும்னா நினைக்கிறே?''

''சேச்சே... உன் வாயால அவங்களை சபிச்சிடாதே மாதுரி!'' அவசரமாய் தடுத்த அபூர்வாவின் கண்கள் கலங்கியது.

''ஏய்... அழறியா... என்ன?''

''பாவம்.... சின்னப் பொண்ணுங்க. சுதந்திரமா, சந்தோஷமா இருப்பதெல்லாம் கல்யாணத்துக்கு முன்னால, பிறந்த வீட்லே தான்! புகுந்த வீட்லே வாழ்க்கை முறையே மாறிப் போயிடுமில்லையா? அதனால தான் நான் இதையெல்லாம் பெரிசு பண்ணிக்கறதில்லே. அவங்களுக்காவது நல்ல வாழ்க்கை அமையணும் மாதுரி!''

''உன்னை நினைச்சா, ஒரு பக்கம் பெருமையாகவும் இருக்கு! மறுபக்கம் உன் மனசை அவங்க புரிஞ்சுக்கலியேன்னு வருத்தமாகவும் இருக்கு. சரி... நீ எப்பதான் குழந்தைப் பெத்துக்கப்போறே? எவ்வளவு நாளைக்கு வேண்டாம்னு தள்ளிப் போட்டுக்கிட்டிருக்கப்போறே?''

''என் நாத்தனார்ங்க கல்யாணமாகி போயிட்ட பிறகு தான்! அதுவரைக்கும் குழந்தை வேண்டாம்னு தீவிரமா இருக்கோம். அதுவேற செலவுதானே! சமாளிக்க முடியாது மாதுரி!''

''அதுக்காக... எவ்வளவு காலத்துக்கு வேண்டாம்னு தள்ளிப் போடுவே? அதுக்கு வயசில்லையா அபூர்வா? சொல்லப்போனா... நீ என்னைவிட ரெண்டு வயசு பெரியவ... ரொம்ப தள்ளிப்போடாதே...''

பதிலேதும் கூறாமல் தலை கவிழ்ந்த அபூர்வா... நெடுநேரம் அப்படியே இருந்தாள். அந்த மௌனத்தின் பின்னே ஜீரணிக்க முடியாத நிஜம் உறைந்திருப்பது அவளைத் தவிர யாரறிவார்?

''சரி... சரி... சாப்பிடற நேரத்துலே நான் வேற எதை எதையோ பேசி... மூடை அவுட் பண்ணிட்டேன். சாப்பிடு!''

உடனே முகத்திற்கு புன்னகையை பூசிக் கொண்ட அபூர்வா சாப்பிட ஆரம்பித்தாள்.

''ஒரு ஸன்டே... எங்க வீட்டுக்கு வாயேன் அபூர்வா!''

''கண்டிப்பா வர்றேன். முக்கியமா உன் ஹஸ்பன்டை பார்க்கறதுக்காவது வருவேன்!''

''உன் ஹஸ்பன்டையும் அழைச்சிட்டு வா!''

''அவருக்கு ஸன்டே கூட வீ... இல்லேப்பா!''

''பாவம் மனுஷன்... அவர் போட்டோ இப்ப இருக்கா? பார்க்கணும்!''

''வீட்லே இருக்கு!''

''நாளைக்கு கொண்டு வா!''

''ச... சரி... கொண்டு வர்றேன்!''

''என்னை... உன் வீட்டுக்கு வான்னு கூப்பிட மாட்டியா அபூர்வா?''

''நிச்சயமா கூப்பிடுவேன்... ஆனா, இப்ப இல்லே!''

''ஏன்... இப்ப கூப்பிட்டா என்ன?''

''ரகசியம்... சொல்ல மாட்டேனே...!'' என்று கண்ணடித்து சிரித்தாள் அபூர்வா!

''இதுலேக் கூட ரகசியமா... என்னமோ போ!'' என்று அலுத்துக் கொண்டாள் மாதுரி.

**ரா**கேஷ் முன்பு கைகட்டி நின்றிருந்தான் முருகன். அலுவலகம் முடிந்து எல்லோரும் போய்விட்டிருந்தார்கள்.

'அலுவலகம் முடிந்த பிறகு நீ என்னை வந்துபாரு...' என்றதால், என்னவாயிருக்கும் என்ற கேள்வியோடு வந்து நின்றான் முருகன்.

''உன் வீடு எங்கேயிருக்கு முருகன்?''

''அயனாவரத்துல சார்!''

''எத்தனை குழந்தைங்க?''

''ஒரு பொண்ணு! ஒரு பையன். பையன் எட்டாவது படிக்கிறான். பொண்ணு கல்யாணத்துக்கு நிக்கறா!''

''அட... உனக்கு கல்யாண வயசுல பொண்ணு இருக்கா? உன்னைப் பார்த்தா நம்பவே முடியலியே...''

வெட்கத்துடன் உடல் நெளிந்தபடி சிரித்தான்.

''ஹி...ஹி... பதினெட்டு வயசுலேயே கல்யாணம் ஆயிடுச்சு சார்!''

''உன் வொய்ப்பும் வேலைக்குப் போறாங்களா?''

''இல்லே சார்!''

''அப்ப... குடும்பத்துக்கு உன் வருமானம் மட்டும் தானா?''

''ஆமாம் சார்!''

''இந்த காலத்துல... இவ்வளவு விலைவாசியிலே எப்படி மேனேஜ் பண்ண முடியும்? அதுவும் வயசுக்கு வந்த பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்!''

''என்ன சார் பண்றது. ஏழைங்க பொழைப்பு நாய் பொழைப்பு சார்! எங்க வாழ்க்கையே திண்டாட்டம் தான்!''

''அடடா... கேக்கவே கஷ்டமாயிருக்கே! என்னவோ தெரியலே. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. ஏதாவது உதவி பண்ணணும் போல இருக்கு!''

''சா...ர்!'' என்றான் ஆச்சர்யமுடன்.

''இந்தா... இதுல அஞ்சாயிரம் இருக்கு. அப்பப்ப இதே மாதிரி தருவேன். செலவுக்கு வச்சுக்க. உன் பொண்ணுக்கு நகை வாங்கிப்போடு...!''

''சார்...!'' கண்ணீர் மல்க தடாலென அவன் காலில் விழுந்து வணங்கினான் முருகன்.

''தெய்வம் சார்... நீங்க என் தெய்வம். இந்த காலத்துல இப்படியொரு மனுஷனா? வலிய வந்து கேட்டு உதவிப்பண்ற உங்களோட குணம் வேற யாருக்கு வரும்?''

மென்மையாய் சிரித்தான் ராகேஷ்.

''ரொம்ப புகழ்றே! அதே சமயம் என்னை நல்லாவே புரிஞ்சும் வச்சிருக்கே... தாங்க்ஸ்!''

''ஐயோ.. நீங்க ஏன் சார் எனக்கு தாங்க்ஸ் சொல்லணும்? நான் தான் உங்களுக்கு நன்றி சொல்லணும். உங்களுக்காக என் உயிரையும் தருவேன் சார்!''

''ஓ... எனக்காக என்ன வேணும்னாலும் பண்ணுவியா?''

''நிச்சயமா சார்!''

''நம்பலாமா?''

''என்ன செய்யணும்... சொல்லுங்க சார்!''

''எனக்கு அடையாறுல ஒரு பங்களா இருக்கு. என் மனைவி, குழந்தைகள் அங்கே இருக்காங்க. போரூர்ல ஒரு பங்களா இருக்கு. பிஸினஸ் டென்ஷன்லேர்ந்து அப்பப்ப என்னை ரிலாக்ஸ் பண்ணிக்க அங்கேதான் போவேன்...''

''....''

''ஒரேயடியா மாடர்ன் கேர்ள்ஸையே பார்த்து போரடிச்சு போச்சு முருகன்!''

''சா...ர்!''

''ஈஸி... ஈஸி.. ஏன் வாயைப்

## உலகின் மிகப்பெரிய புத்தர் சிலை!

**க**ன்னியாகுமரியில் 133 அடி உ... திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது போ... பீகார் மாநிலத்தில் 45 ஏக்கர் நிலப்பரப்பி... 'புத்தகயா' என்ற பெயரில் பூங்கா ஒ... அமைக்கப்படுகிறது. 2004-ம் ஆண்டுக்கு... இந்த பூங்கா உருவாகி விடும். இ... பூங்காவில் 152.4 மீட்டர் (488அடி) உ... புத்தர் சிலை அமைக்கப்பட உள்ளது.

வெங்கலத்தினால் செய்யப்படும் இ... புத்தர் சிலை அமைக்கப்பட்டால் இது... உலகின் மிகப்பெரிய புத்தர் சிலை எ... பெருமையை தட்டிச் செல்லு... (அமெரிக்காவில் உள்ள சுதந்திரதே... சிலையின் உயரமே 46 மீட்டர்தான் என்ப... குறிப்பிடத்தக்கது).

பீகாரில் உருவாக்கப்பட உள்ள புத்... சிலை 1,000 ஆண்டுகளுக்கு மேல் நீடித்... நிலைப்பதுடன் 50 அடுக்கு மாடி கட்டி... உயரம் கொண்டதாகவும் இச்சிலை இருக்கு...

புத்த சிலையின் பீடம் 17 அடுக்கு...

...ண்ட தேவாலயம் போன்று இருக்கும். ...00க்கும் மேற்பட்டவர்கள் வரை இதில் தங்கி ...ன்னும் வசதி உண்டு. அது மட்டுமல்லாமல் ...காவினுள் ஒரு லட்சம் ஸ்தூபிகள் ...வைப்படுகிறது. இதே அளவுக்கு சிலைகளும் ...வைப் படுகின்றன.

அழகிய சித்திர வேலைப்பாடுகள் ...ாண்ட மடாலயம், ...ன்னி மடம், ...ருத்துவமனை, ...ளி, மாநாட்டு ...டம், கல்விபயிலக ...யம், விருந்தினர் ...ாளிகைகள், ...ழந்தைகள் பூங்கா ...கியவையும் ...மைக்கப்படுகின்றன.

உலகம் எங்கும் ...ன்பு பரவ வேண்டும். ...த்தர் காட்டிய ...ாதையில் உலகம் நடை போட வேண்டும் என்ற நோக்கத்திலேயே ...த்தர் சிலையும், பூங்காவும் ...மைக்கப்படுகிறது.

- ராதா செல்வம்.



பொனக்கறே? பெரிய இடத்துலே இதெல்லாம் சர்வ சாதாரணம். ரிக்ஷா ஓட்டறவன் கூட தெருவுக்கு ஒரு வப்பாட்டி வச்சிக்கிற காலமிது. ஆனா, நான் எதையும் நிரந்தரமா வச்சுக்கப் போறதில்லே. அப்பப்ப... என் லிக்கருக்கு தொட்டுக்கற ஊறுகாய் மாதிரி. நீ என்ன பண்றே... நம்ம ஆபீஸ்லே இருக்கிற லேடீஸ் பத்தின டீடெய்ல்ஸ், அவங்க ஆக்டிவிட்டீஸ் எல்லாத்தையும் சொல்றே! தவிர, அவங்க என்ன பேசிக்கறாங்க, எங்கேப் போறாங்கன்னு தெரிஞ்சு அப்பப்ப தகவல் தர்றே... ஓக்கே?''

''சார்... நானா?'' என்றான் பயமாய்.

''ஏன்... செய்ய முடியாதுன்னா விடு! அந்தப் பணத்தை இப்படி கொடுத்துடு!''

சற்று நேரம் யோசித்த முருகன், ''சரி.. சார்!'' என்று தலையாட்டினான்.

''எனக்கு... நாளைக்கே, புவனி, காயத்ரி, அபூர்வா, மாதுரி... இவங்களைப் பத்தின டீடெய்ல்ஸ் வேணும்''

''மாதுரியம்மா கூடவா?'' என்றான் கண்கள் விரிய.

''ஏன்... அவளுக்கென்ன?''

''வேணாம் சார்... அந்தம்மா சுத்த தங்கம்!''

''தங்கத்தைதான் உரசிப் பார்க்கணும். அது தான் பெருமை! நான் சொல்றதை மட்டும் செய்... போதும். அநாவசியமா பேசாதே... முக்கியமா இந்த விஷயம் ரகசியமா இருக்கட்டும். புரிஞ்சுதா?'' எச்சரிப்பதுப் போல் சொன்னான்... ராகேஷ்.

## 8

**அ**ன்று ஞாயிற்றுக் கிழமை!

அதிசயமாய் மாதுரி வீட்டிலிருந்தாள். கணவருடன் சமையலறையில் கூடமாட ஒத்தாசை செய்ய முயன்ற போது... வலுக்கட்டாயமாய் அவளை வெளியே அனுப்புவதில் குறியாய் இருந்தார் விக்கிரமன்.

''சொன்னாக் கேளு மாது! எப்பவோ ஒரு நாள் கிடைக்கிற லீவை வேஸ்ட் பண்ணாம... போய் ரெஸ்ட் எடு... போ!''

''ரெஸ்ட் எடுக்கறதா? ம்ஹூம்... இன்னைக்கு சமையல் என்னோடது தான். அதுமட்டுமில்லே... சாப்பிட்டு முடிச்சதும்... நாம குழந்தைகளோட பிக்சர் போறோம். அபிராமியில நல்ல படம் போட்டிருக்கானாம். போன்லேயே ரிசர்வ் பண்ணிடலாம்.'' சிறுகுழந்தையின் சந்தோஷ துள்ளலோடு

அவள் பேசிக் கொண்டே போக... அவ முகபாவங்களை ரசித்தார் விக்கிரமன்.

வாசலில் காலிங் பெல் அலறியது.

விக்கிரமன் நகர முற்பட, மா தடுத்தாள்.

''நான் போய் பார்க்கிறேன்.''

''இன்னைக்கு என்னை ஒரு தி துரும்பைக் கூட எடுத்துப் போட விடமாட் போலிருக்கே?''

''ஆமாய்யா... அதுக்கென்ன இப்ப என்று இடுப்பில் கைவைத் முறைப்பதுப்போல் ஆக்ஷன் செய்துவிட் அடுத்த கணமே தன் செய்கைக்கு நா கலகலவென சிரித்தாள், மாதுரி. விக்கிரமனு அந்த சிரிப்பில் கலந்துக் கொண்டார்.

அதற்குள் மறுபடி காலிங்பெ அழைக்க... ஓடினாள்.

கதவைத் திறந்தவள்... ஆச்சர்யத்தி வாயடைத்துப் போனாள்.

காரணம் அவள் தம்பி பிரேம்குமாரு அவனின் மனைவி சாருலதாவு நின்றிருந்தனர்.

''டேய்... பிரேம்... என்னடாது சொல்லாம, கொள்ளாம திடீர்னு வந் நிக்கறே?''

''வந்தவங்களை வான்னு கூப்பிடா என்ன கேள்வி இது?'' கணவனுக்கு மட்டு கேட்கும் விதமாய் முணுமுணுத்தாள் சாருலத

''வாசல்லேயே நிக்கவச்சு... பேசி அப்படியே திருப்பி அனுப்பிடற பிளானா என்றான் பிரேம்.

''சேச்சே... என்னடாது? இது உன் வீ நான் சொல்லி தான் உள்ளே வரணும் இல்லே... வா... உள்ளே வா! வாம்மா சாரு. நல்லார்க்கியா?''

''அடடே பிரேம்... வா... வா வாம்மா!'' என்று விக்கிரமனும் வரவேற்றார்

சாருலதா வீட்டை கண்களால் அளந்தப உள்ளே வந்தாள்.

''வீடு... ரொம்ப சின்னதுல்லே? இந் வீடு மொத்தமும் எங்கவீட்டு ஹால்லயே அடங்கிடும் போலிருக்கே?'' என்றா சாருலதா அலட்சியமாய்.

''ஆமாம்மா... வீடு சின்னதுதான் மூவாயிரம் வாடகைக்கு இந்த ஏரியாவுல இந் அளவுக்காவது வீடு கிடைக்குதேன்னு சந்தோஷப்பட்டுக்க வேண்டியது தான் உக்காரும்மா... முதல்ல காபி சாப்பிட் குளிச்சிட்டு வந்துடுங்க. டிபன் ரெடியாய்டும் ஒக்கே... மாது... நீ இவங்களை கவனிச்சுக்க. நான் காபி கொண்டு வர்றேன்!'' என்று சொல் விட்டு சமையலறை நோக்கி சென்றா விக்கிரமன்.

''ஒரு டெலிகிராமாவது அனுப்பி அடிக்கலாமில்லே... தங்கறதுக்கு ரூமை கிளீன் ண எதுவாயிருந்திருக்கும்!''

''நான் தான் டெலிகிராம் மாடுத்தேனே!''

''எது... போன மாசம் அனுப்பினியே... தயா? இப்ப வர்றதுக்கு எப்பவோ தர்றே! அதைவிடு! திடீர்னு என்ன... இந்த ரோட ஞாபகம்?''

''இண்டல் பண்ணாதேக்கா! உன்னை எப்பவும் மறக்கலே! ஆனா, நீயும் பாவும் தான் என்னை மறந்துட்டீங்க... என் யாணத்துக்குக் கூட வரலே'' என்றான் த்தமுடன் பிரேம்குமார்.

''சரி... நடந்தது நடந்து போச்சு. இப்ப க்கு அந்த பேச்செல்லாம்?''

''எப்படிக்கா மறக்கமுடியும்? ப்பாவும், நீயுமா சேர்ந்து அத்தை பொண்ணு லாவை என் தலையிலே கட்ட னைச்சிருந்தீங்க. நான் ஆசைப்பட்ட லதாவை பணக்கார வீட்டு பொண்ணுங்கற ரணத்தினாலேயும், வேற திங்கறதாலேயும் எதிர்த்தீங்க. சாரு லேயும் எதிர்ப்பு. வேறு வழியில்லாம னாதைகளைப் போல சொந்தபந்தங்கள் ல்லாம எங்க கல்யாணம் நடந்தது. தையெல்லாம் மறக்க முடியுமாக்கா? ப்படியோ... கல்யாணத்துக்குப் பிறகு ருலதா வீட்லே சமாதானமாய்ட்டாங்க. ப்பாதான் இன்னமும் பிடிவாதமா... முகம் டுத்துக் கூட பேசமாட்டேங்கிறாரு...''

''பணக்காரியா இருந்தா மோசமான ண்ணாதான் இருப்பான்னு அர்த்தமா?'' ருலதா உணர்ச்சி வேகத்தில் பேசினாள்.

''அடடா... ரெண்டு பேருமே என்னை ப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க. சாரு... உன்மேல க்கு எந்த வெறுப்பும் இல்லே, கோபமும் ல்லே. அகிலாவை கல்யாணம் பண்ணிக்க றுத்துட்ட வருத்தம் தான் எங்களுக்கு. த்தபடி எதுவும் இல்லே'' என்றாள் அவள் கையைப் பற்றி சமாதானமாய்.

சாருலதா பதிலேதும் கூறாமல் கையை டுவித்துக் கொண்டாள். அவளுள் மாதுரியின் து ஏகப்பட்ட வெறுப்பு மண்டிக் கிடந்தது. ாதுரியைப் பார்க்கவே அவளுக்கு டிக்கவில்லை.

அதற்குள் விக்கிரமன் காபி கொண்டு ந்தார்.

''எங்கேக்கா... குழந்தைகளைக் ணோம்?''

''ஹேய்...'' என்று சப்தமெழுப்பியபடி ாடிப்படியிலிருந்து ஓடி வந்தனர் கைலாஷும், ஷாலினியும்.

''ஹை... அங்கிள்... எப்ப வந்தீங்க?''

''இப்பதான்... நல்லார்க்கீங்களா?''

''ம்... அங்கிள்... வர்றீங்களா டென்னிஸ் விளையாடலாம்?''

''இப்பதானே வந்தேன்? டயர்டா இருக்கிறேன் கைலாஷ். நாளைக்கு விளையாடலாம். இப்ப நீங்க போய் விளையாடுங்க...'' என்று அனுப்பி வைத்து விட்டு, ''அக்கா... எனக்கு இந்த ஊர்லே டிரான்ஸ்ஃபர் போட்டிருக்காங்க. ஆறுமாசம் தான்... அதுக்குள்ளே சாருவோட சொந்த ஊர் பெங்களூருக்கே டிரான்ஸ்ஃபர் போட்டுர்றேன்னு சொல்லிட்டாங்க. ஸோ... ஆறுமாசம் நாங்க இங்கே தங்கிக்கலாமா?''

''என்னடா கேள்வி இது? மறுபடி சொல்றேன்... இது உன் வீடு!'' என்றாள் மாதுரி.

''அப்புறம்... ஒரு முக்கியமான விஷயம்க்கா! எனக்கு ஆபீஸ்க்கு எட்டுமணிக்கெல்லாம் போயாகணும். சாருவுக்கு சமையல்பத்தி அ..ன்னா, ஆவன்னா கூட தெரியாது. ஸோ எனக்கு எட்டு மணிக்குள்ளே லன்ச்செல்லாம் ஏற்பாடு பண்ணிக் கொடுத்துட்டா... நல்லது.''

''எட்டுமணிக்கெல்லாமா?'' சங்கடமாய் கணவனைப் பார்த்தாள்.

மாதுரி ஒன்பது மணிக்குதான் அலுவலகம் புறப்படுவாள் என்பதால் விக்கிரமனுக்கு லன்ச் ப்ரிப்பேர் பண்ணுவதில் சிரமம் ஏற்பட்டதில்லை. இனி, பிரேமுக்காக ஒரு மணிநேரம் முன்னதாக அல்லவா எந்திரிக்க வேண்டும். பேசாமல் அவனை ஹோட்டலில் சாப்பிட்டுக்க சொல்லிட வேண்டியது தான்.

அவள் வாய் திறக்குமுன் விக்கிரமன் முந்திக் கொண்டார்.

''அந்த கவலையெல்லாம் உனக்கெதுக்கு பிரேம்? சொல்லிட்டேயில்லே... நான் பார்த்துக்கறேன்'' என்றார். மாதுரி கப்சிப்பென்று வாயைப் பொத்திக் கொண்டாள்.

''**ஹூ**ம்... ஆறுமாசம்... இந்த வீட்லே இருந்து அல்லாடணும்னு தலையெழுத்து!''

''ஏன் சாரு புலம்பறே?''

''எனக்கு இந்த வீடே பிடிக்கலே பிரேம்!''

''ஏன்... வீடு நல்லாதானே இருக்கு? விசாலமா, காற்றோட்டமான அறையைதானே நமக்கு ஒதுக்கி தந்திருக்காங்க?''

''வீடுன்னா... வீட்டை மட்டும் சொல்லலே! இந்த வீட்டு மனுஷங்களையும் சேர்த்துதான் சொல்றேன்'' என்றாள் அலட்சியமாக.

''ப்ச்... இன்னும் பழசையே நினைச்சிட்டிருக்கியா? அக்கா நல்லவ சாரு! அவதான் வார் கேட்டுட்டாளில்லே?''

''ஒரே வார்த்தையிலே எல்லாத்தையும் மறந்திட முடியுமா? எவ்வளவு கேவலமா என்னை எடைபோட்டிருந்தா... கல்யாணத்துக் கூட வராம இருந்திருப்பா?''

''இதப்பார்... நாம இப்ப இருக்கிறது அக்கா வீட்லே! அதை மனசுல வச்சுக்க...''

''ப்பா... உங்கக்காவைப்பத்தி ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதே!''

''சரி... சரி... டைமாயிடுச்சி... படுக்கையை விட்டு எந்திரி?''

''எந்திரிச்சி... நான் என்ன பண்ண? இன்னும் பெட் காபிகூட வரலே!''

''இந்த வீட்லே சர்வண்ட் யாரும் இல்லே சாரு? நீயே கிச்சனுக்கு போய் எடுத்துக்கிட்டு வாயேன்!''

''கடவுளே.. என்தலையெழுத்து!''என்று தலையில் அடித்தபடி கட்டிலை விட்டு இறங்கினாள்.

மாடியிலிருந்து இறங்கிய சாரு... ''என்னங்க... என்னங்க...'' என்ற குரல்கேட்டு நின்றாள்.

மாதுரியின் குரல் தான். பாத்ரூமில் குளித்து கொண்டிருந்தாள்.

''என்ன மாது?'' என்றார், விக்கிரமன் கதவுக்கு வெளியே.

''டவல் எடுக்க மறந்திட்டேங்க... ப்ளீஸ்.. எடுத்துக் கொடுங்களேன்!''

விக்கிரமன் அடுத்த கணம் டவலோடு பாத்ரூம் கதவைத் தட்டினார்.

கதவு திறந்தது. விக்கிரமன் டவலை நீட்ட... அவர் கையோடு சேர்த்து உள்ளே இழுத்துக் கொண்டாள் மாதுரி.

ஒரு சில நிமிடங்கள் கடந்த பிறகு... வெளியில் வந்த விக்கிரமன் உடலெங்கும் சோப்பு நுரை. ஆடு திருடிய கள்ளன் போலிருந்தது அவர் முகம்.

அதைப் பார்த்த சாருலதா முகம் சுளித்தாள்.

'சே... என்ன விவஸ்தை கெட்ட ஜென்மம்? வீட்டில் இத்தனைப் பேர் இருக்கிறார்களே... என்கிற இங்கிதம் கூட இல்லாமல்... நேற்றுதான் திருமணமானதுப் போல் கொஞ்சுகிறார்களே!'

அவர்களின் அந்நியோன்யம் சாருவுக்கு எரிச்சலை உண்டாக்கியது.

கிச்சனிற்குள் சென்ற சாரு இன்னும் ஆச்சர்யப்பட்டாள்.

விக்கிரமன் தான் சமையல் வேலையெல்லாம் செய்து கொண்டிருந்தார்.

ஓஹோ... இந்த வீட்டில் இவர் தலை... அவள் தலைவரா?

அவளைப் பார்த்த விக்கிரம... புன்னகைத்தார்.

''என்னம்மா... நல்லா தூங்கினியா? ... ஊர் கொசுங்க உன்னை நிம்மதியா ... விட்டுதா?''

''ம்... காபி வேணும்!'' என்றாள் ஒற்... வரியில்.

''இதோ!'' என்று நிமிடத்தில் கலக்... தந்தார்.

''இங்கே... சமையலெல்லாம் நீங்... தானா?''

''ஆமாம்!''

''ஸோ... வேறுல் பார்க்க வேண்டி... வேலையெல்லாம் நீங்க பார்க்கறீங்... ஜென்ட்ஸ் பண்ற காரியங்களை... ஐ... டவல் தர்ற கையை இழுத்து சேட்டை பண்... ஆம்பளைத்தனமான வேலையெல்லாம் உங்... வொய்ஃப் பண்றாங்க... அப்படித்தானே... என்று காஷுவலாய் கேட்டு விட்டு போ... விட்டாள்.

அறைபட்ட நிறுவில் போகு... அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த... ...ரமன்.

'இவள் பேசுவதை மாது அறிந்தால் ... அளவு வேதனைப்படுவாள்' கலங்கினார்.

## 9

வீடு நிசப்தமாய் இருந்தது. மாதுரியும், ...மும் அலுவலகம் சென்றுவிட, ...ந்தைகள் பள்ளிக்கு புறப்பட்டு ...டிருந்தனர்.

வீட்டில் விக்கிரமனும், சாருலதாவும் ...டுமே!

விக்கிரமன் அழுக்குத் துணிகளை ...ஷிங் மெஷினில் போட்டுக் ...ண்டிருந்தார்.

''அட... இந்த வேலையும் உங்களோடது ...னா?'' என்று கேட்டபடி அங்கு வந்தாள் ...லதா.

பதில் கூறாமல் சிரித்தார் விக்கிரமன்.

''ஏன்... இந்த வேலைக்கெல்லாம் ஒரு ...ளைப் போட்டுக்கலாமே!''

''எதுக்கும்மா! நான் வீட்லே சும்மா ...னே இருக்கிறேன்!''

''அதான்... ஏன் சும்மாயிருக்கணும்? நீங்க ஏன் வேலைக்குப் போகலே?''

''குழந்தைகளை பார்த்துக்க ஆளில்லே... அதனால வேலையை நிறுத்திட்டேன்!''

''குழந்தைங்களை பொதுவா அம்மாதான் பார்த்துப்பாங்க. அவங்க சீவையன் பண்ணிட்டு வீட்டு பொறுப்பை கவனிக்கலாமில்லே!''

''யார் கவனிச்சுக்கிட்டா என்னம்மா?''

''இல்லே... சமையல்லேர்ந்து அத்தனை வேலையும் நீங்க தான் செய்யறீங்க. பார்க்க சங்கடமாயிருக்கு. எங்க வீட்லே நாலஞ்சு சர்வண்ட் இருக்காங்க. அத்தனை பேருமே லேடீஸ்தான். ஆண்களும், பெண்களும் இருக்க வேண்டிய இடத்துல இருந்தாதான் மதிப்பு இல்லையா?''

''இப்ப... இந்த வீட்லே யாருக்கும் மரியாதை குறைஞ்சிட்டமாதிரி தெரியலியே...!''

''என்னமோ... மனசு கேக்கலே... சொல்லேன். உங்களைப் பார்க்க சங்கடமாயிருந்துச்சு. பொம்பளை மாதிரி வீட்டு வேலையெல்லாம் செய்யறாரேன்னு வருத்தமாயிருந்துச்சு!'' என்றாள் அவரை ஓரக் கண்ணால் பார்த்தபடி.

''ஆம்பளைங்க பார்க்கிற வேலை, பொம்பளைங்க பார்க்கிற வேலைன்னு எதுவுமே இல்லேம்மா! என்ன செய்யறோம், யாருக்காக செய்யறோம்கிறதுதான் முக்கியம். எவ்வளவு பெரிய ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லேயும் ஜென்ட்ஸ் தான் சமைப்பாங்க. அதை அவங்க கௌரவ குறைச்சலா நினைக்கிறாங்களா என்ன? நான் நம்ம வீட்லேதானே சமைக்கிறேன்? இதிலே சங்கடப்பட என்னம்மா இருக்கு? அப்படிப் பார்க்கப் போனா... மென்மையான பெண்கள் விமானம் ஓட்டலாமா? மெக்கானிக் ஷாப்பில் வேலை செய்யலாமா? எல்லா வேலையும், எல்லாருமே செய்யலாம்! இன்னொரு விஷயம் தெரியுமா? சமீபத்திலே பத்திரிகையிலே படிச்சேன். ஒரு பெண்மணி இடுகாட்டிலே வெட்டியான் வேலை செய்யறாங்களாம். இதுக்கென்ன சொல்றே?'' என்றார் புன்னகை மாறாமல்.

'சே... இந்த ஆளை மாத்தவே முடியாது!' என்கிற எரிச்சல் எழ... எதுவும் பேசாமல் அகன்றாள் சாருலதா.

விக்கிரமன் அவளை, விநோதமாய் பார்த்தார்.

'இந்த பெண் எதற்காக இப்படி பேசுகிறாள்? இவள் மனதில் என்ன இருக்கிறது? இவள் பேச்சு இயல்பாய்

## கச்சல் தீவில் காதலியுடன் ராகுல்

புதிய மில்லினியம் ஆண்டி... முதல் சூரியோதயம் கச்சல் தீவில் தா... தோன்றியது. இந்த முத... சூரியோதயத்தை காண உலகெங்கு... இருக்கும் முக்கிய பிரமுகர்கள் கச்ச... தீவுக்குள் திரண்டனர். இதில் முக்கி... பிரபலங்களின் வாரிசுகளும் அடங்கும்... அந்த வாரிசுகள் தங்கள் காதலியுடன்... உல்லாசமாக பொழு... போக்...



...ந்த குட்டித் தீவில் சிறகடித்து பறந்து ...ந்தன.

இந்த இளம் காதல் ஜோடிகளில் ...ானியா காந்தியின் மகன் ராகுலும் ...கடித்து பறந்தார். பொன்னிற முடியுடன் ...ணப்பட்ட அவருடன் தங்கத்தில் ...ர்த்தெடுத்த பொற்சிலையாக ஒரு அழகு ...வதையும் காட்சி அளித்தார். அவர் ...வறுமல்லாரும் அல்ல, ராகுலின் கம்போடிய ...தல் குயில். இருவரையும் ஒருசேர பார்த்த ...த்திரிகை நிருபர்களும், புகைப்படக் ...ாரர்களும் வியந்து நிற்க அடுத்த கணமே ...ங்கள் காமிராக்குள் அவர்களை பதிய ...வைத்து கொண்டனர்.

அவ்வளவுதான் ராகுல் பாதுகாப்புக்கு ...ந்திருந்த கறுப்பு பூனை படையினர் ...ாதுகாப்பு வளையம் போட்டு விட, ...ூதையும் மீறி ராகுலையும் அவரது ...தலியையும் புகைப்படக்காரர்கள் அழகாக ...டம்பிடித்து பத்திரிகைகளிலும் பிரசுரித்து ...ிட்டனர்.

ராகுலுடன் திரிவதன் மூலம் ...ம்போடியா காதல் குயில் இன்னொரு ...யானாவாக பத்திரிகை புகைப்படக் ...ாரர்களுக்கு காட்சி தருகிறார்.

இல்லையே!'

அவருள் ஒரு பட்சி, 'கவனம், கவனம்' என்று ஓயாமல் அலறிக் கொண்டிருந்தது.

''அபூர்வா...!''

மாதுரி அழைத்ததும் திரும்பினாள்.

''என்ன மாது?''

''தலைய வலிக்குது. காபி சாப்பிட்டா தேவலாம். வர்றியா கேன்டீன் போய்ட்டு வரலாம்!''

''எப்படா கூப்பிடுவேன்னு பார்த்தேன்!'' என்றபடி எழுந்துக் கொண்டாள்.

கேன்டீனில் கூட்டம் அதிகமில்லை. ஒரு ஓரமாய் அமர்ந்தபடி காபி சாப்பிட்டனர்.

''உன் மாமியாருக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னியே! இப்ப எப்படியிருக்கு?''

''இப்ப பரவாயில்லே! ஆனா ஒரு நாள் போல ஒரு நாள் இல்லே... பாவம் வயசான காலத்திலே தானே ஊர்லே இருக்கிற நோயெல்லாம் தேடிவரும்?''

''உன் ஹஸ்பன்ட் போட்டோ கேட்டேனே... கொண்டு வந்தியா?''

''மறந்துட்டேன் மாதுரி... நாளைக்கு கொண்டு வர்றேன்''

''இல்லேன்னா... விடு! ஒரு நாளைக்கு வீட்டுக்கே வந்து பார்த்துக்கறேன்.''

''ரொம்ப கஷ்டப்படாதே! நாளைக்கு கண்டிப்பா போட்டோ கொண்டு வர்றேன்!''

''ஏன்... நான் உன் வீட்டுக்கு வந்தா என்ன? ஏன் அவாய்ட் பண்றே?''

''இப்ப சூழ்நிலை சரியில்லை மாதுரி! ஒரு நாளைக்கு நிச்சயமா நானே உன்னை இன்வைட் பண்ணி பெரிய விருந்தே வைப்பேன்!''

''சரி... அதைவிடு! உன் வெட்டிங்டே எப்போது?''

''அது... வந்து ஜனவரி 28! சரி.. அதைவிடு. இன்னைக்கு நம்ம எம்.டி. ஏன் ஆபீஸ்க்கு வரலே?''

''என்னைக் கேட்டா... எனக்கென்னத் தெரியும்?''

''அவர் ஒரு நாள் வரலேன்னாக் கூட ஆபீஸ் ஆபீஸாகவே இல்லே. மூலவிக்கிரகம் இல்லாத கோவில் மாதிரி இருக்கு!''

''ஏண்டி இப்படி ஜொள்ளு விடறே? இதுக்காகவாவது நான் உன் ஹஸ்பன்டை கண்டிப்பா பார்த்து பேசியே ஆகணும்''

''அவர் நம்ப மாட்டார்!''

''உன் மேல அவ்வளவு நம்பிக்கை!''

''ஆமாம்!''

''அப்படிப்பட்டவருக்கு நீ துரோ... பண்றே அபூர்வா!''

''சேச்சே... எம்.டி. அழகாயிருக்க... அந்த அழகை ரசிக்கிறது தப்பா?''

''என்னம்மா' காபி சாப்பிட்டு வந்தீங்களா?'' என்றபடி எதிரே வந்தான் பியூன் முருகன்.

''ஆமாம்...'' என்ற அபூர்வா, ''என்ன முருகன் இன்னைக்கு எம்.டி. ஆபீஸ்... வரலே?''

''அவங்க மனைவிக்கு உடம்பு சரியில்லையாம்! அதனால் தான் காலையிலே வரலே. இன்னும் அரை மணி நேரத்து... வந்துடுவார்!'' என்றான் அபூர்வாவின் முகத்... கூர்ந்து கவனித்து.

அலுவலகத்தில் ஓரிருவரைத் தவி... வேறு யாருமில்லை. முக்கியமா... கொட்டேஷன் ஒன்றை ஹெட் ஆபீஸ்... உடனடியாக அனுப்பியாக வேண்டி... கட்டாயம் இருந்ததால் மாதுரி கூடுதலாய் ஒ... மணி நேரம் வேலை பார்க்க வேண்டியிருந்த...

மாலை அலுவலகம் முடியும் தருவாயி... ராகேஷ் அவளை அழைத்து, கூடுதலாய் நேர... ஒதுக்கி வேலை முடித்துவிட்டுச் செல்லுமா... கேட்டுக் கொண்டபோது பயம் ஒன்று அவ... அடிவயிற்றை ஜில்லிட வைத்தது.

'ஏற்கனவே அவனைப் பற்றி நல்... அபிப்ராயமில்லை. அவன் பேச்சு... பார்வையும் அவன் நல்லவனா, கெட்டவ... என்ற தீராத குழப்பத்தை ஏற்படுத்... விட்டிருந்தது. நிறைய சினிமாவில், கதை... புத்தகங்களில் வருவதைப் போல... இவ... எல்லோரையும் அனுப்பிவிட்டு என்னிட... தவறாக நடக்க முயற்சிப்பானோ?' இப்படியான சந்தேகம் தான் எழுந்தது.

ஆனால், அந்த சந்தேகம் அடுத்... பத்தாவது நிமிடத்தில் மறைந்துப் போனது.

எம்.டி. அவளை இருக்க வைத்ததி... தவறான நோக்கம் எதுவுமில்லை. நிஜமாகவே... அவசர வேலையின் பொருட்டே அவளை... கூடுதலாய் பணி செய்ய வேண்டி... கேட்டு... கொண்டது. அவள் மட்டுமின்றி, மானேஜரும்... டைப்பிஸ்ட்டும் உடனிருந்து பணிபுரிந்தனர்.

வேலை முடிந்து புறப்படும் போது... பூமியை இருள் தழுவிக் கொண்டு... பயமுறுத்தியது.

பஸ் நிறுத்தத்தில் கூட்டம் ஏகமாய்... இருந்தது. அவள் செல்லும் பஸ் வந்தும் ஏ... முடியாதளவு கூட்டம் பிதுங்கி வழிந்தது... இருக்க இருக்க... நேரம் ஆகிக் கொண்டே... போனது. பஸ்ஸிற்காக காத்திருப்போ... கூட்டமும் அதிகமாகிக் கொண்டேப் போனது...

எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது? ...டோவில் போய்விடலாம் என்று ...டோவை அழைத்தால்... ''அம்பத்தூரா? ...வரலேம்மா! திரும்பி வர சவாரி ...டைக்காது. வண்டியை வெறுமனே தான் ...விட்டு வரணும்'' என்றனர் சொல்லி ...வைத்தாற்போல் எல்லா ஆட்டோ ...ரவர்களும்.

மாதுரிக்கு டென்ஷன் கூடிக் கொண்டேப் ...ன அந்த சூழ்நிலையில் தான்... அவளைத் ...டி சென்று நின்ற காண்டஸா காரைப் ...த்தாள். அதிலிருந்து இறங்கிய ராகேஷ் ...ளை நோக்கி வந்தான்.

மாதுரிக்கு இதயம் படபடத்தது.

''ஹலோ... மேடம்... இன்னுமா நீங்க ...கலே? மைகாட்... ரொம்ப ...மாய்டுச்சே?'' வியப்பாய் கேட்டான்.

''இப்ப பஸ் வந்திடும் சார்...''

''பஸ் வந்தாலும் எப்படி உங்களால ஏற ...யும்? எவ்வளவு கூட்டம் பாருங்க! ஸாரி... ...னால தான் உங்களுக்கு லேட்டாயிடுச்சு!''

''பரவாயில்லே சார்!''

''சரி... வாங்க... நான் உங்களை என் ...லேயே டிராப் பண்ணிடறேன்!''

''வேணாம் சார்! நான் ஆட்டோ பிடிச்சி ...ய்டறேன்''

''நான் அந்த வழியாதான் போகிறேன். ...ங்க... சங்கடப்படாதீங்க...!'' என்று ...ப்புறுத்தவும் அதற்கு மேல் மறுப்பது ...நாகரீகம் என்று புரிந்தது. வேறு வழியின்றி ...ரில் ஏறிக் கொண்டாள்.

பத்து நிமிடம் வரை அவன் எதுவும் ...சவில்லை.

மாதுரிக்கு வேண்டாத ...ற்பனையெல்லாம் கண்முன் தோன்றி ...யமுறுத்தியது.

''உங்களுக்கு எத்தனை குழந்தைங்க ...துரி?''

''ரெண்டு!''

''பார்த்தா தெரியலே...!''

''என்ன?''

''ரெண்டு குழந்தைகளுக்கு அம்மான்னு ...சான்னா நம்ப முடியலே! என்னடா இவன் ...ப்படியெல்லாம் பேசறானேன்னு ...னைக்காதீங்க. நான் கொஞ்சம் ஃப்ரீ டைப்! ...னசுல தோன்றதை உடனே வெளியே ...காட்டிட்டு டென்ஷன் இல்லாம ...ருப்பவன்.''

''....'' முகம் சுளித்தாள். அதை ...ரக்கண்ணால் கவனித்தான்.

''உங்க ஹஸ்பன்ட் பேரென்ன?''

''விக்கிரமன்!''

''குட் நேம்! என் வொய்ஃப் பேரு பூஜா!! எனக்கும் ரெண்டு குழந்தைங்க... வாத்ஸன், ராகுல்னு பேரு...!''

''அப்படியா?'' என்றாள் அசுவாரஸ்யமாய்.

''அம்பத்தூர்ல... எந்த ஏரியா?''

''விம்கோ நகர்!''

''ஓ....!'' என்று யோசித்தவன் ஒரு ஓரமாய் காரை நிறுத்தினான்.

''இறங்கிக்குங்க மாதுரி...!''

''இது...!'' என்று அந்த இடத்தை சுற்று முற்றும் பார்த்தாள்.

''இது உங்க ஏரியா இல்லை! இங்கேர்ந்து ஆட்டோவுல பத்து நிமிஷம் போனா... விம்கோ நகர் வந்துவிடும். என்னடா இவன் நடுவழியிலே இறக்கிட்டுப் போறானேன்னு குழம்பிப் போயிருப்பீங்க. காரணம் இருக்கு. பொதுவா... இருட்டிப் போன நேரத்துலே வேலைக்கு போன, அதுவும் கல்யாணமான லேடி ஒரு ஆணோட கார்ல வந்து இறங்கினா... பார்க்கிறவங்க பலவிதமா பேசுவாங்க! உங்க வீட்லே உள்ளவங்க நல்லவங்களா இருக்கலாம். உங்களை நல்லா புரிஞ்சு வச்சிருக்கலாம். ஆனால், வெளியாட்கள் இதைப் பார்த்தா தப்பா தான் பேசுவாங்க. ஒரு ஆம்பளைக்கு கெட்ட பேர் வரலாம். ஆனா, பொம்பளைக்கு வரக்கூடாது. அதுவும் கண்டிப்பா என்னால வரவேக் கூடாது. பார்த்து... பத்திரமா வீடு போய் சேருங்க மாதுரி!'' நிதானமாய், பொறுப்பான ஒரு நல்ல ஆதர்ஷ மனிதனாய் அவன் பேசப் பேச... திகைத்துப் போனாள் மாதுரி.

அவனைப் பற்றி தப்பும் தவறுமாய் கட்டியிருந்த மனக்கோட்டை சடசடவென சரிந்து விழுந்து... ஹாவென மனசுள் நிம்மதி பரவியது.

எங்கிருந்தோ தென்றல் வந்து அவளை தழுவி சந்தோஷப்படுத்திற்று.

இப்போது அவனைப் பார்த்த பார்வையில் நிஜமான நட்பும், கனிவும் தேக்கியிருந்தாள் மாதுரி.

10

துணியை அயர்ன் பண்ணிக் கொண்டிருந்த கணவரை ஆச்சர்யமாகப் பார்த்தாள் மாதுரி.

''என்னங்க இது? நீங்க அயர்ன் பண்ணிட்டிருக்கீங்க? வழக்கமா வண்டிக்காரன் வருவானே... அவன் வரலையா?''

''அவன் வந்து வாங்கிட்டுப் போய்.

துணிகளையும் அயர்ன் பண்ணி கொடுத்திட்டுப் போய்ட்டான்!''

''அப்ப... இது? அட... இதென்ன கரிதார் மாதிரியிருக்கு. ஆமா கரிதார் தான்... இது சாருவோடதில்லே?''

''ம்...!''

''என்னங்க... அவளோட துணியெல்லாம் நீங்கப்போய்...''

''இதிலென்னம்மா இருக்கு? உனக்கு ஆபிஸ்க்கு நேரமாகலே...? கிளம்பு!''

''சும்மா மழுப்பாதீங்க! உங்களை யார் இந்த வேலைய செய்யச் சொன்னது?'' என்றாள் கோபமாக.


''சத்தமா பேசாதே மாது! அயர்ன் பண்றவன் வந்துட்டுப் போய்ட்டபிறகுதான்... சாரு இந்த டிரஸ்ஸை அயர்ன் பண்ணனும்னு எடுத்துக்கிட்டு வந்தா! ஆள் வந்து போய்ட்டானேம்மான்னு சொன்னேன். இன்னைக்கு பிரேமோட வெளியே போறாளாம். அதனால நீங்களாவது அயர்ன் பண்ணிக் கொடுங்கன்னு...''

''அதனால... நீங்களும் வாங்கி தேய்க்க ஆரம்பிச்சிட்டீங்க... அப்படித்தானே?''

''ப்ளீஸ்... மாது... சத்தமா பேசாதே! அவ காதிலே விழப்போகுது!''

''எத்தனை நாளைக்கு அடங்கிப் போக முடியும்? என் புருஷனை அவ வேலை வாங்கறதை...'' குரல் அடைத்துக் கொண்டது.

''மாது... என்ன இது சின்னக்குழந்தை மாதிரி! சாரு மட்டும் யாரு? வெளியாளா? இல்லையே! பிரேமோட வொய்ஃப்! எனக்கு தங்கை மாதிரி. அவ செல்லமா வளர்ந்தப் பொண்ணு! மனசிலே ஒன்னுமில்லாம பேசறா! பழகறா. மனசிலே கல்மிஷமில்லாம இதை கொஞ்சம் அயர்ன் பண்ணிக் கொடுங்கன்னு கேக்கறா. இதையெல்லாம் பெரிசுப் பண்ணாதே! ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பிக்கற போதுதான்... பிரச்சினைகளும்



...டிக்கும். நாம அதற்கு இடங்கொடுக்கக் ...து மாது!''

''அதுக்காக உங்களை மட்டந்தட்ட ...க்கறதுக்கு இடம்தரச் சொல்றீங்களா?''

''ப்ளீஸ் மாது... நாவே தப்பா ...னக்காதப்ப... நீ ஏன் ஃபீல் பண்றே?''

''என்னா... நீங்க வேற... நான் வேற ...லே!''

''நீ என்னை புரிஞ்சுக்கிட்டிருக்கே ...லே... அது போதும். கிளம்பு... ஆபீஸ்க்கு நேரமாகுதே...''

''இன்னொரு முறை அவ இந்த மாதிரி அயர்ன் பண்ணச் சொன்னா... செய்யக் கூடாது!''

''சரி... கிளம்பும்மா!''

மாதுரி புறப்பட்ட நொடி... சாருலதா எதிரே வந்தாள்.

''ஆபீஸ் கிளம்பிட்டீங்களா?'' என்று ஃபார்மாலிட்டிக்கு அவளிடம் ஒரு வார்த்தை பேசிவிட்டு விக்கிரமனிடம் வந்தாள்.

''அயர்ன் பண்ணியாச்சா? தேங்க்ஸ்... ம்... அப்புறம்... நாங்க வெளியே போகிறோம். மதியம் நைட்டுக்கு தான் திரும்புவோம். மதியம் எங்களுக்கு சேர்த்து சமைத்திட வேண்டாம். நைட்டுக்கு எனக்கு ஆலுபரோட்டா பண்ணித்தர்றீங்களா? பிரேமுக்கு தோசை போதுமாம். குருமா பண்ணிடுங்க. அன்னைக்கு குருமாவுல காரம் கொஞ்சம் அதிகம். குறைச்சிடுங்க... வரட்டுமா?'' என்று துணிகளை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

மாதுரி கண்களில் நீர் மல்க... கணவனை வெறித்துப் பார்த்தாள்.

**மா**ர்கழி மாதம் பிறக்க இன்னும் பதினைந்து நாட்களே இருந்தபடியால் காற்றில் ஈவி இருந்தது.

இடம்... மொட்டைமாடி!

மாதுரி கைகளை கட்டிக் கொண்டு... முதுகில் சிவப்பு விளக்கை பொருத்திக் கொண்டு கடந்த வாகனங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னக்கா? ஏதோ பேசணும்னு அழைச்சிட்டு வந்தே! இப்படி மௌனமா இருந்தா என்ன அர்த்தம்?" என்றான் பிரேம்.

"நீ என்னை தப்பா நினைச்சிடமாட்டியே?"

"எதுக்கு?" என்றான் கண்களை இடுக்கி...

"நான் பேசப்போற விஷயத்துக்காக..."

"என்னன்னு முதல்ல சொல்லு!"

"உங்க மாமாவைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"அற்புதமான மனிதர். அவரை கணவராக அடைய நீ ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்கணும்!"

"நீ அவரை இந்தளவு உயர்வா நினைச்சி இருப்பதை எண்ணி சந்தோஷப்படறேன். ஆனா, சாருலதா அப்படி நினைக்கலியேங்கறப்ப... மனசுக்கு வேதனையா இருக்கு பிரேம்!"

"என்னக்கா சொல்றே?"

"ஆமாம் பிரேம்! என் புருஷனை அவ மதிக்கலே! மதிச்சிருந்தா... அவரை ஒரு வேலைக்காரன் மாதிரி ட்ரீட் பண்ணியிருக்க மாட்டா!"

"...."

"அவரைப் போய் இவளோட துணியக் கொடுத்து அயர்ன் பண்ணச் சொல்றா! இது வேணும், அது வேணும்னு விதவிதமா சமைச்சு தரச் சொல்றா! இதை வாங்கிட்டு வா... அதை வாங்கிட்டு வான்னு கடைக்கு அனுப்பறா... என்னடா... இதெல்லாம்?"

"எனக்கு ஒண்ணும் புரியலேக்கா... சாருலதா மேல குற்றம் சுமத்துற அளவுக்கு... அவ என்ன தப்பு பண்ணினாங்கறதே புரியலே!"

"என்னடா சொல்றே? என் புருஷனை அவ வேலை வாங்கறது தப்பில்லையா?" ஆவேசமாய் கேட்டாள்.

"இல்லே! சாருலதா... வசதியா வாழ்ந்தப் பொண்ணு! அவளுக்கு செருப்பை மாட்டிவிடக்கூட வேலைக்காரிதான் செய்யணும். அப்படி வளர்ந்தப் பொண்ணு கோடீஸ்வரன் வீட்டு பொண்ணு என்ன காதலிச்சி, வீட்டை எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டது பெரிய விஷயம். மாமனார் எவ்வளவோ வற்புறுத்தியும் என் வேலைய விடாம... இதோ இன்னைக்கு டிரான்ஸ்ஃபர்ல இங்கே வந்து அல்லாடு... உத்தியோகம் புருஷலட்சணம். எங்க... பிள்ளைகளை கவனிச்சுக்கணும்ங்கறதுக்... அவசரப்பட்டு வேலைய ராஜி... பண்ணிடாதேன்னு சொன்னவளே சாரு... தான்! தன் புருஷன் எந்த நிலையிலும் சுயகௌரவத்தை விட்டுத் தரக்கூடாதுங்கற... விடாப்பிடியா இருக்கிறவ!

சாருலதா செல்லமா வளர்ந்தவ! இ... வீட்லே வேலைக்காரங்களே இல்... நடைமுறைக்கு விரோதமா நீ ஆபீஸ்... போயிடறே! மாமா, வீட்டுப் பொறுப்... ஏத்துக்கிட்டார். சாருவுக்கு தனக்கு ஏதா... வேணும்னு நினைச்சா அவ யாரைப் போ... கேப்பா? நீ வீட்லே இருந்தா... உன்... கேக்கலாம். உனக்கு பதில் மாமாதானே இ... எல்லாமே! அதனால அவ அவரைக் கேட்கு... இதிலென்னக்கா தப்பு?"

பிரேம் பேசப் பேச விக்கித்துப் போனா... மாதுரி.

"ஒக்கே... அப்படியே இருக்கட்டும்... ஆனா சாருலதா பொண்ணுதானே? உனக்க... வசதி வாய்ப்புகளை உதறிட்டு வந்தவ தானே... உனக்காக இத்தனை படி இறங்கி வந்தவ... இந்த வீட்லே தனக்காக தன் வேலையக் கூட... செய்துக்கக் கூடாதா?"

"அக்கா... எதுவாயிருந்தாலு... வெளிப்படையா சொல்லிடு. கூடப் பொறு... அக்காவாச்சேன்னு தான் எல்லாத்தையு... மறந்துட்டு உன்னைத் தேடி வந்தேன். நாங்க... இங்கே இருக்கிறது பிடிக்கலேன்... சொல்லிடு... இப்பவே போய்டறோம்!"

"பிரேம்... நான் சொல்றதை நீ தப்... புரிஞ்சுக்கிட்டே..."

"இல்லேக்கா... சரியா தா... புரிஞ்சுக்கிட்டேன். உனக்கு இன்னமும் சா... மேல வெறுப்புதான். அதனால தான் அவ எ... பண்ணினாலும் தப்பாவேத் தெரியுது... வேணாங்க்கா... இந்த பிரச்சினையே... வேணாம். நாங்க இன்னைக்கே உன் வீட்டை... விட்டுப் போய்டறோம்" என்றான் பிரேம்.

"அவசரப்படாதே பிரேம்..."

அதுவரை இவர்க... பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்... விக்கிரமன் அருகில் வந்து பிரேமின் கையை... பற்றிக் கொண்டார்.

"வேணாம் பிரேம்! நீ எங்கேயும் போக... வேண்டாம். மாதுரிக்கு என்மேல பாசம்... ...கம். அதனால தான் இந்த பிரச்சினைய ...ரிக பண்ணிட்டா! மாதுரி உன்கிட்டே ...தைப்பத்தி கேட்டது தப்புதான். அதுக்காக ...ச சார்பிலே உன்கிட்டே நான் மன்னிப்பு ...கட்டுக்கறேன். சாருலதா என் தங்கை. ...வளுக்காக எந்த வேலையும் செய்யறேன். நீ ...ரூமுக்குப் போ!"

"...."

"அட... நான் சொன்னாக்கூட கேக்க ...ட்டியா? போப்பா...!"

பிரேம் அரைமனதோடு அங்கிருந்து ...கன்றான்.

அத்தனையும் படிக்கட்டில் நின்று ஒட்டுக் ...கேட்ட சாருலதா மனதிற்குள் கறுவிக் ...கொண்டாள்.

'என் மேல உனக்கு இவ்வளவு ...வெறுப்பா? நான் யாருன்னு உனக்குத் ...தெரியாது. இந்த சாருலதா யாருன்னு உனக்கு ...காட்டறேன். எல்லாரும் உன்னை வெறுத்து ...ஒதுக்கற அளவுக்கு செய்யறேனா... ...இல்லையாப் பார்!' பிரேம் வருவதுத் ...தெரிந்ததும் ஓசை எழுப்பாமல் இறங்கி போய் ...விட்டாள்.

மாதுரி கணவனை வேதனையோடு பார்த்தாள்.

"நீங்க ஏன் அவன் கிட்டே மன்னிப்பெல்லாம் கேக்கறீங்க?"

"உன் மனசு எனக்குப் புரியுது மாது! ஆறு மாசத்துல போகப்போறவங்க... அதுக்குள்ளே எதுக்கு மனஸ்தாபம்? உனக்கிருக்கிற ஒரே ரத்த உறவு உன் தம்பி தான். என் பொருட்டு அவனையும் நீ பகைச்சுக்கறதிலே எனக்கு விருப்பமில்லே மாது! இந்த பிரச்சினைய இதோட மறந்திடும்மா!"

மாதுரி அதற்கு மேல் தாங்க முடியாமல் கணவரின் தோளில் சாய்ந்து விசும்பினாள்.

## 11

**கை**லாஷ், ஷாலினியோடு கேரம் விளையாடிக் கொண்டிருந்தாள் சாருலதா.

"நாளைக்கு ஸ்கூல் லீவுதானே கைலாஷ்?"

"இல்லே ஆன்ட்டி! ஆஃப் டே இருக்கு!"

"அப்படியா? சரி... ஸ்கூல் விட்டு வந்ததும் நாம மூணு பேரும் சில்ட்ரன்ஸ் பார்க் போகலாமா?"

"நிஜமாவா சொல்றீங்க?"

"ம்... ஏன்... நம்பிக்கை வரலியா?"

"நம்பறோம் ஆன்ட்டி... ஹை... நாளைக்கு செம ஜாலிதான்!"

"நீங்க ரெண்டு பேரும் ஏன் வீட்டோடு அடைஞ்சே கிடக்கறீங்க? எல்லா வீட்லேயும் வீக் எண்டுல குழந்தைகளோட பிக்னிக் போறாங்க... இந்த வீட்லே மட்டும் தான் ஜெயில் கைதிங்க மாதிரி உங்களை அடைச்சு வச்சிருக்காங்க!"

கைலாஷும், ஷாலினியும் ஒருவரை ஒருவர் கவலையுடன் பார்த்துக் கொண்டனர்.

"ஆமா ஆன்ட்டி... எங்களை யாருமே வெளியே கூட்டிக்கிட்டுப் போறதில்லே! மம்மி எப்பவும் வீட்டிலே இருக்கிறதேயில்லே... இந்த டாடியாவது அழைச்சுட்டுப் போகலாமில்லே! மம்மியில்லாம என்ன என்டர்டெய்ன்மென்ட் வேண்டிக்கிடக்குன்னு அடக்கிடறார்."

"உங்க டாடிக்கு உங்களை வெளியே கூட்டிக்கிட்டுப் போக ஆசைதான். உங்க மம்மி தான்... உங்க டாடிக்கிட்டே கூட்டிக்கிட்டுப் போகக் கூடாதுன்னு சண்டை போடறாங்க!"

"நிஜமாவா?" விழிகள் விரியக் கேட்டான் கைலாஷ்.

"சே... இருக்காதுடா... மம்மியும் டாடியும் இதுவரைக்கும் சண்டையே போட்டதில்லையே!" என்றாள் ஷாலினி.

"அதானே?"

"என்ன அதானே?" நீங்க தூங்கிட்டப் பிறகு சண்டை போடறாங்க. நம்பலேன்னா போங்க... நான் கண்ணாலப் பார்த்தேன்!"

"நிஜமாவா ஆன்ட்டி?"

"ஆமான்டா... இது மட்டுமில்லே...!" என்று இல்லாததும் பொல்லாததும் சொல்லி அந்த பிஞ்சுகளின் மனதில் தாயைப் பற்றி தாறுமாறான பொய்களை நம்பும்படி விதைத்தாள்.

"நான் ஒரு கேள்விக் கேட்பேன். நீங்க பதில் சொல்லணும்... என்ன?"

"ம்... கேளுங்க ஆன்ட்டி!" என்றனர் கோரஸாய்.

"இப்ப கடவுள் உங்க முன்னாடி வந்து 'உங்களுக்கு அம்மா வேணுமா? அப்பா வேணுமா'ன்னு கேட்டா என்ன சொல்லுவீங்க?"

"ரெண்டு பேரும் எங்ககிட்டேதானே இருக்காங்க. நீங்க கேட்ட கேள்வியே தப்புன்னு சொல்லுவேன்" என்றாள் ஷாலினி.

"ப்ச்... அப்படியில்லே... 'இங்கே ஒருத்தரை மட்டும் தான் விட்டுட்டுப் போவேன். ஒருத்தரை அழைச்சிட்டு போகப் போறேன். ரெண்டு பேர்ல யார் வேணும்னு நீங்களே முடிவுப் பண்ணுங்க'ன்னு கேட்டா?"

"டாடி தான் வேணும்னு சொல்வேன்"

''மம்மி பாவம்டா கைலாஷ்! அன்னைக்கு உன் பர்த்டேக்கு பெரிய கேக் வாங்கிட்டு வந்தாங்களே!''

''டாடிய சாமி அழைச்சிட்டுப் போய்ட்டா... நம்மை யாரு கவனிச்சுக்கறது? அப்புறம் நமக்கு சாப்பாடுக் கூட கிடைக்காது. மம்மி வேஸ்ட்... அதனால டாடி தான் வேணும்.''

''அப்ப சரி... எனக்கும் டாடிதான் வேணும்னு கேப்பேன்!''

சாருலதா முகத்தில் வெற்றிப் புன்னகை பரவியது.

''சார்... எனக்கு பயமாயிருக்கு!'' என்றாள் காயத்ரி.

உடலில் பாதி உடைகளை இழந்திருந்த காயத்ரி ராகேஷின் அணைப்பில் இருந்தாள்.

''இதிலென்ன பயம் காயத்ரி? என்னமோ தெரியலே... உன்னைப் பார்த்ததும் என்னையறியாமல் ஒரு ஈர்ப்பு! எனக்கு மட்டும் கல்யாணம் ஆகலேன்னா... உன்னைதான் என் மனைவியாக்கி இருப்பேன்!'' அவள் கழுத்தில் உதடை அழுத்தமாய் ஒற்றினான்.

''இப்ப மட்டுமென்ன... என்னை கல்யாணம் பண்ணிக்கலாமே!''

''அது எப்படி முடியும் காயத்ரி? என் வொய்ஃப் விடமாட்டா! சட்டப்படி குற்றமில்லையா? என்னை ஒரு வழி பண்ணிடுவா! என்னைக் கொல்லவும் தயங்கமாட்டா!''

''ஐய்யோ...!''

''நான் சாகணுமா காயத்ரி?''

''வேணாங்க!''

''நாம எப்பவும் இப்படியே இருந்துடலாம். என் வொய்ஃபை நீ பார்க்கணுமே! பிப்பாய் மாதிரி இருப்பா! அவளால எனக்கு எந்த சுகமும் இல்லே! நல்லவேளை... ஆண்டவன் என்னை இங்கே அனுப்பினான். இல்லேன்னா... இந்த அழகான காயத்ரி... எனக்கு கிடைச்சிருப்பாளா? உனக்கு என்ன வேணுமோ கேளு காயத்ரி! நான் செய்யறேன்''

''எனக்கு வீட்லே வரன் பார்த்திட்டிருக்காங்க. இந்த நேரத்திலே நாம இப்படி...''

''தப்பேயில்லே! மனசுக்கு பிடிச்சிருக்கா! அது தான் முக்கியம். மனசை ஏமாத்தக் கூடாது காயத்ரி. நீ கல்யாணம் பண்ணிக்க. அது உங்க அம்மா அப்பா மனசுக்கு பிடிச்சதுக்காக!

## கண்விழிக்க 16 ஆண்டுகள்

அமெரிக்காவை சேர்ந்த மார்க்... என்பவர் மனைவி பேட்ரிசியா.



குழந்தைகளுக்கு தாயான இவர் பெண்ணுக்... மீண்டும் பிரசவம் ஏற்பட்ட... சிசேரிய... அறுவை சிகிச்சை மூல... 4-வது மகளை ...றெடுத்தார். ஆனால் அந்த குழந்தையை ...யே பார்த்து கொஞ்சி மகிழ அவருக்கு ...டுத்து வைக்கவில்லை. கோமாவில் ...ந்தவர்தான், 16 ஆண்டுகள் கண் ...க்கவில்லை. மருத்துவமனையிலேயே ...் போல் கிடந்தார்.

இனி அவ்வளவுதான். பேட்ரிசியா ...க்க மாட்டார் என்று அவரது கணவரும் 4 ...ந்தைகளும் நினைத்தார்கள். ஆனால் என்ன ...சரியம்? 16 ஆண்டுகளுக்கு பின் அவர் ...யிர் பெற்று எழுந்து விட்டார். புதிய ...லினியம் ஆண்டு பேட்ரிசியாவுக்கும் அவரது ...ம்பத்தினருக்கும் மகிழ்ச்சிகரமான ஆண்டாக ...மைந்து விட்டது.

கல்யாண... ஆய்டுச்சேன்னு நான் உன்னை வெறுத்தி... மாட்டேன். இந்த காயத்ரி எனக்கு எப்பவு... வேணும்! எனக்கு வெளிச்சம் பிடிக்காது லைட்டை அணைச்சிடட்டுமா?''

அவள் பதில் கூறுமுன் அறை இருட்டானது.

அந்த போரூர் பங்களாவின் வாசலில் முருகன் காவலுக்கு நின்றிருந்தான்.

''ஆபீஸ் முடிஞ்சதும் கொஞ்சம் என் கூட ஷாப்பிங் வர்றியா அபூர்வா?''

''ஸாரி மாது! நான் இன்னைக்கு ஹாஸ்பிடல் போகணும்''

''என்ன மாமியாரை அழைச்சிட்டுப் போகணுமா?''

''அ... ஆமாம்!''

''இல்லே தெரியாமதான் கேக்கிறேன். உன் ரெண்டு நாத்தனார்களும் சும்மாதானே இருக்காங்க? அவங்கம்மாவை அவங்க ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகக் கூடாதா?''

''அதுங்க... வீட்டோடு இருந்து பழகிடுச்சா... வெளி உலகமே தெரியமாட்டேங்குது! வளர்ந்தாச்சேயொழிய விவரம் புரியலே! என்னைப் பொறுத்தவரை மாமியாரும் தாய் தானே? அவங்களை நல்லா கவனிச்சுக்க வேண்டியது என் கடமையில்லையா?''

''ஷ்யூர்... ஷ்யூர்....! ஐ'ம் ப்ரவுட் ஆஃப் யூ அபூர்வா! ஊர்ல, உலகத்திலே எல்லா வீட்லேயும் உன்னைப் போல ஒரு மருமகள் கிடைச்சிட்டா... பிரச்சினையே இருக்காது''

''ஆமாமா... என்னை மாதிரியே எல்லோரும் இருந்துட்டா நிச்சயமா மாமியார், ...மகள் சண்டையே வராது!'' என்றாள் ...த்தபடி. அந்த சிரிப்பில் வேதனை ...ந்திருந்ததை மாதுரி கவனிக்கவில்லை.

''உன்னை மனைவியா அடைஞ்ச அந்த ...கி ஃபெல்லோவைப் பார்க்கணுமே! ...ாட்டோ கொண்டு வந்தியா?''

''ஸாரி... வந்த உடனே காட்டணும்னு ...னைச்சேன். மறந்தேப் போய்ட்டேன்! ...ந்தா...!'' என்று தன் ஹேண்ட் பேகை திறந்து ...ாஸ்ட் கார்டு சைஸ் கலர் போட்டோவை ...டுத்து காண்பித்தாள்.

அதை வாங்கிப் பார்த்த மாதுரியின் முகம் ...ன்னகையால் விரிந்தது.

''நல்லாயிருக்கார் அபூர்வா! உனக்கு ஏற்ற ஜோடி! உன்னை விட நல்ல கலர் ...பாலிருக்கே?''

''ரொம்ப உத்து பார்க்காதே... எனக்கு ...பொறாமையா இருக்கு!''

''ஹைய்யோடா... இதென்ன ...ம்பாயிருக்கு. இந்தா பிடிம்மா உன் ...ஹஸ்பண்டை!'' பொய்யாய் முறைத்து ...போட்டோவை அபூர்வாவின் கையில் ...ிணிக்க... அவளோ வாய் விட்டு சிரித்தாள்.

நகரின் மையப் பகுதியில் இருந்தது அந்த சூப்பர் மார்க்கெட்! அங்கு கிடைக்காத பொருள் இரண்டே இரண்டு தான்! தாய், தந்தை! மற்றபடி எல்லாப் பொருட்களுமே கிடைக்கும்.

சாருலதா... வசதியான வீட்டுப் பெண்! பாதாமும், முந்திரியுமாய் சாப்பிட்டு வளர்ந்தவள். அதனால் அவளுக்காக பாதாம் மற்றும் காஸ்மெட்டிக் அயிட்டங்கள் வாங்க வந்திருந்தாள்.

வாங்கி முடித்து பில் போட திரும்பியபோது தான் அடுத்த ஷாப்பை பார்த்தாள். மெடிக்கல் ஷாப் அது. ராகேஷ் கடைக்காரரிடம் சிரித்தபடி என்னவோ பேசிக் கொண்டிருந்தான்.

''அட, எம்.டி. சார்! இவர் எங்கே இங்கே''

''பில் போட்டு வையுங்க... இதோ வந்திட்டேன்'' என்று ராகேஷை நோக்கிப் போனாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ சார்!''

''யெஸ்!'' என்று திரும்பிய ராகேஷ் அப்போது தான் அவளைப் பார்ப்பது போல் பாவனை செய்து முகத்தில் ஆச்சர்யத்தை தேக்கினான்.

''ஹலோ மேடம்... நீங்க எங்கே இங்கே?''

''ஷாப்பிங் வந்தேன்! நீங்க என்ன மெடிக்கல் ஷாப்பிலே?''

''மெடிஸின்ஸ் வாங்க வந்தேன்! அத்தனையும் பேசி பண்ணிடுங்க... பத்திரம்...!'' என்றான்.

''யாருக்கு சார் இவ்வளவு மெடிஸின்ஸ்? கடையே வைக்கலாம் போல...?''

''ஹாங்...!'' என்று பெருமூச்சு விட்டவன் ''என் மனைவிக்கு'' என்றான்.

''ஓ...! என்ன அவங்களுக்கு?''

''ஒண்ணா, ரெண்டா? என்னன்னு சொல்வேன் மாதுரி. வாங்களேன் இந்த காம்பவுண்ட்லேயே ஒரு ரெஸ்டாரெண்ட் இருக்கு. காபி சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம்''

தயங்கி பின் ''சரி'' என்றாள்.

டேபிளின் எதிரெதிரே அமர்ந்திருந்தனர். காபியை பருகிக் கொண்டிருந்த ராகேஷின் கண்கள் வேறெங்கோ வெறித்திருந்தது.

அவன் முகத்தைப் பார்த்தே அவன் எவ்வளவு வேதனைகளை உள்ளடக்கி இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

''உங்க வொய்ஃப்புக்கு என்ன?'' என்று ஆரம்பித்தாள்.

நெடிய பெருமூச்சொன்றை உதிர்த்து விட்டு அவளைப் பார்த்த பார்வையில் துளியும் விரசமில்லை.

''என்னன்னு சொல்றது மிஸஸ் மாதுரி! எங்களோடது காதல் கல்யாணம் தான். என் மனைவி பூஜா ரொம்ப அழகாயிருப்பா! ரொம்ப நல்லவ! அப்படிப்பட்டவளுக்கு ஏழெட்டு நோய். ஹார்ட் ப்ராப்ளம், ஜான்டீஸ், அது இதுன்னு படுத்த படுக்கையா இருக்கிறா! உங்ககிட்டே சொல்றதுக்கென்ன? எங்களுக்குள்ளே செக்ஸ் கூட கிடையாது. டாக்டரோட ஆர்டர் அது. ஆனா, அதுக்காக நான் பூஜாவை வெறுக்கலே. அது என்னால

முடியாது. இப்ப அவளை நான் மனைவியா நினைக்கலே! குழந்தையா நினைக்கிறேன். வீட்லே எழெட்டு வேலைக்காரங்க இருந்தாலும், என் குழந்தைகளையும், பூஜாவையும் நானே நேரடியா கவனிச்சு சாப்பிட வச்சாதான் எனக்கு திருப்தி! இதோ.. இந்த மெடிசின்னைக் கூட வேலைக்காரனை விட்டு வாங்கி வரச் சொல்லலாம். ஆனா, என் பூஜாவுக்கு நான் ஒவ்வொண்ணையும் பார்த்து பார்த்து என் கையாலேயே செஞ்சாதான் நிம்மதி. பிகாஸ்... ஐ லவ் மை பூஜா!'' என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

அசந்துப் போனாள் மாதுரி! அவள் மதிப்பில் ராகேஷ் படியளந்த பெருமாள் போல் உயர்ந்து நின்றான்.

12

''சார் போஸ்ட்!'' தபால்காரர் வீசியெறிந்து விட்டுப் போன கடிதத்தை சாருலதா எடுத்து வந்தாள்.

''உங்களுக்குத் தான்!'' என்று விக்கிரமனிடம் கொடுத்து விட்டு கதைப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து விட்டாள்.

விக்கிரமன் அந்த கடிதத்தின் முகவரியினை பார்த்து யோசித்தார். அறிமுகமில்லாத கையெழுத்து.

'யாராயிருக்கும்?'

நெற்றி சுருங்க பிரித்தார். அதில் உள்ள வரிகளில் கண்களை ஓடவிட்ட போது இதயம் படபடத்தது. உடனடியாக வியர்த்தது. நாடை நரம்புகள் முறுக்கேறிக் கொண்டது.

அடுத்த நாளும் அதே மாதிரி கடிதம் வந்தது. அடுத்த நாள், அதற்கடுத்த நாள்... என தினமும் ஒரே விஷயத்தை தாங்கி வந்தது.

பத்து நாட்களுக்குப் பிறகு விக்கிரமன் பெயருக்கு மட்டுமல்லாது பிரேம்குமாருக்கும், சாருலதாவுக்கும் வந்தது. அதைப் படித்த பிரேமும், சாருவும் அதிகபட்ச அதிர்ச்சியில் உறைந்துப் போயினர்.

இருவரும் விக்கிரமனிடம் வந்து அந்த கடிதத்தினை நீட்டினர்.

''இதை படிச்சுப் பாருங்க மாமா!''

அந்த கையெழுத்தைப் பார்த்ததும் புரிந்துப் போனது. கைகள் நடுங்க அதை வாங்கிப் படித்தார்.

அதே வாசகம். மாதுரியை கேவலப்படுத்தி எழுதப்பட்டிருந்த வரிகள். அவள் தினமும் யார் யாருடனோ ... சுற்றுவதாக பிரதானப்படுத்தி எழுதப்பட்டிருந்த வாசகங்கள். இப்படிக்கு உண்மை விளம்பி கிருஷ்ணா! என்று இதில் ... தெளிவாய் கையெழுத்து போடப்பட்டிருந்தது.

''என்ன மாமா இது?''

''எவனோ ஒரு பொறுக்கிப் பயல் வேலை வெட்டி இல்லாதப் பயல் எழுதி... பொய்க்கடிதம். இதே மாதிரி எனக்கு ஏற்கனவே பதினஞ்சு கடிதம் வந்தாச்சு. இன்னைக்கும் கூட வந்தது!'' என்றார் நிதானமாக.

''இந்த கிருஷ்ணா யாராயிருக்கும்... ராஸ்கல் அவனுக்கெதுக்கு இந்த வேண்டா... வேலை? இந்த ஏரியாவுல கிருஷ்ணாங்க... பேர்ல யாரையாவது தெரியுமா?''

''எதுக்கு பிரேம்? இதை ஏன் பெரி... படுத்தறே? எனக்கு என் மாதுரியைப் பத்தி... தெரியும். உனக்கு உங்க அக்காவைப் பத்தி... தெரியும். மத்தவங்க புரிஞ்சுக்காம நம்ம வீட்டு... நிம்மதியை குலைக்கணுங்கற நோக்கத்துல... எழுதினதை... அவங்க நோக்கப்படி நாம... பெரிசு பண்ணி நிம்மதியை இழக்கலாமா?... போ... பிரேம்! இந்த விஷயம் மாதுரிக்கு தெரிய... வேண்டாம்...சரியா?''

''சரி!'' என தலையாட்டினான் பிரேம்.

இன்னும் இரண்டு நாளில் சக ஊழியர் ஒருவர் வீட்டில் கிரஹப்பிரவேசம். அதற்காக பரிசு பொருள் வாங்க ஸ்பென்சர்... பிளாசாவிற்குப் போயிருந்தாள் மாதுரி.

பரிசுப் பொருளை வாங்கிக் கொண்டு வந்தவள், பார்க்கிங் பகுதியில் நின்றிருந்த ஒரு... ஆணை பார்த்து கண்கள் சுருங்கியது.

'இவரை எங்கேயோ பார்த்திருக்கிறோமே... எங்கே?' மூளையை... கசக்கிப் பிழிந்து யோசித்தபின் நினைவிற்கு வந்தது.

'அட...இவர் அபூர்வாவின் கணவரல்லவா? அன்று போட்டோவில் பார்த்தேனே... அவரேதான்!' கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சியோடு அவர் அருகில் போனாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ....''

''யெஸ்...!''என்றபடி புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை கீழே போட்டு நசுக்கினான்.

''ஐ'ம் மாதுரி...!''

''ஐ'ம் ராகவன்!'' என்றான் புரியாமல்.



''உங்களைப் பத்தி அபூர்வா எங்கிட்டே சொல்லியிருக்கா!''

''அபூர்வா?''

''ஆமாங்க...! அபூர்வா உங்களுக்கு ...வியா அமைஞ்சதுக்கு நீங்க ரொம்ப ...ணியம் பண்ணியிருக்கணும். அட, நான் ...ன்னு சொல்லாம உங்ககிட்டே ...ட்டிருக்கேன் பாருங்க! நானும் ...வாவும் ஒரே ஆபீஸ்லதான் வொர்க் ...ணிட்டிருக்கோம்!''

'சரிதான்... இது வேற கேஸ் போலிருக்கு' ...தனக்கு தானே முணுமுணுத்துக் கொண்ட... முகத்தில் சிரிப்பை படரவிட்டு, ...ணி'' என்றான்.

''ஒரு நாளைக்கு அபூர்வாவும், நீங்களும் வீட்டுக்கு வரணும்!''

''ஷ்யூர்...!''

''எனக்கும் உங்க வீட்டுக்கு வரணும்னு ...! கூப்பிட மாட்டீங்களா?''

''வாங்க...யூ ஆர் ஆல்வேஸ் வெல்கம்!''

''தாங்க்ஸ்... கமிங் ஸன்டே வரட்டுமா?''

''வாங்களேன்!''

''நான் வரப்போறது அபூர்வாவுக்கு ...ய வேண்டாம். சர்ப்ரைஸா இருக்கட்டும்!''

''சரிங்க...!''

''ஓக்கே... உங்களை சந்திச்சதுல ரொம்ப ...தோஷம். வரட்டுங்களா?''

''சரிங்க...!''

மாதுரி... விடைபெற்று சென்றதும், ...வளை நோக்கி அவன் வயதொத்த ஆண் ...தான்.

''யாரு ராகவன் அது? ஆள் சூப்பரா ...க்கா? எனக்கேத் தெரியாம ஏதாவது ...ட்டப்பா?''

''அடப்போப்பா! அது ஒரு மென்ட்டல் ...ஸ் குமார்! திடீர்னு வந்து அபூர்வா அது ...துன்னு சம்மந்தமில்லாம பேசறா! ...தாதுக்கு என் வீட்டுக்கு அவ வர்றாளாம். ...வ வீட்டுக்கு நான் போகணுமாம்!''

''அப்படியா? பார்த்தா கிறுக்கு மாதிரி ...ரியலியே!''

''பைத்தியமெல்லாம் பார்க்க பைத்தியம் ...திரி தெரியாது. பாவம்... என்ன ...ரச்சினையோ... இப்படி ஆகிட்டா? ப்ச்... ...ழகான பொண்ணு! ஹூம்...லைஃப்ல ...ருக்கு, எப்ப, என்ன நடக்கும்னே தெரியாது. ...... உன் பர்ச்சேஸ் முடிஞ்சதா? ...ளம்புவோமா?'' என்றபடி பார்க் ...சய்யப்பட்டிருந்த பைக்கை உருவினான் ...கவன்.

ராகேஷ் கவனமாய் நடந்துக் கொண்டான். அலுவலகத்தில் மாதுரியிடம் அஃபிஷியலாக மட்டுமே பேசுவான். வீண் பேச்சு கிடையாது. அதுவே மாதுரிக்கு அவன் மீது மதிப்பை அதிகரிக்க செய்தது. அவனோடு ஓரிரு முறை காரில் சென்றது, சூப்பர் மார்க்கெட்டில் சந்தித்துக் கொண்டது, அவன் தன் மனைவியைப் பற்றி பேசியது, எதையும் அவள் அபூர்வாவிடம் சொல்லவில்லை. ஏனோ, சொல்ல தோணவுமில்லை. நல்ல நட்பை விளையாட்டுத்தனமாக பேசியே அசிங்கப்படுத்தி விடுவாள் என்பதும் ஒரு காரணம்.

அன்று அலுவலகம் முடிந்து வெளியே வந்தபோது... பொட்... பொட்டென தூறல் விழ ஆரம்பித்தது. பஸ் ஸ்டான்ட் போய் சேருவதற்குள் பேய் மழை பெய்ய ஆரம்பித்தது. தெப்பமாய் நனைந்து விட்டாள் மாதுரி.

அவள் அங்குப் போய் சேர்ந்த ஐந்தாவது நிமிடத்தில் சொல்லி வைத்தாற்போல் ராகேஷின் கார் வந்தது.

கார் கதவை திறந்து வைத்து, ''கம் ஆன் மாதுரி... கெட் இன்'' என்றான்.

''நோ... தேங்க்ஸ்... இப்ப பஸ் வந்திடும்'' மறுத்தாள்.

''பஸ் வர்றது இருக்கட்டும். உங்க டிரஸ்ஸைப் பாருங்க. முழுக்க நனைஞ்சிருக்கீங்க! பஸ்ஸிலே பலபேர் பார்வையும் உங்க மேலே மொய்க்கும். தேவையா? மழை இப்போதைக்கு நிக்கிற மாதிரித் தெரியலே. இந்த மாதிரி நேரங்கள்ல பஸ் கூட வராது. முதல்ல ஏறுங்க!'' என்று உரிமையுடன் அழைக்கவும்... அதற்கு மேல் முரண்டு பிடிக்க தோன்றாமல் ஏறிக் கொண்டாள்.

ராகேஷ் பொதுவாய் ஏதேதோ பேசிக் கொண்டே வந்தாலும் அவன் கண்கள் மாதுரி அறியாமல் வெறித்தனமாய் அவள் மேனியில் ஊர்ந்தது. தண்ணீரில் முக்கியெடுத்த பளிங்குச் சிலையாய்... பளபளத்த மேனியோடு ஈரத்தில் உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த புடவை... அவள் அழகை அதிகப்படுத்திக் காட்டியது. ராகேஷ் தன்னை வெகுவாய் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'பொறு... அவசரப்படாதே! மாதுரி கொஞ்சம் கொஞ்சமாய் உன் வலையில் விழுந்துக் கொண்டிருக்கிறாள். இன்னும் கொஞ்ச நாள் பொறு!' என்றது மனம்.

இப்போதெல்லாம் மாதுரி அவனுடன் காரில் போவதை, பேசுவதை சங்கடமாய் நினைப்பதில்லை. அபூர்வாவைப் போல் அவனையும் ஒரு ஃப்ரண்ட்டாக நினைத்திருந்தாள்... அவன் பசுத்தோல் போர்த்திய புலி என்று அறியாமலேயே!

வழக்கம் போல அவள் வீட்டிற்கு முன்னதாகவே இறக்கிவிட்டான் ராகேஷ்.

''தாங்க்யூ... சார்!''

''நமக்குள்ளே எதுக்கு இந்த ஃபார்மாலிட்டி? வேண்டாமே!'' என்றான் கெஞ்சுவதைப் போல்.

''ஓக்கே!'' என்று சிரித்தபடி கையசைத்து விடைபெற்றவள் கடந்து செல்ல முற்பட்ட ஆட்டோவை கைதட்டி அழைத்து ஏறி வீடு நோக்கிச் சென்றாள்.

எங்கோ சென்று விட்டு ஆட்டோவில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த பிரேம்குமார், சாருலதா கண்களில் இந்த காட்சி விழுந்தது.

'பார்த்தீங்களா? உங்க அக்காவோட பவிசை?' என்பது போல் சாரு பார்த்த பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தலையை கவிழ்ந்தான் பிரேம்.

**ம**றுநாள்!

விக்கிரமனின் அறைக்கு வந்தான் பிரேம்.

''என்ன பிரேம்? நீ இன்னும் ஆபீஸ்க்கு கிளம்பலே? நேரமாய்டுச்சே?''

''இல்லே...லேட்டாதான் போவேன்! உங்ககிட்டே முக்கியமான விஷயம் பேசணும்!''

''என்ன பிரேம்?''

''தினமும் வீட்டுக்கு கிருஷ்ணான்னு ஒருத்தன் லெட்டர் போடறானே... மெனக்கெட்டு அவன் ஏன் அப்படி எழுதறான்?''

''இப்ப எதுக்கு மறுபடி அந்த பேச்சு?''

''அவசியமிருக்கு மாமா! அவன் மெனக்கெட்டு எழுதறதா எனக்குத் தோணலே?''

''பின்னே?''

''அவன் எழுதறதுல உண்மை இருக்கு''

''பிரேம்!''என்று அதட்டினார்.

''என்னை சத்தம் போட்டு இப்ப... அடக்கிடலாம். ஆனா, இன்னும் கொஞ்ச நாள்லே ஊரெல்லாம் சிரிப்பா சிரிக்கப் போகுதே... அப்ப உங்களால அடக்க முடியாது மாமா!''

''புரியற மாதிரி பேசு!''

பிரேம் முன்தினம் பார்த்த சம்பவத்தை சொன்னான்.

''அக்கா மனசுல ஒண்ணுமில்லேன்னா... அந்த கார்க்காரனோட வெறும் நட்பு மட்டும் தான்னா... வீட்டு வாசல்ல வந்து இறங்கலாமே! எதுக்காக... ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே இறங்கி... அங்கேர்ந்து ஆட்டோ பிடிச்சி வீட்டுக்கு வரணும்?''

''......''

''என்ன... பதில் சொ[...] முடியலையா?''

''எல்லாத்துக்கும் பதில் இல்[...] இருக்காது! பிரேம்...மாதுரி நல்லவ[...] கெட்டவளான்னு கவலைப்பட வேண்[...] நான். அக்கான்னு கூட பார்க்காம என்கிட்[...] பார்த்த சம்பவத்தை வந்து சொன்னி[...] உன்னை நினைச்சா ஆச்சர்யமாயிருக்கு! யாரும் அவகிட்டே இதுபத்தி பேசவேண்[...] நானே பேசறேன். நீ ஆபீஸ்க்கு கிளம்பு!''

பிரேம் தலையாட்டி விட்டு நகர்ந்தா[...]

''என்ன சொல்லிட்டீங்கள[...]'' வழிமறித்து கேட்டாள் சாருலதா.

''ம்... சொல்லியாச்சு!''

''என்ன சொன்னார்? உங்கக்கா [...] கோபப்பட்டாரா?''

''கோபமா? அவரா? அக்கா மேல[...] மாமா ஒரு தலையாட்டி பொம்ம[...] ஆம்பளையா இருக்கவே தகுதி இல்லாத[...] இதுவே அவர் இடத்திலே நானாயிருந்தா... கொலையே விழுந்திருக்கும்.''

''ஏன்னா... நீங்க...ஆம்பளை! சே[...] என்ன மனுஷன் அந்த ஆள்?'' என்ற[...] வெறுப்பாய்.

''பொண்டாட்டி மாசா மாசம் கைநிறை[...] கொண்டு வர்ற சம்பளம்... கண்ணை[...] மறிச்சிடுச்சு அவருக்கு!''

''அதுக்காக பொண்டாட்டி [...] மேய்ஞ்சாலும் பரவாயில்லே...பணம் தா[...] முக்கியம்னு இருப்பாங்களா?''

எதேச்சையாய் அந்தப் பக்கம் வ[...] விக்கிரமன் காதில் இவை அத்தனையும் விழ[...]

## இளவரசரின் இன்னொரு திருமணம்

இளவரசர் ஆகாகான் சமீபத்தில் ஜெர்மனியில் பிறந்த இளவரச் கேபரல்லிஷு லெயின்ஜென் என்பவரை இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொண்டார்.

இரண்டாவது மனைவியின் புதுப்பெயர் இனாரா. இந்த இனாராவுக்கு, ஆகாகான் இரண்டாவது கணவர். முதல் கல்யாணத்தின் மூலம் இனாராவுக்கு 7 வயதில் ஒரு பெண் இருக்கிறாள். ஆகாகான் ஜோடி, உலகின் பிரபல சங்கீத திருவிழாவான சால்ஸ்பர்க் சங்கீத விழாவில் கலந்து கொண்ட போது இந்த படம் எடுக்கப்பட்டது...!



படத்தின் மையத்தில் நிற்பவர் ஆகாகான். அவருக்கு வலப்புறம் இனாரா.

- ராஜிராதா, திருச்சி.



[...]பித்துப் போனார்.

## 13

**ப**ழங்கள், பூக்கள் அடங்கிய பையை [...]த்துக் கொண்டு எப்படியோ, விசாரித்து [...]ாய் அபூர்வாவின் வீட்டை கண்டு பிடித்து [...]ட்டாள் மாதுரி.

'என்னைப் பார்த்தால் அபூர்வாவின் [...]ம் எப்படி மாறும்? சஸ்பென்ஸ், [...]பென்ஸ் என்று மூடி வைத்தானே அந்த [...]பென்ஸ் என்னவென்பதை இதோ அறிந்துக் [...]ாள்ள போகிறேன்!' பெண்களுக்கே [...]மைந்த பிறர் வம்பறியும் விசேஷகுணம் [...]துரியை மட்டும் விட்டு வைக்குமா என்ன?

சிறிய... ஓடு வேயப்பட்ட வீடுதான்! [...]சை பெயிண்ட் அடிக்கப்பட்ட இரட்டை [...]வு மூடியிருந்தது. மாதுரி நிலைப்படி [...]வரோரம் பொருத்தப்பட்டிருந்த சுவிட்சை [...]முத்த... உள்ளே கிர்ரென்று [...]லியெழுப்பியது காலிங் பெல்.

யாரோ நடந்து வரும் சப்தமும், கதவின் [...]ளை திறக்கும் சப்தத்தைத் தொடர்ந்து கதவு [...]திறந்தது.

மலர்ந்த முகத்துடன் நின்றிருந்த [...]ாதுரியைப் பார்த்து ''வா'' என்றுக் கூட [...]ழைக்கத் தோன்றாமல் திகைத்து போனாள் [...]பூர்வா.

''ஹலோ... [...]மேடம்... உள்ளே [...]வான்னு கூப்பிட [...]மாட்டீங்களா?''

''வா...வா.. உள்ளே வா மாது!'' தடுமாறினாள்.

''என்னடா இவ்ளோ தூரம் வந்து நிக்கிறாளேன்னு பார்க்காதே! உன் ஹஸ்பண்ட் இன்வைட் பண்ணினதால வந்தேன்!''

''என்னது? ஹஸ்பண்டா?'' முகம் வெளிறியது.

''யெஸ்... போன வாரம் ஸ்பென்சர் பிளாசாவிலே பார்த்தேன். பேசினேன்! சஸ்பென்ஸா இருக்கட்டும்னு நான் சொல்லலை. அவரும் உன்கிட்டே சொல்லலையா?''

தலையை சுற்றுவதுப் போலிருந்தது அபூர்வாவிற்கு.

''அதோ... அந்த அறையிலேப் போய் உட்கார்... காபி எடுத்திட்டு வந்திடறேன்!'' என்று ஒரு அறையை கட்டிக்காட்டி விட்டு சமையல் கட்டுக்கு போய் விட்டாள்.

கண்களால் வீட்டை அளந்த படி நடந்தாள் மாதுரி.

அங்கங்கே காரை பெயர்ந்த சுவர். குழிகள் வெட்டப்பட்டிருந்ததுப் போல் சீர் செய்யப்படாத தரை. கடக் கடக் என ஓசையெழுப்பி சுழன்றுக் கொண்டிருந்த மின்விசிறி. தரையில் பாய் விரித்து படுத்திருந்த வயதான அம்மா இவளைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

''வாம்மா... அபூர்வாவோட வேலை பார்க்கிறியா?''

''ஆமாம்!''

'இவள் தான் மாமியாரா?'

குரல் கேட்டு இரண்டு இளம்பெண்கள் சின்ன அறையிலிருந்து வெளிப்பட்டனர்.

முகத்தில் அமைதியும், உடையில் எழ்மையும் தெரிந்தது. ஒருத்தி சாயம் போய் வெளுத்திருந்த பாவாடை தாவணியும், மற்றொருத்தி கிழிந்து தைக்கப்பட்ட நைட்டியும் அணிந்திருந்தாள்.

'இவர்கள் தான் நாத்தனார்களா? இவர்களா வீட்டு வேலை செய்யாமல் சொகுசாய் வாழ்பவர்கள்? பார்க்கவே பரிதாபமாய் இருக்கும் இவர்களா?' வியப்பாய் பார்த்தாள் மாதுரி.

''யாரும்மா இவங்க?''

''அபூர்வாவோட வேலை

செய்பறவங்களாம். அந்த அறையிலே சேர் போட்டு உக்காரவை! மறக்காம பேன் போடு!'' பேசி முடிப்பதற்குள் மூச்சு வாங்கியது அந்தம்மாளுக்கு.

அந்தப் பெண்களில் ஒருத்தி இவளை ''வாங்க!'' என்று அழைத்துப் போய் அமர வைத்தாள்.

''நீங்க வரப்போறதா... அக்கா ஒண்ணுமே சொல்லலியே!'' சிரித்தபடி சொன்னவள் பேனின் சுவிட்சை தட்டினாள்.

மாதுரி முகம் சுருங்கினாள்.

''அக்காவா... எந்த அக்கா?''

''அபூர்வா அக்காதான்!''

மாதுரி புரியாமல் பார்த்தாள். அவள் அடுத்த கேள்வி கேட்குமுன் அம்மா ''புவனி'' என்றழைக்கவும் ''இதோ வர்றேம்மா!'' என்று போய் விட்டாள்.

மாதுரிக்கு குழப்பமாய் இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அபூர்வாவின் அறை போலும். கட்டில் மேல் அவளின் புடவைகள் சிதறிக் கிடந்தன. சின்னதாக சுவரோடு பதிக்கப்பட்ட மர அலமாரி. டேபிள்... அதில் மீது நைட் லாம்ப், டேப்ரெக்கார்டர் இருந்தது. சுவற்றில் அபூர்வாவின் பழைய புகைப்படம் ஒன்று!

'அடுத்து... இதென்ன?'

ஆணியடித்ததுப் போல் நின்று விட்டாள் மாதுரி. காரணம் சுவற்றின் ஆணியில் மாட்டப்பட்டிருந்த தாலியுடன் கூடிய சரடு!

'அபூர்வாவோடதல்லவா?'

காபியோடு உள்ளே நுழைந்த அபூர்வா கதவைத் தாளிட்டாள்.

''உக்காரு மாது!''

மாதுரி அவள் கழுத்தைப் பார்த்தாள். வெறுமையாய் இருந்தது.

''என்ன மாது... ஷாக்காயிட்டியா? என் வீட்டைப் பார்த்து ஓரளவு நான் மறைச்சு வச்சிருந்த சஸ்பென்ஸ் புரிஞ்சிருக்கும். இல்லையா?''

''இதென்ன அபூர்வா... தாலியை இப்படி கழற்றி வச்சிருக்கே? உன் ஹஸ்பண்ட் கோவிச்சுக்க மாட்டாரா?'' அவள் அப்படி கேட்டதும் தான் தாமதம்... வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தாள். கண்களில் நீர் வர சிரித்தாள்.

''அபூர்வா... எதுக்கு இப்படி சிரிக்கிறே?''

''என் அழுகையை மறைக்க சிரிக்கிறேன் மாது!''

''அ...பூ...ர்...வா!''

''ஆமாம் மாது! தாலியை இப்படி கழட்டி வச்சதுக்காக என் புருஷன் கோவிச்சுக்க மாட்டார். ஏன்னா எனக்கு புருஷனே இல்லே! ஐ... மீன்.. எனக்கு இன்னும் கல்யாண[ம்] ஆகலே!''

''அ...பூ...ர்...வா!''

''இதுக்கூட கவரிங் தாலி சரடு [...] ஆபீஸ்க்கு வர்றப்ப போட்டுக்குவே[ன்] வெளியிலே பார்த்தியே அவங்க என் மாமி[யார்] இல்லே... அம்மா... என்னை பெத்த அம்[மா] ரெண்டு பொண்ணுகளும் நாத்தனார் இல்[லே] என் தங்கைங்க...''

''.......''

''இருபது வருஷத்துக்கு முன்னே அப்[பா] திடீர்னு இறந்துப் போய்ட்டார். மூணு பொட்டைப் புள்ளைங்க. அம்[மா] திணறிட்டாங்க.. ஏதேதோ வேலை செ[ஞ்சு] எங்களை காப்பாத்தினாங்க. நா[ன்] தலையெடுத்த போது... கஷ்டப்பட்டு படி[ச்சு] வேலைக்கு சேர்ந்தேன். அம்மாவுக்கு உடம்புக்கு முடியாம போயிடுச்சி! சுமை எ[ன்] தோளில்! இந்தக் குடும்பத்தை பொறுத்தவ[ரை] நான் தான் அப்பா! என் ரெண்[டு] தங்கைகளையும் கரையேத்தணும்[;] கடைசிவரை அம்மாவைக் காப்பாத்தணும்[.] அப்படிப்பட்ட நான் கல்யாண[ம்] குழந்தைன்னு நினைச்சுப் பார்க்க முடியுமா[?] பெரிய தங்கைக்கு ஓரளவு சேர்த்துட்டேன்[.] அடுத்த வருஷம் கல்யாணம் பண்ண வச்சிடுவேன். இனி அடுத்தவளுக்கு சேர்க்[க] ஆரம்பிக்கணும். அவளோட கடமைய தீர்க்[க] எனக்கு அஞ்சாறு வருஷம் தேவைப்படும்[.] எனக்கு இப்ப என்ன வயசிருக்கும்னு நினைக்கிறே? பெரியவ... உன்னை விட ஏழெட்டு வயசு பெரியவ! என் இளமையில பாதி கரைஞ்சாச்சு!''

''அப்ப...உன் கணவர்னு சொல்லி கொடுத்த போட்டோ?'' நம்ப முடியாத அதிர்ச்சியோடு கேட்டாள்.

''யாருன்னே தெரியாது. எனக்குத் தெரிஞ்ச ஸ்டுடியோவிலிருந்து தெரியாம எடுத்துகிட்டு வந்த போட்டோ! அதே நபரை நீ எதிர்பாராத விதமா சந்திச்சது தான் ஆச்சர்யம். அதனால என் முகமூடி கிழிஞ்சு போச்சு!'' என்றாள் சிரித்துக் கொண்டே!

''எப்படி அபூர்வா... எப்படி இதையெல்லாம் ஈஸியா எடுத்துக்கறே?''

''வேற வழி? இதைத் தவிர வேற வழியே இல்லே! என் வேதனைகளை நான் வெளிக்காட்டிக்கறதில்லே. ஆறுதல்ங்கற பேர்ல என் தன்னம்பிக்கைய சிதைச்சிடுவாங்களோங்கற பயத்துல தான்... வெளியிலே அப்படியொரு வேஷம் போட்டேன்.. பொய்யாய் ஒரு தாலி, கணவன், மாமியார், நாத்தனார், ஊடல், கூடல், நாத்தனார் கொடுமைன்னு கற்பனையா நான் வாழ்ந்த சம்பவங்களை தான் உன்னோட [பகி]ர்ந்துக்கிட்டேன். ஆனா, நிஜமாகவே [என]க்கு இப்படியெல்லாம் வாழணும்னு [ஆ]சையிருக்கு, ஏக்கமிருக்கு. என் [வீ]ட்டுக்குள்ளே வந்ததும், என் குடும்பத்தை [பா]ர்த்ததும் என் ஆசைகளும் செருப்போட [வாச]லோட தங்கிடும்''

''அபூர்வா!'' மாதுரி அவள் கைகளைப் [பற்]றிக் கொண்டு கண்கலங்கினாள்.

''என்னால.. ஜீரணிச்சுக்க முடியலே அபூர்வா''

''சில நிஜங்கள் இப்படித்தான் கசக்கும்! [ஆ]னா இந்த மெழுகுவர்த்தியால மூணு [பே]ருக்கு வெளிச்சம் தரமுடியுதே! அதுக்காக [ச]ந்தோஷப்படறேன். மாதுரி எனக்கொரு [ஹெ]ல்ப் பண்ணுவியா?''

''சொல்லு!''

''இந்த உண்மை உன்னோட இருக்கட்டும். யாருக்கும் தெரிய வேண்டாம். [ப]ழையபடி பேசிப் பழகு. பரிதாபத்தோட பார்க்காதே! என்னால தாங்க முடியாது. உடைஞ்சுப் போய்டுவேன். ரெண்டு பொண்ணுங்களை கரை ஏத்தறவரைக்குமாவது எனக்கு மன உறுதி வேணும். ப்ளீஸ்... என்னை அப்படி பார்க்காதே! ஆறுதல் சொல்லாதே...ப்ளீஸ் மாது!'' என்றவள் அதற்குமேல் பேசமுடியாமல் மாதுரி தோள் மீது சாய்ந்து ஓவென்று அழ ஆரம்பித்தாள் அபூர்வா.

**மா**துரிக்குக் குழம்பியது.

'அப்படியென்ன முக்கியமான விஷயம்? அலுவலகம் சம்பந்தப்பட்டது, அலுவலகத்தில் வைத்து பேசமுடியாது. என் வீட்டில் பேச வேண்டும். மதியம் என்னுடன் புறப்படத் தயாராயிருங்கள் என்று கிட்டத்தட்ட கட்டளையாய் சொன்ன எம்.டி.யின் பேச்சை தட்ட முடியாது. வேறு வழியில்லை... போய் தான் ஆகணும்.'

''என்ன மாது... ஒரு மாதிரியாயிருக்கே? ஒண்ணுமில்லே... புதுசா ஒரு காண்ட்ராக்ட் கிடைச்சிருக்கு. நானும் எம்.டி.யும் அந்த பார்ட்டியை பார்த்து பேசணும். மதியம் கிளம்பணும்!''

''ஸோ... எம்.டி. கூட கார்லே போறேன்னு சொல்லு. கொடுத்து வச்சவ நீ!'' வழக்கம் போல் கிண்டலடித்தாள் அபூர்வா.

''எப்பதான் திருந்துவியோ?'' வழக்கம் போல் அங்கலாய்த்தாள் மாதுரி.

**கா**ர்... போரூரிலிருந்த ராகேஷின் பிரத்யேக பங்களாவுக்கு போனது.

''வாங்க... மாதுரி!''

''பங்களா ரொம்ப அழகாயிருக்கு! உங்க வொய்ஃப்பை பார்க்கணுமே!''

''முதல்ல அஃபிஷியல் மேட்டர். பிறகு தான் பர்சனல் மேட்டர். வாங்க...'' என்று ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான்.

''சரி... சார்!'' என்று சிரித்த படி அவன் பின்னேயேச் சென்றாள்.

மிகப் பெரிய அறை அது! ஒரு மூலையில் சொகுசு மெத்தையுடன் கூடிய இரட்டைக் கட்டிலும் இருந்தது. ஏஸி காற்றுடன் நறுமணமும் கலந்து வந்தது.

சோபாவில் அமர்ந்தாள் மாதுரி. அவள் எதிரே அமர்ந்திருந்த ராகேஷ் வெகுநேரம் எதுவும் பேசவில்லை. மாதுரியும் அவன் பேசட்டும் என்று அமைதியாயிருந்தாள்.

ராகேஷ் மெல்ல எழுந்தான். கப்போர்டை திறந்து அந்த நகைப்பெட்டியை எடுத்து வந்து அவள் முன் வைத்தான்.

''எடுத்துக்குங்க மாதுரி!''

''என்னது இது?''

''திறந்துப் பாருங்க!''

திறந்துப் பார்த்தாள். வைரமாலை! கண்களை கூச வைக்குமளவு பளபளத்தது.

''உங்களுக்குத் தான் மாதுரி! டேக் இட்!''

''எ...எனக்காக?'' உள்ளுணர்வு உறுத்த நடுங்கினாள்.

''உனக்குத் தான்!'' என்றான் ஒருமையில் அழுத்தமாய்.

''எ... எதுக்கு?''

''இதுக்கு மேல் மறைச்சு வைக்க எனக்கு பொறுமையில்லே மாதுரி. உன்னை முதமுதலா பார்த்தப்பவே எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. ஐ..நீட்...யூ. ஐ...வாண்ட்...யூ... மாதுரி. என் கல்யாணத்துக்கு முன்னாடியே உன்னைப் பார்த்திருக்கக் கூடாதான்னு ஏங்கினேன்! உனக்கும் கல்யாணமாய்டுச்சி, எனக்கும் கல்யாணமாய்டுச்சி! இருந்தாலும் இதெல்லாம் பெரிய தடையா எனக்கு தெரியலே!

விசாரிச்சுப் பார்த்தவரைக்கும் நீ வேலிய யார்கிட்டேயும் பழக மாட்டேன்னு தெரிஞ்சுக்கிட்டேன். அப்படிப்பட்ட மாதுரி என்கிட்டே பழகறா, நான் கூப்பிடற இடத்துக்கு கார்லே வர்றான்னா... என்னைப் பிடிச்சிருக்குன்னு தானே அர்த்தம்?''

அவன் பேசிக் கொண்டே போக உடலெங்கும் தணலாய் தகித்தது மாதுரிக்கு.

''எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு மாதுரி. உன் பேச்சு, ஆக்டிவிட்டிஸ், டாலெண்ட் எல்லாமே ரொம்ப பிடிச்சிருக்கு. இது என்னோட சின்னப்பரிசு. போகப் போக...நிறைய வாங்கித் தருவேன். நம்ம உற[வு] ரகசியமாகவே இருக்கட்டும். யாருக்கும் தெரி[ய]

வேண்டாம். இந்த வைரமாலையை நான் என் கையாலேயே உனக்கு போட்டுவிடணும் மாதுரி'' என்றவன் அந்த வைரமாலையை எடுத்துக் கொண்டு அவளருகே வந்தான் ராகேஷ்.

அடுத்த கணம்...

மாதுரி ஆவேசமாய் அதைப் பறித்து விசியெறிந்ததில் குப்பைக் கூடையருகே போய் விழுந்தது.

''மா..து..ரி!''

''ச்சீ... உன் வாயால என் பேரை சொல்லாதே! நீ இப்படியொரு எண்ணத்தோட தான் என்னோட பழகறேன்னு ஆரம்பத்திலேயே தெரிஞ்சிருந்தா... உன் காத்துக்கூட என் மேல பட விட்டிருக்க மாட்டேன். ஃப்ரெண்ட்லியா பேசிப் பழகினா படுக்க கூப்பிட்ருவியா? என் புருஷன் தராத எந்த சுகத்தை நீ புதுசா தந்திடப் போறே.. ராஸ்கல்! கை நீட்டி சம்பளம் வாங்கினா... உன் கையிலே வந்து விழுந்துடுவாள்னு தப்புக் கணக்கு போடாதே! என்னை மாதிரிப் பொண்ணுங்க வயித்துப் பசியை தீர்த்துக்கறதுக்காகத் தான் வேலைக்கு வர்றாங்களேத் தவிர உடல் பசியைத் தீர்த்துக்கறதுக்காக அல்ல!''

''.......''

''ஏழேழு ஜென்மத்துக்கும் என் புருஷன் தான் கணவனா வரணும்னு தினமும் கடவுள்கிட்டே வரம் கேட்கிறவ நான்! அப்பேர்பட்ட அருமையான புருஷன் இருக்கிறப்ப.. கேவலம் பணத்துக்கு ஆசைப்பட்டு உனக்கு முந்தானையை விரிப்பேன்னு எப்படி முடிவு பண்ணினே? இப்பதான் புரியுது. உன்னை பத்தி நல்ல அபிப்ராயம் வரணும்ங்கறதுக்காக என்கிட்டே நல்லவன் மாதிரி நடிச்சிருக்கே...அஃபிஷியல் மேட்டர்னு பொய் சொல்லி என்னை இங்கே வரவழைச்சி இருக்கே. அப்படித்தானே?''

''போதும்...போதும்... ஓவரா டயலாக் பேசாதே! இங்கே கைதட்ட ஆளில்லே! இதோ பார்! நான் நினைச்சதை எதையும் அடையாம விட்டதில்லே. எனக்கு ஓட ஓட விரட்டி, சேலையை கிழிச்சு, ப்ளவுசை கிழிச்சி ரேப் பண்றதெல்லாம் பிடிக்காது. இதோ பார் மாதுரி! போலித்தனமான வீம்பையெல்லாம் உதறி எறிஞ்சிட்டு என் விருப்பப்படி நடந்துக்க...!'' அவளை மிக நெருங்கினான்.

''ஒரு ஸ்டெப்...இன்னும் ஒரு ஸ்டெப் எடுத்து வச்சாக்கூட நான் சும்மாயிருக்க மாட்டேன். என்மேல உன் சுண்டு விரல் பட்டாக்கூட நாறடிச்சிடுவேன்.

பத்திரிகையில சந்தி சிரிக்க வச்சிடுவேன். தேவைப்பட்டா உன்னைக் கொல்லவும் நான் தயங்கமாட்டேன்!'' கண்கள் விரிய அவள் பேசியதைப் பார்க்கவே அச்சமாக இருந்தது.

இவள் செய்தாலும் செய்வாள் என்பதைப் புரிந்துக் கொண்ட ராகேஷ் பின்னால் நகர்ந்து போனான்.

''ஸாரி...மாதுரி...வெரி ஸாரி! எல்லாப் பொண்ணுங்களையும் போல உங்களையும் தப்பா எடைப் போட்டுட்டேன். இங்கே நடந்ததை மறந்திடுங்க. சத்தியமா இனி உங்களை இந்த எண்ணத்தோட அணுக மாட்டேன். மனுஷன் தவறு செய்யறது இயல்பு. இது என்னோட வீக்னஸ்! இனி இப்படி நடந்துக்க மாட்டேன். எல்லாத்தையும் மறந்துட்டு இங்கேர்ந்து போயிடுங்க!'' கையெடுத்து கும்பிட்டு கேட்டான்.

அதற்கு மேல் மாதுரியால் என்ன பேசமுடியும்? அவனை ஏற இறங்க முறைத்து விட்டு வெளியேறினாள்.

போகும் அவளை நயவஞ்சகப் பார்வை பார்த்தான்.

'என் பேரை நாறடிப்பியா? போடி... போ! உன்னை நான் எப்படி நாறடிக்கிறேன் பார்! ஏழேழு ஜென்மத்துக்கும் உன் புருஷனே கணவனா வரணுமா? அவ்வளவு ஆசை வச்சிருக்கானா உன்மேல? இந்த ஜென்மத்திலேயே உங்க ரெண்டு பேரையும் பிரிக்கலே... நான் ராகேஷ் இல்லேடி!' சபதம் செய்து கொண்டான்.

## 14

விக்ரமனுக்கு தலையை வலிப்பது போலிருந்தது. வழக்கம் போல் வரும் கடிதத்துடன், புதியதாய் இன்னொரு கடிதம் பெயரிடப்படாமல் வந்திருந்தது. அதுவும் மாதுரியின் கேரக்டரைப் பற்றி மோசமாக விமர்சித்து எழுதப்பட்டிருந்தது.

'இது யார் புதுசா?' தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார்.

அதற்கடுத்த வாரம் ஷாலினியின் பிறந்தநாள் வந்தது.

சற்று முன்னதாகவே வீட்டிற்கு வந்து விட்டிருந்தாள் மாதுரி.

ஷாலினியின் பெயர் பொறித்த பெரிய பர்த்டே கேக்கை மாதுரிதான் வாங்கி வந்திருந்தாள்.

கேக்கை வெட்டி முதல் துண்டை அப்பாவிற்கு ஊட்டினாள் ஷாலினி. அடுத்து தனக்கு ஊட்டுவாள் என்று எதிர்பார்த்தாள் மாதுரி. ஆனால், அடுத்து கைலாஷ், அதற்கடுத்து பிரேம், சாருலதா என்று ஊட்டினாளேயொழிய மாதுரிக்கு தரவில்லை.

மாதுரியின் கண்கள் கலங்க ஆரம்பித்தது.





விக்கிரமனுக்கோ சங்கடமாகி விட்டது.

''ஷாலு... மம்மிக்கு கேக் கொடு!'' என்றார் விக்கிரமன்.

ஷாலினியோ அமைதியாய் இருந்தாள்.

''பரவாயில்லேங்க... இட்ஸ் ஓக்கே...'' என்றாள் தன் மாற்றத்தை விழுங்கியபடி.

சாருலதாவுக்கோ ஏகப்பட்ட சந்தோஷம்.

'உன் குழந்தையை எப்படி மாத்தி வச்சிருக்கேன் பார்த்தியா?' என்று நோக்கினாள்.

சுவற்றை வெறித்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள் மாதுரி. விக்கிரமன் அவள் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

''என்னம்மா... தூக்கம் வரலியா?''

''வரலீங்க!''

''மனசை லேசா வச்சுக்க... படுத்ததும் தூக்கம் வரும்!''

''அப்ப உங்க மனசிலேயும் பாரம் இருக்குதுன்னு சொல்லுங்க...!''

''என்ன சொல்றே மாது?''

''நானும் கொஞ்ச நாளா கவனிச்சிட்டுதான் இருக்கிறேன். ரெண்டு மணியானாக்கூட நீங்க தூங்கறதில்லே! ஏங்க? உடம்புக்கு முடியலியா? இல்லே மனசுக்கா?''

''அ... அது வந்து! ஒன்னுமில்லே மாது! சிலசமயம் பகல்ல தூங்கிடறதால... நைட்ல தூக்கம் வரமாட்டேங்குது! ஆமா.. நீ ஏன் தூங்கலே?''

''மனசு சரியில்லேங்க!''

''என்னம்மா?'' என்றார் வாத்சல்யமாய்... தலையை தடவி மார்பில் சாய்த்துக் கொண்டு.

''என் குழந்தைங்க என்னை விட்டு ரொம்ப தூரம் விலகிப் போய்ட்ட மாதிரி... ரொம்ப கஷ்டமாயிருக்குங்க!''

''சேச்சே... சின்னக்குழந்தைங்கயில்லையா? அதனால அவங்களுக்கு உன்னோட சிரமம் புரிய நாளாகும். நீ அவங்களுக்காகத்தான் நான் முழுக்க உழைக்கிறேன்னு தெரியறப்ப... உனக்கு கோவில் கட்டி கும்பிடுவாங்க மாது!''

''எனக்கு அவ்வளவு பேராசையில்லைங்க! அம்மான்னு வாய் நிறைய அன்பா கூப்பிட்டா... அதுவே போதும்!''

''எல்லாம் சீக்கிரம் சரியாப் போய்டும். கவலைப்படாதே மாது...!''

''கொடுக்க மறந்திட்டேனே... ஒரு நிமிஷம் இருங்க...'' என்றவள் தன் ஹேண்ட்பேகை திறந்து பணத்தை எடுத்து அவரிடம் தந்தாள்.

''என்னோட இந்த மாச சம்பளப் பணம்!''

விக்கிரமன் வாங்கிக் கொண்டார்.

''நான் சம்பாதிச்சது இந்தப் பணத்தை மட்டுமல்ல... என் குழந்தைகளோட வெறுப்பையும் தான்'' என்றாள் குரலடைக்க.

''எல்லாப் பிரச்னைக்கும் ஒரு முடிவு உண்டு மாது! கவலைப்படாதே!'' என்றார் நிதானமாக.

''என்ன அபூர்வா... நீ ஏன் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே? உன்னை கான்பூருக்கு டிரான்ஸ்பர் பண்ணியிருக்காங்களா?''

''ஆமாம்!'' என்றாள் கலங்கிய கண்களுடன்.

''இந்த டிரான்ஸ்பரை கேன்சல் பண்ண முடியாதா?''

''முடியும்... இன்னைக்கே முடியும். ஆனா, அதுக்காக நான் ஒரு பெரிய விலையைத் தரணும்!''

''என்ன சொல்றே அபூர்வா?''

''ஆமாம் மாது! நாங்க ஏழைதான். அதுக்காக மானத்தை வித்து வாழ நினைக்க மாட்டோம். எம்.டி.யை நான் கொஞ்சம் அடிச்சேன். அது ரசிப்புத் தன்மை. அவ்வளவு தான். ஆனா, அவரோட மனசு அசிங்கமாயிருக்கு மாது! நீயும் கொஞ்சம் கவனமாய் இருந்துக்க...''

''புரியும்படி சொல்லு!''

''எம்.டி... என்னை... என்னைக் கேட்கிறார். அப்படிப்பட்ட பொண்ணு நானில்லேன்னு மறுத்ததுக்கு தான் இந்த கான்பூர் டிரான்ஸ்பர்!''

''அ...பூ...ர்...வா!'' என்றாள் மனம் பொறுக்காமல்.

''பெண்கள் சம்பாதிக்கணும்னு படிதாண்டி வந்துட்டாலே இந்த மாதிரி சங்கடங்களை ஃபேஸ் பண்ணித்தான் ஆகணும்னு ஆகிப் போச்சு! எதிர் கொள்ள முடியாம நெருப்புன்னு தெரிஞ்சும் விழுந்து தொலைஞ்சு போறவிட்டில்பூச்சிகளும் இருக்காங்க. எதிர் கொள்றதினால தொலைதூரம் பந்தாடப்படற என்னைப் போன்றவங்களும் இருக்கத்தான் செய்யறாங்க... இல்லையா மாது?''

''எப்படி அபூர்வா.. சகிச்சி எடுத்துக்கறே?''

''வேற வழி? அழுது புரண்டா... காரியம் சாதகமாகிடுமா? கண்ணீர் தான் வேஸ்ட்!''

''புது ஊரு, அந்நிய மொழி! நீ பரவாயில்லே.. சமாளிச்சிடுவே... உன் குடும்பம் சமாளிக்குமா?''

''இல்லே மாது! அம்மா உடம்பு பயணத்தை தாங்காது. அம்மாவை முதியோர் இல்லத்திலேயும், தங்கச்சிகளை ஹாஸ்டல்லேயும் சேர்த்து விட்டுதான் போவேன். தேவையான பணத்தை நான் அனுப்பிடுவேன். பெரியவளுக்கு கல்யாணம் பண்ணணும். நடுவிலே லீவு போட்டுட்டு வருவேன். மா

உன்னை நம்பி இவங்களை விட்டுட்டு போறேன். அப்பப்ப அம்மாவையும், தங்கச்சிங்களையும் போய் பார்க்கிறியா... ப்ளீஸ்...!'' என்றாள் அமுங்கிய குரலில்.

''நீ... சொல்லணுமா அபூர்வா? உன் இடத்திலே நான் இருக்கிறேன். நீ கவலைப்படாம போய் வா! நல்லவங்களுக்குதான் சோதனைகளும், வேதனைகளும் அதிகமா வரும். ஆனா, அதுவே நிரந்தரமல்ல அபூர்வா. இங்கே மறைகிற சூரியன், எங்கோ உலகின் மறு கோடியில் உதயமாகிறது என்பது எவ்வளவு உண்மையோ, அந்தளவு உன் கஷ்டங்கள் மறைந்து நிரந்தர சந்தோஷம் உதயமாகப் போகிறதும் நிஜம்! உன்னோட சூழ்நிலையில வேறொரு பெண்ணாயிருந்தா... பணிஞ்சுப் போயிருப்பா! ஆனா, நீ பேரில் மட்டுமல்ல... நிஜமாகவே அபூர்வமானப் பெண்தான்! உன் பயணம் புனிதமானது அபூர்வா! சங்கடங்களை உதறி எறிஞ்சிட்டு சந்தோஷமாய் போய் வா! உன் குடும்பத்தை நான் பார்த்துக்கறேன்!''

''எல்லாத்தையும் நீ பார்த்துப்பே... அந்த நம்பிக்கை எனக்கிருக்கு. ஆனா, உன்னை எப்படி மாது நான் பார்க்காம இருப்பேன்?'' விசும்பியழுதபடி அவளை கட்டியணைத்துக் கொண்டாள் அபூர்வா.

மாதுரியும் உடைந்து போனாள். கண்களிலும் அணை உடைப்பெடுத்துக் கொண்டது.

''**நா**ன் ஒரு வாரம் லீவுல ஊருக்குப் போகிறேன் மேடம். என்னோட ஃபைல்களையும்... நீங்க...'' என்று இழுத்தார் மானேஜர் லோகநாதன்.

''அதுக்கென்ன சார்! நீங்க போய் வாங்க... நீங்க வர்றவரைக்கும் உங்க வேலையும் சேர்த்து நான் பார்த்துக்கறேன்'' என்றாள் மாதுரி.

''தாங்க்ஸ் மேடம்!'' என்றார் கைகூப்பியபடி.

''**மே**டம்... எம்.டி. கூப்பிடறார்!''

பியூன் முருகன் வந்தழைத்தான்.

''நீ போ... நான் வர்றேன்!''

அடுத்த நிமிடம் மாதுரி ராகேஷின் அறையில் இருந்தாள்.

''வாங்க!'' என்றான் ராகேஷ் தலைகுனிந்தபடி. அன்றைய சம்பவத்திற்கு பிறகு அவன் தன்னை நிமிர்ந்துக் கூட பார்ப்பதில்லை என்று தனக்குள் கர்வப்பட்டுக் கொண்டிருந்தாள் மாதுரி.

ஆனால், அந்த புலி பதுங்கியது பயத்தினால் அல்ல... பாய்வதற்காகத்தான் என்று பாவம் அவளுக்குத் தெரியாது. அதனாலேயே அவனைப் பற்றிய பயம் சிறிதும் இன்... அலுவலகப் பணிகளில் தன்னை மூழ்கடித்து... கொண்டாள். அலுவலக சம்பந்தப்பட்ட பேச்சை... தவிர அவனும் அநாவசியமாய் ஒரு வார்த்தை... பேசுவதில்லை. அவன் முழுக்க திருந்... விட்டான் என்றே நம்பினாள்.

''அந்த எஸ்.கே. எண்டர்பிரைசஸ்... காண்ட்ராக்ட் ஃபைலை ஹெட் ஆபீஸ்க்... அனுப்பியாச்சா மேடம்?''

''ஆச்சு சார்!''

''அப்புறம் புருனேலேர்ந்து நமக்கு ஒரு... காண்ட்ராக்ட் கிடைச்சதல்லவா?''

''ஆமாம்!''

''அவங்களை நாம் மீட்... பண்ணப்போறோம்!''

''....''

''எப்பவும் மிஸ்டர் லோகநாதன்தான் கூட வருவார். அவர் இப்ப இல்லே! அது... சம்பந்தப்பட்ட ஃபைல்லெல்லாம் இப்ப... நீங்கதான் பார்த்துக்கறீங்க... இல்லையா? சோ... அக்ரிமெண்ட் போடறப்ப நீங்க இருக்க... வேண்டியது அவசியம். இதை நான் சொல்லித்... தெரிய வேண்டாம் என்று நினைக்கிறேன்!''

''யெஸ்...!'' என்றாள் சன்னமாக.

''மீட்டிங் பெங்களூர்ல...''

''சார்...!''

''இது என்னோட முடிவல்ல! புருனே பார்ட்டி அவங்களாகவே இடத்தை ஃபிக்ஸ் பண்ணிட்டு இப்பதான் கன்ஃபார்ம் பண்ணினாங்க. நாளன்னிக்கு ரெடியா இருங்க.''

''சா...ர்!'' என்றாள் தயக்கமாக.

''ப்ளீஸ் மேடம்! எனக்கு நிறைய வேலையிருக்கு. பெரிய காண்ட்ராக்ட் இது! மிஸ் பண்ணிடக் கூடாது. ஆக வேண்டிய வேலையைப் பாருங்க. உங்களுக்கு பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்ல டிக்கட் ரிசர்வ் பண்ணியாச்சு! ப்ளீஸ்... யூ மே கோ நவ்!'' என்றான் அலறிய போனை எடுத்து காதிற்கு கொடுத்து.

பெருமூச்சுடன் அகன்றாள்.

'இவனுடன் பெங்களூர் போவதா?'

'ஏன் பயப்படுகிறாய்? உன்னைமீறி என்ன நடந்துவிடப் போகிறது? யாருக்கும் தெரியாமல் போகப் போவதில்லையே? எல்லோருக்கும் தெரிந்துதானே போகப்போகிறாய்? எதுவும் நடக்காது பயப்படாமல் போய் வா!'

'பயமா... எனக்கா... நெவர்?!'

மாதுரி... தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

**வீ**டு மொத்தமும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. இரண்டு நாட்களாய் கைலாஷிற்கு ...ச்சல். டாக்டர் இன்ஜெக்ஷன், ...லெட்டெல்லாம் கொடுத்தும் கூட ...கவில்லை. விக்கிரமன் அவன் அருகிலேயே ...ந்திருந்தார். பிரேம் கூட ஆபீஸிற்கு லீவு ...டு விட்டிருந்தான்.

மாதுரி தவித்துப் போனாள். ஐஸ் வாட்டரில் ...ணியை நனைத்து மாற்றி மாற்றி நெற்றியில் ...ட்டுக் கொண்டிருந்தாள்.

''உனக்கு ட்ரெய்னுக்கு நேரமாய்டுச்சே ...து! நீ கிளம்பும்மா!''

''எப்படிங்க.... குழந்தை இப்படி ...ருக்கிறப்ப...''

''அதானே... ட்ரிப்பை கான்சல் பண்ணிட்டு ...ங்கேயே இரு!'' என்றான் பிரேம்.

''கான்சல் பண்ணிடலாம்னு நாம ஈஸியா ...ால்லிடலாம். ஆனா, இது பெரிய காண்ட்ராக்ட் ...ஷயம். அதுவும் ஃபாரின் ஆஃபர் கிடைக்கிறது ...ரிய விஷயம். மாதுரியால அவ வேலை ...ர்க்கிற கம்பெனிக்கு பிரச்சினை ...டக்கூடாது பிரேம்! இங்கே பார் மாது! ...கலாஷுக்கு ஒண்ணுமில்லே! ஃபீவர் தான். ...ல்லாம் சரியாகிடும். நான் தான் பக்கத்தில் ...ருக்கேனே... நீ போய் வாம்மா!''

''முடியலீங்க... இவனை இப்படி ...ட்டுட்டு போக மனசு வரலீங்க!''

''ப்ளீஸ்ம்மா! நான்தான் பார்த்துக்கறேன்னு ...சால்றேனே... நேரமாகுது... டிரெய்னை மிஸ் ...ண்ணிடப் போறே!''

ரொம்பவும் வற்புறுத்திதான் அவளை அனுப்பி வைத்தார் விக்கிரமன்.

## 15

**ஆ**ட்டோ பிடித்து ரெயில்வே ஸ்டேஷனை நோக்கி விரைந்துச் சென்றாள். ராகேஷ் விமானத்தில் பெங்களூர் புறப்படுவதாக ஏற்பாடு.

'நல்லவேளை... ரெயிலில் என்னுடன் வரவில்லை' என்று சந்தோஷப்பட்டாள்.

ஆட்டோவுக்கு பணம் கொடுத்துவிட்டு உள்ளே... செல்ல முற்பட்டவளை... ''மேடம்'' என்ற பழகிய குரல் அழைத்தது.

திரும்பினாள்.

பியூன் முருகன்!

''நீங்களா... என்ன இங்கே?''

''எம்.டி. சார் அனுப்பினாரும்மா!''

''என்ன விஷயம்?''

''சாருக்கு இப்பதான் போன்ல தகவல் வந்ததாம். மீட்டிங் பெங்களூர்ல இல்லையாம். ஹைதராபாத்லேயாம்''

''என்னது?''

''ஆமாங்க மேடம்! பெங்களூருக்கு ரிசர்வ் பண்ணியிருந்த டிக்கட்டை கேன்சல் பண்ணிட்டேன். நீங்க இப்ப ஹைதராபாத்துக்கு ஃப்ளைட்ல தான் போறீங்க. அவகாசம் அதிகமில்லை. உடனே ஏர்போர்ட்டுக்கு கூட்டிட்டு வரணும்னு சாரோட உத்தரவு!''

''என்ன முருகன் இது? திடீர்னு பெங்களூருக்கு போகலே... ஹைதராபாத்துக்கு தான் போகணும்னு சொன்னா எப்படி? எனக்கு முன்னாடியே சொல்ல வேண்டாமா?''

''இது சாரோட தப்பில்லேம்மா! திடீர்னு இப்பதான் தகவல் வந்தது. அப்ப... நான் கூட சார் பக்கத்திலே தான் இருந்தேன்!'' நம்புகிற விதமாக பேசினான் முருகன்.

''சரி... சரி... நான் என் வீட்டுக்கு போன் பண்ணி சொல்லிட்டு வந்திடறேன்!''

''ஐயோ... மேடம்! அதுக்கெல்லாம் நேரம் இல்லீங்க. ப்ளைட்டுக்கு டைமாய்டுச்சு! நீங்க கிளம்புங்க. கார் கொண்டு வந்திருக்கேன். நான் உங்க வீட்டுக்கு தகவல் சொல்லிடறேன்ம்மா!''

யோசித்த மாதுரி, ''சரி... மறக்காம சொல்லிடு'' என்று கூறிவிட்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

நிஜமாகவே மீட்டிங் நடப்பதென்னமோ ஹைதராபாத்தில்தான். இந்த தகவல் ராகேஷுக்கு ஒரு வாரம் முன்பே தெரியும். வேண்டுமென்றேதான் அவன் பெங்களூர் என்றான்.

முருகனும் அவள் வீட்டிற்கு எந்த தகவலும் தரவில்லை.

**கை**லாஷிற்கு காய்ச்சல் இறங்கியிருந்தது. நிம்மதியாய் மூச்சு விட்டார் விக்கிரமன்.

மறுநாளே திரும்பி விடுவதாக சொல்லி விட்டு சென்ற மாதுரி இரண்டு நாளாகியும் வராமல் போகவே அவள் தங்குவதாக சொல்லிவிட்டு சென்ற ஹோட்டலுக்கு போன் பண்ணி கேட்டபோது, ''அந்தப் பெயரில் யாரும் தங்கியிருக்கவில்லை'' என்ற தகவல் தான் வந்தது.

குழம்பிப் போனார் விக்கிரமன்.

''என்ன மாமா? அக்கா இன்னும் வரலே?''

''ஏதாவது முக்கிய வேலையாயிருக்கும். வந்திடுவா! அவ என்ன சின்னக்குழந்தையா?''

''சரி... வர லேட்டாகும்னு போனாவது பண்ணலாமில்லையா?'' என்றாள் சாருலதா.

''அதானே!''

''அவ சூழ்நிலை எப்படியோ? ஒரு வேளை... அவ இருக்கிற இடத்துல எஸ்.டி.டி. கனெக்ஷ...

இருக்கிருக்காது''

''இப்படியொரு டம்மி இருக்கிறதாலதான் உங்கக்கா... ஆட்டம் போட்டுக்கிட்டிருக்கா!'' பிரேம் காதிற்கு மட்டும் கேட்கும்படி கிசுகிசுத்தான்.

அதே நேரத்தில்... போன் அலறியது.

பிரேம் தான் எடுத்தான்.

''ஹலோ... இது மிஸஸ்... மாதுரி வீடுதானே?'' யாரோஒரு பெண்குரல் விசாரித்தது.

''யெஸ்... நீங்க யாரு?''

''பேரைச் சொல்லிக்க விரும்பலே. அது அவசியமும் இல்லே. நான் மாதுரியோட வொர்க் பண்றேன்.''

''மாதுரி இப்ப வீட்லே இல்லே!''

''தெரியும்... ஹைதராபாத் போயிருக்காங்க!''

''ஹைதராபாத்தா? இல்லை மேடம். பெங்களூர் போயிருக்காங்க!''

''ஓஹோ... அப்படின்னு சொல்லிட்டு போயிருக்காங்களா?''

''என்ன சொல்றீங்க நீங்க?'' என்ற பிரேம் சைகையில் விக்கிரமனிடம் அடுத்த அறையில் இருந்த பேரலல் லைனில் ஒட்டுக் கேட்கும்படி கூற... அவரும் எடுத்து கேட்டார்.

''ஆமாம்! மீட்டிங் ஹைதராபாத்லதான். எதுக்காக உங்க வீட்டிலே பெங்களூருக்கு போறதா பொய் சொல்லணும்?''

''....?''

''என்னா... மாதுரி எம்.டி.யோட பே... கும்மாளத்தை நீங்க யாரும் வேவு பார்த்... கூடறதில்லையா?''

''ஸ்டாப் இட்!'' என்றலறினான் பிரே...

''என் வாயை மூடறது இருக்கட்டும்... விஷயம் வெளியிலே பரவிட்டா... ஊர் வா... எப்படி மூடறதுன்னு முதல்ல யோசிங்க!''

''நீங்க யாருன்னு முதல்ல சொல்லுங்க...''

''அவசியமில்லாத கேள்வி!''

''அப்ப... நீங்க சொல்றதை எப்... நம்பறது?''

''ஓக்கே... நான் இப்ப... எம்.டி.... மாதுரியும் தங்கியிருக்கிற... அதுவும் ஓ... அறையிலே தங்கியிருக்கிற ஹைதராபா... ஹோட்டல் ப்ளு லாகூனோட போன் நம்... தர்றேன். நீங்களே போன் பண்ணி நான் சொன்ன...

...மா, பொய்யான்னு தெரிஞ்சுக்குங்க...!'' என்ற ...த்ரி ஹோட்டல் போன் நம்பரை கூறிவிட்டு ...டென ரிசீவரை வைத்து விட்டாள்.

பிரேம் விக்கிரமனையே பார்த்துக் ...ண்டிருந்தான்.

''இப்ப என்ன சொல்றீங்க மாமா?''

''எதுக்கு?''

''இப்ப போன்ல பேசினதையெல்லாம் கேட்டீங்க இல்லே!''

''ஆமாம்!''

''அதுக்கு தான் என்ன சொல்றீங்கன்னு கேக்கறேன்!''

''என்ன சொல்லணும்னு நினைக்கிறே?''

''அக்காவை இப்படியே விட்டா... குடும்ப மானம் சந்தி சிரிச்சிடும்!''

''ஏன் பிரேம்... எவளோ முகம் தெரியாத ஒருத்தி சொன்னதை நம்பற அளவு... நீ உங்க அக்காவை நம்பலே இல்லே!''

''அப்ப இன்னும் கூட நீங்க அக்காவை நம்பறீங்க!''

''ஆமாம்!''

''சே... என்ன மனுஷன் நீங்க? ஓக்கே... அந்த லேடி கொடுத்த நம்பருக்கு போன் பண்ணினா... உண்மை தெரிஞ்சிடப்போகுது'' என்றவன் ஹைதராபாத்



ஹோட்டலுக்கு போன் பண்ணினான்.

**மா**துரி இருதலை கொள்ளி எறும்பாய் தவித்தாள். இன்னும் சிறிது நேரத்தில் வந்த வேலை முடிந்து விடும். புருஷனை பார்ட்டி கிளம்பி விட்டார்கள். ராகேஷ் அவர்களை வாசல்வரை வழியனுப்ப சென்றிருக்கிறான்.

'சே... என்ன ஹோட்டல் இது? எஸ்.டி.டி. போன் வசதி இல்லாத ஹோட்டல். கைலாஷிற்கு எப்படி இருக்கிறதோ? போன் பண்ணி தெரிஞ்சுக்கலாம்னாக் கூட முடியலையே!' கைகளை பிசைந்தாள்.

ராகேஷ் அவர்களை அனுப்பி விட்டு அறையினுள் நுழையவும், போன் அலறவும் சரியாய் இருந்தது.

மாதுரி தான் எடுத்தாள்.

''ஹலோ...''

எதிர்முனை அமைதியாய் இருக்க... மறுப்படியும் ''ஹலோ'' என்றாள்.

ம்ஹூம்... சப்தமே எழவில்லை.

மாதுரி ''ஹலோ, ஹலோ'' என்று தொடர்ந்து கத்தினாள்.

ராகேஷ் அவளிடமிருந்து ரிசீவரை வாங்கி ''ஹலோ!'' என்றான்.

அதே அமைதி தொடர... ராகேஷிற்கு புரிந்து போனது.

'இது... மாதுரி வீட்டிலிருந்து தான் வந்திருக்கிறது. நம் திட்டப்படி எல்லாமே நடக்கிறது' அவன் மனம் துள்ளியது.

போனை வைத்து விட்டான்.

''ஓக்கே... ரூம் வெகேட் பண்ணியாச்சு... கிளம்பலாமா?'' என்றான்.

அதற்கென்றே காத்திருந்தவளாய் எழுந்தாள்.

அடுத்த பத்தாவது நிமிடம் ஏர்போர்ட் நோக்கி டாக்ஸியில் பயணித்தார்கள்.

சிறிது தூரம் சென்றிருக்கும்.

ராகேஷ் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான். மாதுரி அவனை விநோதமாய் பார்த்தாள்.

''என்ன மாதுரி பார்க்கிறே? பைத்தியக்காரன் மாதிரி சிரிக்கிறானே என்றா? நோ... நான் பைத்தியக்காரனில்லே... நான் எவ்வளவு புத்திசாலின்னு நீ சென்னை போனதும் புரிஞ்சப்பே...!''

''...?!''

''என்ன புரியலியா? அன்னைக்கு என்ன சொன்னே? என் சுண்டு விரல் உன் மேலப்பட்டாக் கூட நாறடிச்சிடுவேன்னு சபதம் போட்டேயில்லே! ஆனா, என் சுண்டு விரல் கூட படாம இன்னைக்கு உன்னை நாறடிச்சிட்டேன்!''

''வாட்?''

''என்னங்கறதை வீட்டுக்குப் போ... தன்னால புரிஞ்சப்பே... என்னை யாருன்னு நினைச்சே ராகேஷ்! நினைச்சதை சாதிக்கிற... எனக்கு கிடைக்காத எதுவும் மத்தவங்க... அனுபவிக்க விடமாட்டேன்போ... உன் புருஷ... நீ போனதும் கழுத்தைப் பிடிச்சி வெளி... தள்ளுவான் போ...'' ஏளனமாய் அவன் பே... கொண்டேப் போக... மாதுரி பேச வாய் வரா... அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 16

**சூ**ரியன் கிழக்கு சுவற்றைப் ப... எம்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முருகனுக்கு படுக்கையை விட்டு எழ... மனமின்றி புரண்டு புரண்டு படுத்தான்.

எம்.டி. கணக்குப்பார்க்காமல் அள்ளி... கொடுத்த நூறு ரூபாய் நோட்டுகளின் உபயத்த... காஸ்ட்லியான சரக்கை சாப்பிடும் பாக்கிய... கிடைத்தது. இன்னமும் மூச்சில் முன்தின... சாப்பிட்ட சீமை சரக்கின் வாசம்.

'எம்.டி. தான் ஊரிலே இல்லையே... அவசரப்படாமல் மெல்லவே ஆபீஸ்... கிளம்பலாம்!'

கண்களை மூடியபடி விழித்திருந்தான்.

'மகராசன் புண்ணியத்தில் என் மகளுக்... அஞ்சு பவுன் வரை சேர்த்து விட்டேன். ஆ... எங்கே செல்வி? விடியலிலேயே எழு... விடுபவளாச்சே? அவள் கொலுசு சப்... கேட்டுதானே ஒவ்வொரு நாளும் விழிப்பே... என்ன பண்றா இன்னும்?'

சோம்பலைப்பட்டு எழுந்தமர்ந்த முருகன்... சிறிய வீட்டை கண்களால் துழாவினான். ... நிசப்தமாயிருந்தது. அவன் மனைவி ஒரு வாரம... ஊரில் இல்லை. அப்பனுக்கு உடம்பு சரியில்ல... என்று சித்தூர் போயிருக்கிறாள். செல்விதா... வீட்டை பொறுப்பாய் கவனித்துக் கொண்டா...

செல்வி படுத்திருந்த பா... தலையணையும் கூட சுருட்டி வைக்கப்படா... அப்படியே கிடந்தது.

வியப்பாய் எழுந்தான் முருகன்.

''என்னாச்சு இந்த பொண்ணுக்கு?''

''செல்வி... செல்வி...''

''...''

''செல்வி...''

''...''

''பாத்ரூம் போயிருப்பா...'' தன் கேள்விக்... ...னே பதில் கூறியபடி வாசலைத் திறந்து வெளியேற முற்பட்ட போதுதான்.. கண்ணோரம் ...த்தியாசத்தை உணர்ந்தான். பெரிய சுவற்றின் ...டுப்பின் பின்னே சமையலறை!

திரும்பிப்பார்த்த முருகனுக்கு... ...திகிரத்தில் கண்கள் பிதுங்கி, நாக்கு வெளியே ...ள்ளி தொங்கிக் கொண்டிருந்த செல்வியின் அகோர முகம் கண்ணில் பட... அலறக் கூட முடியாமல் அலறினான் முருகன்.

''**இ**ப்ப என்ன சொல்றீங்க மாமா? ஹோட்டல்ல ஒரே ரூம்ல அக்காவும், எம்.டி.யும் இருக்கிறது ஊர்ஜிதமாயிடுச்சில்லையா?''

''......''

''ஏன் இன்னும் வாயை மூடிக்கிட்டு இருக்கீங்க? அக்கா எப்படி போனாலும் பரவாயில்லே... ஆனா, மாசாமாசம் சம்பளம் வந்தா போதுமில்லே உங்களுக்கு!''

''என்னடா சொன்னே?'' ஆவேசமாய் நெருங்கி பிரேமை பளாரென அறைந்தார் விக்கிரமன்.

''நிறுத்துங்க... ஹோட்டல்ல கண்ட ஆம்பளைங்களோட தங்கிட்டு வர்ற உங்க பொண்டாட்டியை முதல்ல அடக்குங்க!'' சாருலதா கத்தினாள்.

''பேசாதே... நீ என் மாதுரியைப் பத்தி பேசாதே!''

''இதுக்கு மேல ஒரு நிமிஷம் இந்த வீட்லே இருந்தாக் கூட நமக்கு தான் அசிங்கம். கிளம்புங்க! நெருப்பில்லாமப் புகையுமா? எவனாவது தினசரி மெனக்கெட்டு பொய்யா லெட்டர் எழுதி அனுப்புவானா? இவருக்குத் தெரியும். பொண்டாட்டிய பத்தி எல்லாம் தெரிஞ்சும் அவ செய்யற தப்புகளை தலையாட்டி ஏத்துக்கற பொம்மை இவர். இவங்களோட நாம இருந்தா நமக்கு தான் கேவலம்... வாங்க போகலாம்!''

''போறதுக்கு முன்னாடி ஒரு நிமிஷம்...'' என்றார்.

'என்ன?' என்பதுபோல் பார்த்தனர்.

''என்னம்மா சொன்னே? நெருப்பில்லாமப் புகையாதா? அந்த நெருப்பை பத்தவச்சதே நீதானேம்மா!''

''வாட்?''

''என் மாதுரி மாதவி இல்லே... கண்ணகி! அது எனக்குத் தெரியும். எனக்கு தினசரி வந்த மொட்டைக் கடிதங்களை எழுதினது கிருஷ்ணன் இல்லே... சாருலதாங்கறதும் எனக்குத் தெரியும்!''

''என்னது?''

''அதிர்ச்சியா கேட்டுட்டா... தப்பை மறைச்சிடலாம்னு பார்க்கறியா? எதேச்சையா ஒரு நாள் உன்னோட ரூமுக்கு வந்தப்பதான் எனக்கு எழுதி போஸ்ட் பண்ண வச்சிருந்த லெட்டரைப் பார்த்தேன். அப்பத்தான் எனக்கு எல்லாமே புரிஞ்சது. ஏம்மா... நீயும் ஒரு பொண்ணுதானே? என் மாது உனக்கு என்னம்மா கெடுதல் பண்ணினா? எதுக்காக இப்படி ஒரு காரியம் பண்ணினே?''

சாருலதா பதில் கூறமுடியாமல் தலைகவிழ்ந்தாள். பிரேம் நம்ப முடியாத அதிர்ச்சியோடு மனைவியைப் பார்த்தான்.

''என் மாதுவைப் பத்தி படைச்சவனுக்கு அடுத்தபடியா எனக்கு மட்டும்தான் தெரியும். அவ கறந்தப்பாலை விட தூய்மையானவ! ஆபீஸ்லே நடக்கிற ஒவ்வொரு சம்பவத்தையும் என்கிட்டம் அப்பப்ப வந்து சொல்லிடுவா! எம்.டி. அவளுக்கு லிப்ட் கொடுத்தது, பாதிவழியிலே இறக்கி விட்டது மட்டுமல்ல... உங்களுக்கு தெரியாத இன்னொரு விஷயத்தையும் அவ என்கிட்டே சொன்னா. எம்.டி. அவகிட்டம் தவறாக நடக்க முயற்சி பண்ணினது, அதுக்கு அவள் அவனை மிரட்டிட்டு வந்தது எல்லாமே. இப்பக்கூட அவனோட ஊருக்குப் போக பயந்தா. நான் தான் அவளுக்கு தைரியம் சொல்லி அனுப்பினேன். உன்னை மீறி ஒண்ணும் நடக்காது. அவன் உன்னை ஒண்ணும் பண்ணமாட்டான். உன்னை வேற விதமா பழிவாங்குவான் அப்படின்னு.

எனக்கு சாருலதா அனுப்பின கடிதம் மட்டுமல்ல, எம்.டி. ராகேஷ் மூலமாகவும் மொட்டைக் கடிதம் வந்தது. பெங்களூருக்கு போறதா சொல்லிட்டு ஹைதராபாத்துக்கு கூட்டிக்கிட்டுப் போனதுக் கூட எம்.டி.யோட தந்திரம்னுதான் நான் நினைக்கிறேன். தாம்பத்யத்துக்கு அடிப்படை தேவை என்ன தெரியுமா பிரேம்? அன்புக் கூட அடுத்த பட்சம் தான். நம்பிக்கை தான் ஆணிவேர்! புருஷன், பொண்டாட்டியை எந்த சூழ்நிலையிலேயும் நம்பணும்!'' விக்கிரமன் இன்னும் பேசிக் கொண்டே போனார்.

பிரேமும் சாருலதாவும் திகைத்துப் போய் விட்டிருந்தனர்.

''என் மாதுவோட வருகைக்காக நான் காத்துக்கிட்டிருக்கேன். அவளுக்காக ஒரு பரிசு தர காத்துக்கிட்டிருக்கேன்...'' என்றார் ஆசையுடன்.

அதே நேரம்...

''ஐயா...'' என்று கதறியபடி ஓடிவந்தான் முருகன்.

''யாருப்பா நீ? திறந்திருக்கிற வீட்டுலே இப்படியா நுழையறது?'' சற்றே கோபமாய் கேட்டார் விக்கிரமன்.

''ஆமாங்கய்யா... நீங்க சொன்னாலும், சொல்லலேன்னாலும் நான் ஒரு நாய் தான். ராகேஷ்ங்கற தெருநாய்க்கு மாமா வேலை பார்த்த மோசமான நாய் தான். நான் மாதுரியம்மா

ஆபிஸ்லே பியூனா வேலை செய்யறவன்'' என்ற முருகனின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் வழிந்தது.

''சரி... நீ எதுக்காக இங்கே வந்தே?'' பிரேம் கண்கள் சுருங்கக் கேட்டான்.

''இந்த லட்டரைப் படிங்கய்யா!'' கசங்கிய தாளை நீட்டினான்.

வியப்பு மாறாமலே வாங்கிப் படித்தான் பிரேம்.

'அன்புள்ள அப்பா அம்மாவிற்கு!

செல்வி எழுதிக் கொள்வது!

என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு இந்த உலகில் வாழ விருப்பமில்லாமல்... இந்த தற்கொலை முடிவினை எடுக்கிறேன். என்னுடைய சாவிற்கு அப்பாவின் முதலாளி ராகேஷ்தான் காரணம்! நீங்கள் வியப்பது புரிகிறது. மொட்டைக்கும் முழங்காலுக்கும் முடிச்சி போடுகிறானே என்று நினைக்க வேண்டாம். அப்பாவிற்கு ஒருமுறை அலுவலகத்திற்கு சாப்பாடு கொண்டு போகும் போது... முதலாளியின் கண்களில் விழுந்தேன். எனக்கும் அவரைப் பிடித்திருந்தது. தனிமையில் சந்தித்தோம். என்னை கல்யாணம் செய்வதாகக் கூறி... என்னை சூறையாடி விட்டார். வயிற்றில் இப்போது மூன்று மாத சிசு. முதலாளியிடம் இதுபற்றி கூறியபோது தான் அவருடைய சுயரூபம் தெரிந்தது. என்னைக் கேவலமாக பேசி அனுப்பி விட்டார். என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இழக்கக் கூடாததை எல்லாம் இழந்துவிட்டேன். இனிநான் உயிருடன் வாழ்ந்து என்ன பயன்? ஆனால், அப்பா... உன் முதலாளியை நீ சும்மா விடாதே! பணத்தால் அவன் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கி விடலாம். ஆனால் நியாயத்தையும், தர்மத்தையும் விலை கொடுத்து வாங்கிட அனுமதிக்காதே! மானத்திற்கு பயந்து அவனைக் காட்டிக் கொடுக்காமல் எத்தனையோ பெண்கள் அவனால் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு முடிவை எடுத்தாக வேண்டும். அதற்கு என் உயிரை விலையாகத் தருகிறேன். இந்த கடித ஆதாரமே போதும்... உன் முதலாளியை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கித்தர! செய்வியாப்பா? உன் செல்வி கேட்டு நீ இதுவரை எதையும் மறுத்ததில்லை. கடைசியாய் கேட்கிறேன் நிறைவேற்றுவாய் தானே ராகேஷின் முகமூடியை கிழித்து இ... சமுதாயத்தில் அவ... நிஜ முகத்தை காட்டுவாய்தானேப்பா போகட்டுமா?

கண்ணீருடன்
செல்வி'

''பார்த்தீங்களாய்யா என் பொண்ணை இப்பா... எமனுக்கு கொடுத்திட்டேனய்யா! என் பொண்ணு மான... உள்ளவ. போய் சேர்ந்திட்டா! ஆனா, நான் இதுவரை இருந்த முருகன் வேற! இப்ப இருக்கி... முருகன் வேற! நான் அந்த ராகேஷை... விடமாட்டேன். குற்றம்ங்கற புற்றுல கை... விட்டா... தண்டனைங்கற பாம்பு கடிக்கத்தா... செய்யும்ங்கறது என் பொண்ணு எனக்கு... உணர்த்திட்டுப் போய்ட்டா! என் பொண்ணை... கரையேத்தணும்னு எத்தனையோ பெண்களை... கடல்ல தள்ளி விட்டுட்டேன். என் தப்பை... உணர்ந்திட்டேன். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு... தான் போய்க்கிட்டிருக்கேன். அதுக்கு... முன்னால... மாதுரி அம்மாவை அந்... ராஸ்கல்கிட்டேர்ந்து காப்பாத்தணும்னு தான்... ஓடிவந்தேன்!''

''என்ன சொல்றே நீ?'' விக்கிரமன் திடுக்கிட்டார்.

முருகன் நடந்த எல்லாவற்றையும் விளக்கி சொல்ல சொல்ல... பிரேமும் சாருலதாவும் விசும்பி... வெட்கி தலைகுனிந்து கண்ணீர் விட்டனர்.

விக்கிரமன் நிம்மதியாய் மூச்சு விட்டார்.

முருகன் கண்ணீரோடும், கடிதத்தோடும் போலீஸ் ஸ்டேஷன் நோக்கிச் சென்றான்.

உழைப்பு பிழைப்புக்காக மட்டுமல்லாமல் உண்மைக்காகவும் இருக்க வேண்டும். முருகனின் உழைப்பில் அன்பாய் உண்மையில்லாமல் போனதால் இந்த நிலைமை. பிறர் மனம் நோகச் செய்தால்... நாம் மனம் நொந்து அழிவோம்.

இதை முருகன் தெளிவுபட உணர்ந்து விட்டான்.

நெருப்பைப் புகை சூழ்ந்திருப்பது போலவும், கண்ணாடியில் கறை படிந்திருப்பது போலவும், கருவைக் கர்ப்பப்பை மூடிக் கொண்டிருப்பதுப் போலவும், உண்மையையும் தன் பொய்யால் மறைத்து விட திட்டம் போட்டான் ராகேஷ். இந்த மயக்க குணம் ...தேஷிடம் மட்டுமல்ல... உலகையே சூழ்ந்துக் ...ண்டதாகிருக்கிறது.

மாதுரியை பழிகொண்டு விட்ட மதையில் அன்றைய நாளை செலிபிரேட் ...ண்ண... மாதுரியை மட்டும் அனுப்பிவிட்டு ...வன் ஹைதராபாத்லேயே தங்கி விட்டான். ...நாள் கழித்து வருவதாக ஏற்பாடு.

மாதுரி விமானத்தில் கோழிக்குஞ்சாய் ஒடுங்கி கொண்டிருந்தாள்.

காரில் வரும் போது ராகேஷ் கத்தானமாய், தான் அவளை சாமர்த்தியமாய் திட்டம் போட்டு பழிவாங்கியதை சொல்லிக் கொண்டே வர... உடம்பிலுள்ள நீரெல்லாம் வார்வலிவேறி விட்டதுப் போலிருந்தது மாதுரிக்கு.

'கடவுளே... இவன் தகாத செயலால் என் ...ணவரிடம் நாம் குறைந்தவளாக ...ருவகப்படுத்தி விட்டானே! அவர் ...ம்பிவிட்டிருப்பாரோ? முருகா... காப்பாத்து. ...ன் தாம்பத்ய வாழ்க்கைக்கு எந்த இடையூறும் ...ற்படுத்தி விடாதே! காப்பாத்து.... காப்பாத்து!' ...ண்கள் மூடி பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

விமானம் சென்னையில் தரையிறங்கியது.

உடல் முழுக்க நடுக்கம் பரவ இறங்கினாள் மாதுரி.

லவுன்ச்சில்... நடந்து வந்த போது அதிர்ந்து போனாள்.

காரணம்... அங்கு விக்கிரமனும் இரு குழந்தைகளும் நின்றிருந்ததால்.

இவளைப் பார்த்ததும் அருகில் வந்தனர் மூவரும்.

மாதுரி கணவனை கண்டதும் கண் கலங்கி விசும்பினாள்.

''ஏய்... என்ன இது?''

''நா... நான்... அந்த ராகேஷ் என்னை... திட்டம் போட்டு... நீங்க... நீங்க... என்னை தப்பா...'' கோர்வையாய் சொல்லக் கூட முடியாமல் தடுமாறினாள்.

''ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் யுவர் செல்ஃப்!'' அன்பாய், ஆறுதலாய் அவள் தோளை அணைத்துத் தட்டிக் கொடுத்தார்.

''அப்ப...அப்ப... நீங்க என்னை நம்பறீங்களா?''

''ஐ நோ...அபவுட் மை வொய்ஃப்! நான் நம்பலேன்னா... வேற யார் நம்பறது? எனக்கு எல்லாமே தெரியும்! ரொம்ப டயர்டா தெரியறே... வா... முதல்ல வீட்டுக்குப் போய் பேசலாம்.''

மாதுரியின் முகம் தாமரையாய் மலர்ந்தது. சந்தோஷ நீரூற்று உள்ளுக்குள் குப்பென பொங்கியது.

சந்தோஷத்தில் சுற்றுப்புற சூழ்நிலைகளை மறந்து வாய்விட்டு அழுதாள்!

''ஏய்... என்னடா இது? எல்லோரும் பாக்கிறாங்க பார்! அழுறதை நிறுத்து மாது!''

அம்மா அழுவதை பார்த்து குழந்தைகள் இருவரும் கண்கலங்கினர்.

''மம்மி... ஏன் மம்மி அழறே?'' என்றாள் சைலாஜ்.

''அழாதே மம்மி... எனக்கும் அழுகையா வருது!'' என்றான் விம்மலோடு ஷாலினி.

மாதுரி அவர்களை வாரியணைத்து கொண்டாள்.

எந்த அன்புக்காக ஏங்கினாளோ... அது எதிர்பாராத விதமாக கிடைத்ததில் திக்குமுக்காடிப் போனாள்.

தொப்புள் கொடி பாசத்தை எந்த விச்சியினாலும் அறுத்து விட முடியாதல்லவா?

குழந்தைகளை முத்தமழையால் நிறைத்தாள். தாயின் கதகதப்பில் முகம் புதைத்துக் கொண்டனர் இருவரும். மாதுரி அழுதாள் மறுபடியும் சந்தோஷம் தாளாமல்.

''மாது... ப்ளீஸ்... கன்ட்ரோல் யுவர் செல்ஃப்!''

''எனக்கு... எனக்கு இந்த சந்தோஷம் எப்பவும் வேணும். எனக்கு வேணும்... என்னால என் குழந்தைகளை இனிமேலும் பிரிய முடியாது.''

''நீ கேக்கவேண்ணாலும் அந்த சந்தோஷத்தைத் தரவே காத்திருந்தேன் மாது. யெஸ்... நான் ஒரு நல்ல வேலைய தேடிக்கிட்டேன். ஒரு பெண் வேலைக்குப் போனா... அவமேல ஏதாவது பழியை போட்டு களங்கப்படுத்தலாமான்னு காத்துக்கிட்டிருக்கிற கூட்டம் ஒண்ணு இருக்கு. நீயும்... நானும் நல்லா புரிஞ்சுக்கிட்டதால... நல்லவேளை எந்த பிரச்சினையும் வந்ததில்லே. இதுவே வேற கணவன் மனைவியா இருந்திருந்தா... எப்பவோ பிரிஞ்சிருப்பாங்க. என் மாது இனியும் கஷ்டப்படக்கூடாது. வீடு போடறியோ, ரிஸைன் பண்றியோ... அது உன் விருப்பம்! இனி நம்ம குழந்தைகளோட... நீ சந்தோஷமா நிம்மதியா இருக்கலாம். இப்ப சந்தோஷம் தானே மாது?''

மாதுரி மகிழ்ச்சியில் பேச முடியாமல் நெகிழ்ந்து கணவனின் தோள்களில் சாய்ந்துக் கொண்டாள். அவள் முகம் முழு சந்திரனாய் பிரகாசித்தது.

சந்திரனுக்கு தனிப்பட்ட ஒளி என்று எதுவும் இல்லை. சூரியனுடைய ஒளியைப் பெற்று தான் அது பிரகாசிக்கிறது.

நல்ல கணவன் அமைந்து விட்டால்... ஒரு பெண் நிலவைப் போல் வாழ்நாள் முழுக்க பிரகாசித்துக் கொண்டிருப்பாள்.

முற்றும்

## ராணி மகாராணி!

**ராணி** என்பதை ஆங்கிலத்தில் 'குயின்' என்கிறோம். இப்பெயர் எப்படி ஏற்பட்டது தெரியுமா?

'குயின்' என்ற சொல் பழைய ஆங்கிலச் சொல்லான 'குவான்' என்பதில் இருந்து பிறந்தது. 'குவான்' என்றால் பயன் இல்லாத பெண் என்று அர்த்தமாகும். விசித்திரமான பொருள் இல்லையா?

-எஸ். தேவி, சென்னை.